www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

16 - 30 ஜூன் '89

4-15

விலை ரூ. 1-50

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு




படிப்பகம்

www.padippakam.com

# விவசாயிகள் விடுதலை முன்னணியின் புதிய கிளைகள் துவக்கவிழா!

திருச்சி மாவட்டம், இல்லல்குடி வட்டம், புள்ளம்பாடி ஒன்றிய விவசாயிகள் விடுதலை முன்னணியின் துவக்க விழாவும், மின்வெட்டு - வறட்சியால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு நிவாரணம் கோரும் ஆர்ப்பாட்ட விளக்கக் கூட்டமும் 26.5.89 அன்று கல்லக் குடியில் நடைபெற்றது. பொதுக் கூட்டத்துக்கு தோழர் செல்வராஜ் தலைமை தாங்கினார். புள்ளம்பாடி ஒன்றிய வி.வி.மு. அமைப்பாளர் தோழர் சிவஜோதி, திருவோணம் ஒன்றிய அமைப்பாளர் தோழர் இராம. துரை மாணிக்கம், தமிழ்நாடு வி.வி.மு. ஒருங்கிணைப்புக்குழு அமைப்பாளர் தோழர் மாது ஆகியோர் விவசாயிகளின் விடுதலைக்காகப் போராடும் வி.வி.மு.வின் கொள்கைகளையும், இன்றைய அவல நிலையையும் ஓட்டுக் கட்சிகளின் பித்தலாட்டத்தையும் விளக்கி சிறப்புரையாற்றினர். நிகழ்ச்சியின் இறுதியில் மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் மையக் கலைக்குழுவினர் வழங்கிய "வசந்தத்தின் இடிமுழக்கம்" என்ற கலை நிகழ்ச்சி புரட்சிகர உணர்வுக்குப் புதுரத்தம் பாய்ச்சி மக்களை வெகுவாகக் கவர்ந்தது. ஏறத்தாழ 9 மாதங்களுக்கு முன் பாசனத்திற்கு தண்ணீர் கோரி தன்னெழுச்சியாகப் போராடிய விவசாயிகள் மீது அடக்குமுறையை ஏவி, ஒருவரைச் சுட்டுக் கொன்ற இப்பகுதியில், போர்க் குணமிக்க விவசாயிகளுக்குத் தலைமையேற்று வழிநடத்தும் புரட்சிகர அமைப்பாக வி.வி.மு. உதயமாகியுள்ளதை பகுதிவாழ் மக்கள் வெகுவாக வரவேற்று ஆதரித்தனர்.

**தகவல்:**
**விவசாயிகள் விடுதலை முன்னணி,**
**புள்ளம்பாடி ஒன்றியம்,**



விவசாயிகள் விடுதலை முன்னணியின் பட்டுக்கோட்டை வட்டாரக்கிளை துவக்க விழா மே 25ந் தேதியன்று எழுச்சியோடும் உற்சாகத்தோடும் நடைபெற்றது. மே 25 அன்று மாலை 6 மணியளவில் அதிராம்பட்டினம் நகரின் மையத்தில் வி.வி.மு. சின்னம் பொறித்த செங்கொடியை தோழர் நடராஜன் ஏற்றி வைத்தார்.

தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்திய பிறகு தோழர்கள் விண்ணதிர முழக்கங்களுடன் ஊர்வலமாக பொதுக் கூட்டத்திடலை வந்தடைந்தனர். துவக்க விழா பொதுக் கூட்டத்திற்கு தோழர் கணேசன் தலைமையேற்க, பட்டுக்கோட்டை வட்டாரக் கிளை அமைப்பாளர் தோழர் சந்திரசேகரன் அறிமுகவுரை யாற்றினார். திருவோணம் ஒன்றிய அமைப்பாளர் தோழர் இராம.துரைமாணிக்கம், பந்துவக் கோட்டை தோழர் குருமூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மக்கள் கலை இலக்கியக் கழக தஞ்சை கிளை செயலர் தோழர் காளியப்பன் தனது உரையில் ஓட்டுப் பொறுக்கிகளின் ரௌடித்தனத்தையும் ஊழலையும் அங்குலம் அங்குலமாக தோலுரித்துக் காட்டினார்.

துவக்க விழா நிகழ்ச்சியின் எழுச்சியையும் மக்கள் ஆதரவையும் கண்டு எரிச்சலும், தங்களது பிழைப்பு வாத அரசியல் மக்கள் மத்தியில் அம்பலமாவதைக் கண்ட ஆத்திரமும் கொண்ட காங்கிரஸ் ரௌடிக் கும்பல் அதிரை பேரூராட்சி துணைத் தலைவர் துரை பாஞ்சாலன் தலைமையில் நிகழ்ச்சியைச் சீர்குலைக்கும் நோக்கோடு பொதுக்கூட்டத் திடலுக்குள் புகுந்து எமது ஆதரவாளர் டி.நடராசனைத் தாக்கிப் படுகாயப்படுத்தினர். மேடைமீதேறி தோழர் காளியப்பனைத் தாக்க முற்பட்டனர். போலீசாரோ வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

துரை பாஞ்சாலன் தலைமையிலான காங்கிரசு ரௌடிக் கும்பலின் எத்தணிப்புகளை எமது தோழர்கள் முறியடித்த பிறகு தனது உரையைத் தொடர்ந்த தோழர் காளியப்பனும் பின்னர் உரையாற்றிய வி.வி.மு. மாநில ஒருங்கிணைப்புக்குழு அமைப்பாளர் தோழர் மாதுவும் இந்த சலசலப்புகளுக்கு எமது இயக்கம் அஞ்சாது என்று முழங்கினர். இறுதியில் ம.க.இ.க. கலைக் குழுவினர் வழங்கிய எழுச்சிமிகு கலை நிகழ்ச்சி நடைபெற்றது. ஏறத்தாழ 600க்கும் மேற்பட்ட உழைக்கும் மக்கள் நிகழ்ச்சியில் பங்கேற்று ஆதரித்தனர்.

இதன் பிறகு, வி.வி.மு. ஆதரவாளர் தோழர் நடராஜன் தாக்கப்பட்டதையும், துரை பாஞ்சாலன் மற்றும் காங்கிரஸ் கழிசடைகளின் ரௌடித்தனத்தையும் கண்டித்து எமது அமைப்பு பிரசுரம் வெளியிட்டு மக்களிடம் பிரச்சாரம் செய்து அம்பலப்படுத்தியது. எதிரிகளின் இடையூறுகளை எதிர்கொண்டு, போர்க் குணத்தோடு தனது புரட்சிப் பயணத்தைத் தொடங்கி விட்டது எமது அமைப்பு.

**தகவல்:**
**விவசாயிகள் விடுதலை முன்னணி,**
**பட்டுக்கோட்டை வட்டாரக் கிளை.**

## அடிப்படை வசதிகளைக் கோரி ஆர்ப்பாட்டம்



அடிப்படை வசதிகளைப் புறக்கணிக்கும் அரசை எதிர்த்தும், தனது 6 அம்சத் திட்டத்தை விளக்கியும் கடந்த மே 29ம் தேதியன்று பகத்சிங் இளைஞர் முன்னணி திருச்சி நகர் முழுவதும் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டது. பெரிய முழக்கத் தட்டிகளை கோபுர வடிவில் வண்டியில் கட்டி முன்னே பறை முழங்கிவர, ஆங்காங்கே ஒலிபெருக்கியில் பிரச்சாரம் செய்தவிதம் புதிய வடிவமாக இருந்ததால் மக்கள் ஆச்சரியமாகப் பார்த்து பிரச்சாரத்தைக் கேட்டனர். மே 30ம் தேதியன்று தாராநல்லூரில், ஜூன் 1ம் தேதியன்று நடைபெற உள்ள ஆர்ப்பாட்டத்தை விளக்கி பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் ராஜகுரு தலைமை தாங்க, தோழர் சுகதேவ் 6 அம்சத் திட்டத்தை விளக்கிப் பேச, தோழர் மாதவன் சிறப்புரையாற்றினார். மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைக் கூட தீர்க்க வக்கற்ற அரசை அம்பலப்படுத்தியும், அடுத்த நாள் நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டத்திற்கு அணிதிரளுமாறு மக்களுக்கு அறைகூவல் விடுத்தும் தோழர்கள் உரையாற்றினர். இறுதியில் மக்கள் கலை இலக்கியக் கழக மையக் கலைக் குழுவினர் வழங்கிய வசந்தத்தின் இடிமுழக்கம் எனும் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. ஏறத்தாழ 600க்கும் மேற்பட்ட பகுதிவாழ் மக்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அடுத்த நாள், ஜூன் 1ம் தேதியன்று திருச்சி நகராட்சி அலுவலகம் முன்பு, கழிப்பிட வசதி செய்து தரக்கோரியும், கழிப்பிடக் கட்டணத்தை ரத்து செய்யக் கோரியும், அடிப்படை வசதிகளைப் புறக்கணிக்கும் அரசை எதிர்த்தும் விண்ணதிர முழக்கங்களுடன் எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை ப.இ.மு. நடத்தியது. பகுதிவாழ் மக்கள் இப்போராட்டத்தை வரவேற்றதோடு ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றும் ஆதரித்தனர்.

**தகவல்: பகத்சிங் இளைஞர் முன்னணி, திருச்சி.**



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

நான்காமாண்டு

15

16 - 30 ஜூன் '89

உள்நாடு

தனி இதழ் : ரூ.1.50
ஆண்டு சந்தா : ரூ.36

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா : US $ 11



படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.


## பத்திரிக்கைக் காகித விலையேற்றம்
## பேருந்துக் கட்டண உயர்வு

பத்திரிகைக் காகிதத்தின் விலையைச் செங்குத்தாக ஏற்றுவது என்று மத்திய அரசு முடிவு செய்துள்ளது. தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகிய பாமரர்களை விட்டுத் தள்ளுங்கள். படித்த நடுத்தர வர்க்கத்தினர் கூட செய்தித்தாள்கள் மற்றும் பிற பத்திரிகைகளை வாங்குவது இனி சாத்தியமில்லாமல் போய்விடும். பல ஆயிரம் பேருக்கு ஒரு நூலகம். ஒரு பிரதி என்ற அளவுக்கே இப்போது உள்ளது. அதிலும் பொது நூலகங்களில் அரசு ஆதரவு ஏடுகள் மட்டுமே கிடைக்கும். ஆக, இனி வெளி உலகோடு பெரும்பான்மையான மக்களுக்குள்ள அன்றாடத் தொடர்புகள் அறுத்தெறியப்படும். இல்லை, இல்லை. அரசு வானொலி, வானொளிகள் உண்டல்லவா? அவற்றிலே வரும் அதிகாரபூர்வப் பொய்களால் மூளைச் சலவை நடக்கும். பாசிச ராஜீவ் கும்பலின் லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகளை அம்பலப்படுத்தும் பத்திரிக்கைகளுக்கு வாய்ப்பூட்டுப் போடுவதோடு மக்களை அறிவுபூர்வமாக ஒடுக்கி முடக்கி வைப்பதற்கான ஏற்பாடுதான் இது!

போக்குவரத்துக் கட்டணங்களை மீண்டும் உயர்த்துவது என்று மாநில அரசு முடிவு செய்துள்ளது. வாழ்க்கையையே பெருஞ்சுமையாக்கி விடும் அன்றாடத் தேவைக்கான பொருட்களின் விலையேற்றம் போதாதென்று ஏழை, நடுத்தர மக்கள் வெளியே போகவே முடியாத அளவு, வீட்டுக்குள்ளே பூட்டி வைக்கும் அளவு போக்குவரத்துக் கட்டண ஏற்றம்! மக்களுடைய சமூக, கலாச்சார, அரசியல் வாழ்க்கையை மட்டுமல்ல அத்தியாவசியப் பணிக்கு, அன்றாட வேலைக்குக்கூட நகரமுடியாது. இல்லை, இல்லை. இலவச உணவும், ஊதியமும் கொடுத்து ஓட்டுக் கட்சிகள் பேரணிக்கு அழைத்துப் போவார்கள் அல்லவா? அப்போது மக்கள் தமது உற்றார் உறவினர்களை, வெளி உலகைக் கண்டு சமாதானம் அடையலாம். பிழைப்புவாத அரசியல் கட்சிகளைத் தோலுரிக்கும் புரட்சிகர ஜனநாயக இயக்கங்களை செயலிழக்கச் செய்வதோடு பரந்துபட்ட மக்களை அனுபவ பூர்வமாக ஒடுக்கி முடக்கி வைப்பதற்கான ஏற்பாடுதான் இது!

''தேசியம்'', ''திராவிடம்'' என்று கொள்கை வேறுபாடுகள் பற்றி இவர்கள் பல சவடால்கள் அடித்தபோதும் ஆட்சி நடத்துவதற்கான முறைகள் கொள்கைகளிலே எந்த மாறுபாடும் கிடையாது. போக்குவரத்து கட்டண் உயர்வுக்கு இவர்களும் சரி, பத்திரிக்கைக் காகித விலையேற்றத்துக்கு அவர்களும் சரி ஒரே மாதிரியான காரணங்களையே கூறுகின்றனர்.

''தமிழ்நாட்டில் உள்ள 15 அரசு போக்குவரத்துக் கழகங்களில் 13 நட்டத்தில் ஓடுகின்றன. நிர்வாக முறைகேடுகளும், ஊழல்களும்தான் இதற்குக் காரணம். இருந்தபோதும் கட்டண உயர்வு செய்ய வேண்டுமென்று உலக வங்கி நிர்பந்திக்கிறது. அப்போதுதான் மேலும் 500 புதிய பேருந்துகள் வாங்குவதற்கு நிதியுதவி செய்ய முடியுமென்று நிபந்தனை போடுகிறது'' 1985 மற்றும் 1986 ஆகிய இரண்டு முறை முந்தைய அரசு கட்டணங்களை ஏற்றியபோது கூறிய அதே காரணங்களை இப்போதைய அரசும் கூறுகிறது. முன்பு இரு தவணைகளில் கட்டணங்களை ஏற்றியும், நிர்வாகத்தை சீர்படுத்தவோ, ஊழலை ஒழிக்வோ நட்டம் ஏற்படுவதையோ தவிர்க்க முடியவில்லை. நிர்வாக முறைகேடுகள், ஊழல்கள், உலக வங்கி நிர்பந்தம் ஆகியவற்றுக்காக மக்கள் முதுகிலே சுமையேற்றுவது எந்த வகையில் நியாயமாகும்?

''பத்திரிக்கை காகித உற்பத்தி செய்யும் அரசு ஆலைகள் நட்டத்தில் நடக்கின்றன. விலையேற்றம் செய்யும்படி ஆலைகளின் செலவு மற்றும் விலைகளுக்கான குழு கேட்டுக் கொண்டுள்ளது. எனவே பத்திரிக்கைக் காகித விலையேற்றம் தவிர்க்க முடியாது. மற்றபடி பத்திரிக்கைகளை ஒடுக்குவது நோக்கமல்ல; தவிரவும் பத்திரிக்கைக் காகிதங்களின் விலை கட்டுப்படுத்தப்பட்டதோ, அதன் மீது எங்களுக்குக் கட்டுப்பாடோ கிடையவே கிடையாது'' என்று பிரதமர் ராஜீவ் பேசியுள்ளார். இதிலே, அரசு ஆலைகள் நட்டத்தில் நடக்கின்றன என்பது தவிர அனைத்துமே பச்சைப் புளுகுகள். 1955வது ஆண்டு சட்டப்படி பத்திரிக்கை காகிதம் அத்தியாவசியப் பொருள் ஆகிவிட்டது. அதன் இறக்குமதி, உற்பத்தி, பயன்பாடு, விற்பனை மற்றும் விலை ஆகிய அனைத்தும் அரசின் ஏகபோகக் கட்டுப்பாட்டில் உள்ளது. அரசு வர்த்தகக் கழகத்தின் மூலமாகத்தான் இறக்குமதிசெய்து விற்கப்படுகிறது. உள்நாட்டில் உற்பத்தி ஆவதும் அரசு ஆலைகளில் மட்டும்தான்.

ஆலைகளின் செலவு மற்றும் விலைகளுக்கான குழு சிபாரிசு செய்ததைவிட மூன்று மடங்கு அதிகமாக அரசு விலையேற்றி விட்டது. இரண்டாண்டுகளில் இரண்டு மடங்கு விலையேறிவிட்டது. தரமான பத்திரிகைக் காகிதமான கனடா சரக்கின் வெளிநாட்டு விலை டன் 9,900 ரூபாய் தான். அதையே டன்னுக்கு ரூ.12,175 என்று இங்கே விற்று அரசு வர்த்தகக் கழகம் கொள்ளையடிக்கிறது. இப்போது அரசு ஆலைகளின் நட்டத்தைக் காட்டி இறக்குமதியாகும் பத்திரிக்கைக் காகித விலையையும் டன்னுக்கு 4000 ரூபாய் வரை விலையேற்றப் போகிறது பாசிச ராஜீவ் கும்பல். அரசு கொள்ளையடிப்பதற்காக மக்களிடம் வழிப்பறி செய்வது எந்த வகையில் நியாயமாகும்?

வலது கையால் 'தானதர்மங்கள்' வழங்கிவிட்டு, இடது கையால் தட்டிப் பறித்துக் கொள்ளும் ஒரே தந்திரத்தைத் தான் மத்திய, மாநில அரசாங்கங்கள் எல்லாமும் கையாளுகின்றன. சத்துணவு, முட்டை, அரிசி போன்ற இலவசத் திட்டங்கள், வேலைவாய்ப்பு, வீட்டுவசதி போன்ற கவர்ச்சித் திட்டங்கள் ஒருபுறம் அளிக்கப்படுகின்றன. விலையேற்றம், கட்டணவு உயர்வு, வரிவிதிப்பு போன்ற சுமைகள் மறுபுறம் சுமத்தப்படுகின்றன. ஓட்டுப் பொறுக்கிகளின் இத்தகைய பித்தலாட்டங்களை அம்பலப்படுத்தி, மக்கள் விரோதக் கொள்கைகளை எதிர்த்து முறியடிக்கும் வலுவான மக்கள் திரள் இயக்கங்கள், அமைப்புகள் இல்லாததினால் தான் இவர்கள் தொடர்ந்து இப்படிக் கொட்டமடிக்கிறது. சோசலிசத்தின் பெயரால் சொந்த நாட்டையும் மக்களையுமே கொள்ளையிடும் எத்தர்கள்; ஏகாதிபத்திய நிறுவன நிர்பந்தங்களுக்கு நாட்டையே அடகு வைக்கும் துரோகிகள். இவர்களுடைய ஆட்சி நீடிக்கும் ஒவ்வொரு நாளும் மக்களின் துன்ப துயரங்கள் அதிகரித்துக் கொண்டேதான் இருக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



போன மச்சான் திரும்பி வந்தான் பூ மணத்தோட; ஈழ ஆக்கிரமிப்பிற்கு பிறகு, தப்பிவரும் இந்திய ராணுவத்தின் நெற்றியில் வெற்றி திலகமிட்டு வரவேற்கிறார்கள் சென்னை 'குடி'மக்கள் 'குடும்ப'ப் பெண்கள். விடுதலை புலிகளால் வாலறுபட்டாலும், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, கடத்தல் இவற்றில் வரலாறு காணாத சாதனை புரிந்ததால் இந்த மகத்தான வரவேற்பு.

ஈழம்:

# ஆக்கிரமிப்பாளருக்கு மூக்கறுப்பு!

ஏது நடந்து விடக்கூடாது என்று இந்திய பாசிச ராஜீவ் கும்பல் அஞ்சிக் கொண்டிருந்ததோ அது நடந்துவிட்டது! ''நீ நாட்டாண்மை பார்த்தது போதும்; கிடைக்கு இரண்டாடுகளைக் குதறியது போதும்; இனி எங்கள் விவகாரங்களை நாங்களே பார்த்துக் கொள்கிறோம். நீ வெளியேறிவிடு!'' என்று ஏகமான குரலில் இலங்கை மக்கள் அறிவித்து விட்டனர். இந்திய இராணுவம் வெளியேறுவதற்காக ஒரு மாதம் கெடுவைத்துள்ளது ஜே.வி.பி. அதிபர் பிரேமதாசா கொஞ்சம் 'தாராள' மனது வைத்து இரண்டு மாத அவகாசம் கொடுத்துள்ளார். ஓரிரு கைக்கூலி - துரோக கும்பல்கள் தவிர ஸ்ரீமாவோவின் சுதந்திரக் கட்சி, இலங்கை போலிக் கம்யூனிஸ்டு கட்சி உட்பட அனைத்து சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்கள் அமைப்புகளும் இந்திய இராணுவம் வெளியேறிவிட வேண்டும் என்கின்றன.

''ஐயோ! விவகாரம் தீராமல் நான் வெளியேறிவிட்டால் - என்னுடைய நாட்டாண்மையில்லா விட்டால் இந்த ஆடுகளுக்கு யார் காவல், இவர்களின் கதி என்ன ஆவது?'' என்று அடம்பிடிக்கிறது பாசிச நரி! ''இந்திய - இலங்கை ஒப்பந்தம் பூரணமாக நிறைவேறாத வரையில், ஏராளமான உயிர்பலியும் - பொருட்சேதமும் செய்து இந்திய இராணுவம் ஈட்டிய பலன்களை உறுதி செய்யாத வரையில், வடகிழக்கு மாநில அரசாங்கத்துக்கு போதிய அதிகாரங்கள் பகிர்ந்தளித்து, ஆயுதந்தாங்கிய குடிமக்கள் தொண்டர்படை வலுவாக அமைக்கப்படாத வரையில் இந்திய அமைதிப்படை விலகிக் கொள்ள முடியாது'' என்று இந்திய அரசு அறிவித்து விட்டது. ''படை விலகத்துக்கு தேதி - காலக் கெடு வைக்க முடியாது; இருநாடுகளும் பேசித் தீர்த்துக் கொள்ளும்'' என்று அரசு தந்திர - அதிகாரவர்க்க தொணியில் நாகரீகமாக இதையே பிரகடனம் செய்துள்ளது.

இன்னொருபுறம் இந்திய இராணுவம் ஈழத்தில் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதற்கான பிரச்சாரத்தையும், இயக்கத்தையும் முழு வீச்சில் நடத்துகிறது. ஈழத்திலுள்ள தனது கைக்கூலி - அடிவருடி அமைப்புகளைக் கொண்டு தீர்மானம் போட்டு அறிக்கைகள் வெளியிடுகிறது. ஆர்ப்பாட்டங்கள் - ஊர்வலங்கள் நடத்துகிறது. இங்கே இந்தியாவில் போலிக் கம்யூனிஸ்டுகள் முதல் பண்ருட்டி, சி.சுப்ரமணியம், ம.பொ.சி. போன்ற நாற்காலி அரசியல்வாதிகள் வரை பலரையும் கொண்டு பிரச்சாரம் செய்கிறது.

இந்திய இராணுவம் வெளியேறிவிட்டால் இலங்கை இரத்தக் களறியில் மூழ்கிப் போய்விடுமே என்று கண்ணீர் வடிக்கிறது, பாசிச ராஜீவ் கும்பல். மற்றபிற ஈழப் போராளி குழுக்களைப் புலிகள் கொன்று குவித்து விடுவார்கள்; தமிழர் - முஸ்லீம், தமிழர்—சிங்களவர் இனக் கலவரங்கள் வெடிக்கும்; தமிழர்களுக்கு எதிராக சிங்கள இராணுவக் கொலை வெறியாட்டம் மீண்டும் துவங்கிவிடும்; தென்னிலங்கையில் ஜே.வி.பி வன்முறை அராஜகம் அதிகமாகி, உள்நாட்டுப் போர் மூளும்; அங்கே வாழும் இந்தியப் பூர்வ குடிகளுக்கு எதிராக ஜே.வி.பி படு கொலைகள் நடக்கும்; புலிகள் மீண்டும் துரோகம் செய்து இலங்கை இராணுவத்துக்கு எதிராகப் போர் தொடுப்பார்கள் என்று ஒரு கோரமான சித்திரம் வரைந்து காட்டுகிறார்கள்.

தெற்கு ஆசிய பிராந்தியப் பாதுகாப்பு, உறுதிப்பாடு, அமைதிக்காக, இலங்கையின் பிரதேச ஒருமைப்பாடு, தமிழர் நலனுக்காக கைமாறு பார்க்காது உதவி செய்வதாக இது வரை பீற்றிக் கொண்டு வந்த இந்திய அரசு தனது இராணுவத்தின் உயிர்த்தியாகங்கள், பொருட் சேதங்கள் பற்றி இப்போது ஒப்பாரி வைக்கிறது. ஜெயவர்த்தனேயின் வாரிசு பிரேமதாசா தேர்தலுக்குப் பிறகு புத்தரின் மறு அவதாரமாக மாறிவிட்டார் என்றும் இலங்கை அரசின் ஜனநாயக மாண்புகளையும் பிரச்சாரம் செய்து மாய்ந்து போன இந்திய அரசு, இப்போது சிங்கள இனவெறியின் கொடுமைகளைச் சித்தரிக்கிறது. இந்திய இராணுவத்தை வெளியேற்றுவதற்கான காரணத்தை பிரேமதாசாவுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிக்குள் தேடுகிறது.

இந்திய இராணுவத்தை வெளியேற்றுவது என்கிற முடிவெடுப்பதற்குப் பிரேமதாசாவுக்கு எவ்வளவோ காரணங்கள் இருக்கலாம். அவை அனைத்திலும் முக்கியமானது வாக்களித்தபடி இந்திய இராணுவம் எதையுமே சாதித்து விடவில்லை; புலிகளை ஒடுக்குவதில் தோல்வி கண்டுவிட்டது என்பது தான்! ஒப்பந்தம் கையெழுத்தான 48 மணி நேரத்தில் போர் ஓய்வு, 72 மணி நேரத்தில் போராளிகள் சரணடைவு, ஆயுத ஒப்படைப்பு என்று கம்ப்யூட்டர் கணக்குப் போட்டு முப்படைகளைக் கொண்டு போய் இறக்கியது பாசிச ராஜீவ் கும்பல். ஆனால் இரண்டு ஆண்டு ஆக்கிரமிப்புப் போருக்குப் பிறகும் ஈழப் போர்க்கள நிலைமை என்ன?

''புலிப்படை கொரில்லாக்களால் கிரமமான முறையில் இந்திய இராணுவத்தினர் கொல்லப்படுவது பற்றிய பத்திரிக்கைச் செய்திகள் மற்றும் இராணுவ மருத்துவமனைக்கு வந்து சேரும் காயமுற்றோரது எண்ணிக்கையும் இராணுவத்தின் தோல்வியைத்தான் நிரூபிக்கின்றன; வெற்றியைக் குறிக்கவில்லை'' என்று எழுதுகிறது பாசிச ராஜீவின் பிரச்சார ஏடு சண்டே. ''நடந்தவற்றைத் திரும்பிப் பார்க்கும் போது இராணுவத்தின் இலங்கை அனுபவங்கள் சோகமயமான தவறுகளாகத்தான் தெரிகிறது'' என்றும் அது கூறுகிறது.

''5000 பேர்களாக இருந்த போராளிகளை 1500 பேர்களாக ஒடுக்கிவிட்டோம்; ஆனால் இன்னமும் பலர் புதிதாகப் போராளிகளின் படையில் சேர்கிறார்கள்.'' என்று இந்திய உளவுத் துறை கூறுகிறது. ''பயிற்சி பெற்ற போராளிகள் தவிர ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் புலிகளுக்கு, இருக்கிறார்கள். இப்படியே போனால் புலிகளை முற்றாக ஒழித்துக் கட்ட இன்னமும் பத்தாண்டுகள் ஆகும். ஆனால் கடந்த 18 மாதப் போருக்குப் பிறகு மேலும் பத்தாண்டுகள்

படிப்பகம்


www.padippakam.com

போரிடுவது பயனளிக்குமா? மக்கள் ஆதரவுடைய ஒரு கொரில்லா சக்தியை ஒடுக்குவது சாத்தியமே இல்லை; இதை மிஜோரம், மணிப்பூர், நாகாலாந்து, திரிபுரா ஆகிய மாநிலங்களில் மேற்கொண்ட கலக எதிர்ப்பு நடவடிக்கைகள் சந்தேகமின்றி நிரூபித்து விட்டன. இலங்கையில் இந்திய இராணுவத்தின் நிலைமை இன்னும் படு மோசமாக உள்ளது'' என்று இராணுவ அதிகாரிகள் இரகசியமாக கூறுகின்றனர்.

1500 போராளிகளை 48000 இராணுவத்தினர், விமானப்படை, கடற்படை உதவியோடு ஒழித்துவிட முடியவில்லை. இவையும் அதிகாரபூர்வ புள்ளி விவரங்கள். உண்மையில் ஒரு லட்சம் துருப்புகள், கவச வண்டிகள், ஏவுகணைகள், ஹெலிக்காப்டர்கள், துரித வேகப் படகுகள் ஆகியன இருந்தும், இரண்டாண்டுகள் போரிட்டும் புலிகளை ஒடுக்க முடியவில்லை. 1000 சிப்பாய்கள் - அதிகாரிகளைப் பலி கொடுத்து 2000 கோடி ரூபாய் கொட்டியும் கண்டது தோல்வி தான்! இன்னும் மக்கள்திரள் படுகொலைகள், கற்பழிப்பு - கொள்ளை சூறையாடல் முதலிய அட்டூழியங்கள். இப்படிப்பட்ட இராணுவ ஆக்கிரமிப்பை ஆதரிப்பதால் உள்நாட்டில் எந்த அரசு தான் வெறுப்பு, ஆத்திரம், நெருக்கடிக்கு ஆளாகாது? இந்திய இராணுவத்துக்கும் நிலைமை தெளிவாகி விட்டது.

''இன்று, இலங்கை அரசாங்கமும் நாங்கள் இருப்பதை விரும்பவில்லை; பெரும்பான்மையான இலங்கை மக்களும் எங்களை வெறுக்கிறார்கள் - எதிர்க்கிறார்கள். இலங்கையில் நாங்கள் இருப்பதை நமது நாட்டு மக்களும் விரும்பவில்லை. எனவே எந்தக் கேட்டிற்காக நாங்கள் அங்கிருக்க வேண்டும்?'' என்று இந்திய இராணுவ மேஜர் கேட்கிறார். ''எந்த இராணுவ அதிகாரியையாவது சீண்டிப் பாருங்கள்! இந்தியாவின் இலங்கைக் கொள்கையைக் கடுமையாக எதிர்ப்பார். இதனால் இந்திய இராணுவ உயர் அதிகாரிகள் பீதியடைந்துள்ளனர்; இலங்கையில் நமது இராணுவ நடவடிக்கைபற்றி கருத்துக் கூறினாலோ, செய்தி கொடுத்தாலோ இராணுவக் கோர்ட்டில் விசாரிக்கப் படுவார்கள் என்று உத்திரவு போட்டுள்ளார்கள். எவ்வாறாயினும் இலங்கை நடவடிக்கை மக்களின் ஆதரவில்லாததாக உள்ளது'' என்று ராஜீவின் ஊது குழலான ''சண்டே'' எழுதுகிறது.

எனவே இந்திய அரசு சமீப காலமாக ஒரு தந்திரத்தை மேற்கொண்டு வருகிறது. இலங்கையில் இந்திய இராணுவப் பணிகள் ஏறக்குறைய முடிந்து விட்டன; அதிகாரப்பகிர்வு, மக்கள் தொண்டர் படை அமைத்து ஆயுதப் பயிற்சி, மாகாண அரசை வலுப்படுத்துவது ஆகியவற்றை நிறைவேற்றுவது தான் பாக்கி; எனவே பகுதி பகுதியாகப் படைவிலக்கம் என்ற நாடகமாடுகிறது. கடந்த ஏப்ரலில் 8,000 துருப்புக்களை இலங்கையில் இருந்து திரும்ப அழைத்துக் கொண்டது. இந்தப் படை விலக்கல் உண்மையானது தான் என்று காட்டிக் கொள்வதற்காக சீமான் வீட்டுப் பெண்களை வைத்து வீர - வெற்றித் திலகமிட்டு ஆர்ப்பாட்ட வரவேற்புக் கொடுத்தது. முந்தைய படை விலக்கல்கள் கூட போலியானவை தான் என்பதை ஒப்புக் கொள்ளும் அரிச்சந்திர வேஷம் கட்டிக் கொண்டது. ''கடந்த காலங்களில் பிரச்சார நோக்கத்துக்காகப் படை விலக்கல்களை அடையாளத்துக்குச் செய்ததுண்டு. ஆனால் அவை போலியானவை. உண்மையில் துருப்புக்களின் எண்ணிக்கையைக் குறைக்கவில்லை. அதிபர் தேர்தலை ஒட்டி படை விலக்கல் நாடகமாடும்படி பிரேமதாசா கேட்டுக் கொண்டபடி மூன்று பட்டாளியன்களை திரும்பப் பெற்றுக் கொண்டு, மீண்டும் வேறு மூன்று பட்டாளியன்களை அனுப்பி விட்டோம்'' என்று இராணுவத் தலைமையகமே ஒப்புக் கொண்டுள்ளது.




''இந்திய பொருட்களைப் புறக்கணிப்போம்'' - இலங்கையில் ஜெ.வி.பி.யினர் நடத்தும் ஆர்ப்பாட்டம்.

உண்மை என்னவென்றால் ஈழ ஆக்கிரமிப்புப் போரினால் இந்திய இராணுவத்துக்குள் பீதி ஏற்பட்டுள்ளது. அவ்வப்பொழுது பழைய துருப்புக்களை மாற்றி புதியவர்களை இராணுவம் அனுப்பிக் கொண்டே இருக்கிறது. 50,000 சாதாரணப் படையினரைவிட 15,000 அதிரடிப் படையினரை வைத்துக் கொள்ளலாம் என்று யோசிக்கிறது. இவர்களோடு மக்கள் தொண்டர் படை என்ற ஈழதுரோக கூலிப் பட்டாளத்தையும் வைத்துக் கொண்டு ஆக்கிரமிப்பை நிரந்தரமாக்கத் திட்ட மிட்டுள்ளது. இதை மனதில் வைத்துக் கொண்டு தான் கடந்த ஏப்ரல் 24ந் தேதி புது டில்லியில் நடந்த இராணுவ அதிகாரிகள் மாநாட்டில் ''இலங்கையில இருந்து அமைதிப் படையை முற்றிலும் விலக்கிக் கொள்வது பற்றிப் பாரிய முறையில் சிந்திக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது'' என்று பிரதமர் ராஜீவ் அறிவித்தார்.

அப்போது புலிகள் - பிரேமதாசா பேச்சு வார்த்தையும் நடக்கவில்லை. இந்தியப் படை வெளியேற வேண்டும் என்று பிரேமதாசா கோரவோ, கெடுவைக்கவோ இல்லை. இருந்த போதும் பிரதமர் ராஜீவ் தாமே முன் வந்து மேற்கண்டவாறு பேசினார். இப்போது முறையான கோரிக்கை வந்துவிட்டது; ஆனால் மேல் வாயை ஒரு கையிலும் கீழ் வாயை மற்றொரு கையிலும் மூடிக் கொண்டார். ஆனால் அவருடைய அடிவருடிகள், கூலிப் பிரச்சாரர்கள் எகிறிக் குதிக்கிறார்கள். ''இந்திய இராணுவத்தை வெளியேற்றக் கூடாது. வெளியேற்றினால் ஆயுதம் தூக்குவோம்-தனி ஈழம் அமைத்தே தீருவோம்'' என்று சபத மிடுகிறார்கள் ஈழ துரோகிகள். இலங்கை பற்றிய இந்தியாவின் இராணுவ, அரசியல் கொள்கைகள் அனைத்தும் படுதோல்வி அடைந்து விட்டன. பாசிச ராஜீவ் கும்பல் மற்றும் அதன் பாதந் தாங்கிகள் தவிர அனைவரும் இப்போது இதை ஒப்புக் கொள்கிறார்கள். ''இன்னும் கூடுதலான இழப்புகளையும், அவமானத்தையும் சந்திக்கும் முன் இந்திய இராணுவம் விலகிக் கொள்வது தான் கௌரவமானது'' என்று படையெடுப்பை ஆதரித்தவர்களில் கூட பெரும் பகுதியினர் உபதேசிக்கிறார்கள். இருந்த போதும், ''இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை நிறைவேற்றி விட்டுத்தான் அமைதிப்படை வெளியேறும்'' என்று அடம்பிடிக்கிறது பாசிச ராஜீவ் கும்பல்.

வடக்கே நேபாளத்துக்கு எதிராகப் பொருளாதார முற்றுகை, தெற்கே இலங்கை ஆக்கிரமிப்புப் போர் இரண்டிலுமே தோல்வியுற்ற பாசிச ராஜீவ் கும்பலின் தெற்கு ஆசிய பிராந்தியக் கனவுகள் - ஆசைகள் கருச்சிதைவு அடைவது தெளிவாகவே தெரிகிறது. இருந்த போதும் பாசிஸ்டுகள் யதார்த்தத்தை ஒரு போதும் அங்கீகரிப்பதில்லை. தோல்விகள் அவர்களை மேலும் மூர்க்கமான சாகசங்களில் ஈடுபடவே தூண்டும்! எனவே ஈழதுரோகிகளின் ''வேண்டுகோளை'' ஏற்று இலங்கை அரசு மற்றும் மக்கள் விருப்பத்துக்கு எதிராகவும் ஆக்கிரமிப்பைத் தொடரவும் விரிவான போரில் நாட்டை ஈடுபடுத்தவும் துணியலாம்! அல்லது படை பலத்தைக் காட்டி பிரமதேசாவைப் பணிய வைத்தும் ஆக்கிரமிப்பைத் தொடரலாம். எவ்வாறாயினும் முன்பைவிட கூடுதலான உயிர் பலியும் பொருட் சேதமும் நேரும். ஏனெனில் இருநாட்டு மக்களின் விருப்பத்துக்கும், இந்திய இராணுவத்தின் அதிருப்திக்கும் கூட எதிரான ஆக்கிரமிப்புப் போர் கடும் எதிர்ப்பையே எதிர் கொள்ளும்.

இந்திய ஆக்கிரமிப்பாளர்களையும், தேச துரோகிகளையும் தனிமைப் படுத்துவதில் ஜே.வி.பி.யினரும். புலிகளும் அரசியல் ரீதியில் சாதகமான நிலைமையைப் பெற்றுள்ளார்கள் என்பது உண்மைதான்.

தற்போதைய அரசியல் ரீதியிலான சாதகமான நிலைமைகளைத் தமது குறுகிய குழு நலன்களை உறுதிப்படுத்தும் நோக்கத்தில் பிற தேசபக்த ஜனநாயக சக்திகளை ஒடுக்குவதற்காக புலிகளும் ஜே.வி.பி.யினரும் பயன்படுத்திக் கொள்ள முயன்றால், ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான சக்திகளைப் பிளவு படுத்திவிடும். எனவே தேசபக்த ஜனநாயக சக்திகளை அங்கீகரித்து கூட்டமைத்து ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான போராட்டத்தில் ஒருங்கிணைத்திடத் தவறக் கூடாது. கடந்த காலங்களில் இத்தகு தவறுகள் எதிரிக்குச் சாதகமாக அமைந்த அனுபவத்தை மறந்து விடக் கூடாது.

O மாணிக்கவாசகம்

padippakam

www.padippakam.com



# வேலைவாய்ப்பும் வறுமை ஒழிப்பும் தேர்தல்காலத் தில்லுமுல்லுகள்

ஆத்தா இந்திராவின் பெயரில் ஒரு வீட்டு வசதித் திட்டம். தாத்தா ஜவகர்லால் நேருவின் பெயரில் ஒரு வேலை வாய்ப்புத் திட்டம். ஆட்சியைப் பிடிப்பதற்காக, ஓட்டு வேட்டைக்காக பாசிச ராஜீவ் கும்பல் விரிக்கும் வலையில் வாக்காளர்களை ஈர்ப்பதற்காகப் பரப்பி வைத்துள்ள இறைகள். தமிழ் நாட்டு மண்ணுக்குப் பொருத்தமாக இந்திரா வீட்டு வசதி திட்டத்தையே காமராஜரின் பெயரில் கடந்த சட்டமன்றத் தேர்தல் வியாபாரத்தில் 'போணி' செய்ய முயன்று தோற்றுப்போனது. எனவே ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்துக்கு இப்போது பஞ்சாயத்து சீர்திருத்தம் சட்டத்தின் அளவு முக்கியத்துவம் கொடுத்து பிரச்சாரம் செய்கிறது.

அரசு பிரச்சார சாதனங்கள் அனைத்தும் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தைப் பற்றி ஓயாது அலருகின்றன. மந்திரத்தில் மாங்காய் கொண்டு வருவதைப் போல திடீரென்று இந்தத் திட்டத்தினால் நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டம், வறுமையை ஒழித்துவிடப் போவதாக தம்பட்டம் அடிக்கிறது. நாற்பதாண்டுகளில் நேரு பரம்பரையின் ஆட்சி உருவாக்கிய அவலங்களை நாலே மாதங்களில் மாற்றிவிடுவார்களாம்! தேர்தல் ஆண்டில் ஓட்டுப் பொறுக்குவதற்காக மத்திய - மாநில அரசுகள் மேற்கொள்ளும் தில்லு முல்லுகள் தாம் இவை என்று எல்லோருக்குமே தெரியும். இருந்த போதும் 2,000, 3,000 கோடி ரூபாய் அளவு பொதுச் சொத்தை எவ்வளவு அவசர கோலத்தில், முட்டாள்தனமாக வாரியிறைக்கிறார்கள், அதிகாரத்தில் இருப்பவர்கள் என்பதற்கு மிகச் சிறந்த சான்று ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம்.

வேலை வாய்ப்பு, வறுமை ஒழிப்பு மட்டுமல்ல் கிராமப்பஞ்சாயத்து அளவுக்கு திட்டமிடவும், அமுலாக்கவும், சோதித்தறியவுமான அதிகாரத்தை பரந்துபட்ட மக்களுக்கு வழங்கும் அற்புதமான திட்டம் என்று சினிமா காட்டுகிறார்கள். தற்போது 50 சதவிகிதத்துக்கும் மேலுள்ள வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் மக்களின் எண்ணிக்கையை 28 சதவிகிதமாகக் குறைத்து விடுவார்களாம். வேலை வாய்ப்பு அதிகரிப்பு விகிதம் 3% ஆக இருக்குமாம். அதாவது கிராமப்புற வேலையற்றோரில் 4 கோடியே 40 லட்சம் பேருக்கு வேலை கொடுப்பார்களாம். இதற்காக ஒதுக்கப்படும் 2,600 கோடி ரூபாயில் 15 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட, மலை வாழ் மக்களுக்கும் 30 சதவிகிதம் பெண்களுக்கும் பயன்படுமாறு இருக்குமாம். கூலி, ஏழை விவசாயிகள் அதிகமாக வாழும், விசாயத்துறையில் பின்தங்கிய, வறுமைக் கோட்டுக்கு கீழே வாழுவோர் அதிகமாக உள்ள பகுதிகளுக்கு அதிக நிதி ஒதுக்கப்படும். அரசுப் பிரச்சாரத்தை மட்டுமே கேட்போர், ''ஆகா! எவ்வளவு அருமையாக இருக்கிறது. இதைப் போய் குறை கூறுகிறார்களே!'' என்று பிரமித்துப் போவார்கள்.

இந்த வேலை வாய்ப்புத்திட்டம் அரசு பீற்றிக் கொள்வதைப் போல புதியதொன்றல்ல. பழைய கள்ளு புதிய மொந்தையில் தரப்படுகிறது. அவ்வளவுதான். ஏற்கனவே தேசிய கிராமப்புற வேலைத்திட்டம் (என். ஆர்.இ.பி) மற்றும் கிராமப்புற நிலமற்றோர் வேலை உத்திரவாதத் திட்டம் (ஆர்.எல்.இ.ஜி.பி.) என்ற இரண்டையும் இனைத்து ராஜிவ் குடும்பத்தின் புதிய நாமகரணம் சூட்டியது தான் ஜவகர் வேலை வாயப்புத் திட்டம். 1987-88 ஆம் ஆண்டில் இவ்விரு திட்டங்களுக்காக 1,711 கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தது. இப்போது 2,600 கோடி ரூபாய் தந்துவிட்டு மேலும் 500 கோடி ரூபாய் மாநிலங்களிடம் இருந்து பிடுங்கிக் கொள்கிறது.

வேலை வாய்ப்பு என்றதும் ஏதோ தொழில்கள் பல தொடங்கி நிரந்தரமான வேலை வாய்ப்பை ஏற்படுத்தி விடுவார்கள் என்று கருதி விடவேண்டாம். ஆதிகாலத்தில் மராமத்துப்பணிகள் என்று சொன்னார்கள். அது ஏதோ, யாருக்கோ, யாரோ செய்வதைப் போல இருந்தது. பிறகு அதையே கிராமப்புற வளர்ச்சித் திட்டங்கள் என்றபோது ஏதோ மக்களை நெருங்கி வருவதாகத் தோன்றியது. அவற்றையே வேலை வாய்ப்பு, வறுமை ஒழிப்புத்திட்டங்கள் என்கிறபோது தங்களுடைதாகவே கருதி மக்கள் ஏமாந்து விடுவார்கள் என்று நம்புகிறார்கள். அதாவது எருமை மாடு என்பதைவிட எமவாகனம் என்றால் நாகரீகமானதாக, ''தெய்வீகமானதாக'' இல்லையா? அது போலத் தான்!

முன்பு என்.ஆர்.இ.பி மற்றும் ஆர். எல்.இ.ஜி.பி ஆகிய திட்டங்களின் மூலம் கிராமப்புற சாலை அமைப்பு, ஏரி - குளம் - கண்மாய் சீரமைப்பு, குடிநீர் குழாய்கள் - கிணறுகள் தோண்டுவது, சமூகக்காடு வளர்ப்பு போன்ற பொதுமராமத்துப் பணிகளை அமுலாக்கி தற்காலிக - அன்றாடத் தினக்கூலி வேலைகளை உருவாக்கினார்களே அது தான் இப்போது ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம். தற்காலிகமானது, அன்றாடக் கூலி வேலையானாலும் அரசாங்கம் தருகிறதே என்கிறீர்களா? அதுவும் எவ்வளவு பேருக்கு, எவ்வளவு நாளைக்கு, அரசுக் கணக்குப்படி நான்கு கோடியே நாற்பது லட்சம் பேர் கிராமப்புற வேலையற்றோர். கர்நாடகாவில் குறைந்தபட்ச தினக் கூலி ரூ.9.80 காசு. பஞ்சாபில் ரூ.27.85 காசு. அது சராசரி 15 ரூபாய் என்றாலும் 440 லட்சம் பேருக்கு 50 நாள் வேலை கொடுக்கவே கூலி மட்டும் 3,000 கோடி ரூபாய் வேண்டும். இப்போது ஒதுக்கியிருப்பதோ 2,600 கோடி ரூபாய்; அதிலும் பாதித் தொகை பணிக்கான பொருட்கள் வாங்குவதற்குப் போய்விடும். மீதி 1,300 கோடி ரூபாயில் போக்குவரத்து மேற்பார்வை மற்றும் அலுவலகச் செலவுகள் போக மீதிதான் மக்கள் கூலியாக எதிர்பார்க்க முடியும். இப்போது ஒதுக்கியிருக்கும் 2600 கோடியில் 20% தொகை ஏற்கனவே துவங்கி பூர்த்தியாகாமல் உள்ள பணிகளுக்கு வேறு போய்விடும். பஞ்சாயத்து தலைவர்கள், அதிகாரிகள், காண்டிராக்டர்கள் சுருட்டிக் கொண்டது போக எவ்வளவு தொகை மிஞ்சும், எவ்வளவு பேருக்கு. எவ்வளவு நாளைக்கு அன்றாடக் கூலி கூடக் கிடைக்கும் என்று எண்ணிப்பாருங்கள்!

இதுவரையிலான வேலைவாய்ப்புத் திட்டங்களுக்கான தொகை மாநில அரசுகளிடம் ஒப்படைக்கப்படும். பிறகு பொதுப்பணித்துறை, நீர்ப்பாசனம், காடு வளர்ப்பு, கிராமிய சாலை போன்ற அரசு வளர்ச்சித் துறைகளுக்கு அனுப்பப்பட்டு அவை வேலைவாய்ப்புடைய பொதுப்பணிகளை

படிப்பகம்

www.padippakam.com

மேற்கொள்ளும். இப்போது மத்திய அரசு நேரடியாகவே வேலைவாய்ப்புத் திட்ட நிதியை மாவட்ட கிராமிய வளர்ச்சி நிறுவனங்கள் மற்றும் மாவட்ட வாரியங்களுக்கு அனுப்பிவிட்டது. மத்திய வேளாண்துறை மந்திரி பஜன்லாலுடைய வழிகாட்டும் கடிதம் தவிர இந்தத் திட்டத்தை அமுலாக்குவதற்கான குறிப்பான யோசனைகள் எதுவுமே தரப்படவில்லை. மாநில அரசுகளும் தலையிடக்கூடாது என்று தடுக்கப்பட்டுள்ளன. ஒதுக்கப்படும் நிதியில் 25% பள்ளி, சாலை போன்றவை பழுது பார்க்கவும், 35% பொருளாதார ரீதியில் சொத்துக்களாக மாற்றும் திட்டங்களுக்கும். 25% சமூகக் காடு வளர்ப்புக்கும், 10% பஞ்சாயத்துப் பராமரிப்பு மற்றும் 5% அதன் நிர்வாகத்துக்கும் செலவழிக்க வேண்டும். 15% நிதி தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களுக்கும், 30% நிதி பெண்களுக்கும் பயனுடையதாக இருக்க வேண்டும். இந்த அடிப்படையில் எந்தத் திட்டத்தை மேற்கொள்வது என்று பஞ்சாயத்தே தீர்மானிக்கும். ஒவ்வொரு திட்ட செலவையும் பஞ்சாயத்தே அங்கீகரிப்பதோடு கிராம சபைக்கும் தெரிவித்து கிராம சபையின் தணிக்கைக்கு உட்படுத்தும்.



மாவட்ட வாரியங்களும், பஞ்சாயத்து ஒன்றியங்களும் ஆலோசனைகள், தொழில்நுட்ப மற்றும் அமுலாக்க உதவிகள் செய்வதைத் தவிர பஞ்சாயத்துத் திட்டங்களில் தலையிடக் கூடாது. இந்தத் திட்டத்தின் அமுலாக்கத்தில் எவ்வித பங்கும் இல்லாதபோதும் அதுபற்றிய அறிக்கைகளை மத்திய அரசுக்கு மாநில அரசு அனுப்பி விடவேண்டும். யதார்த்தத்தில் என்ன நடக்கும்? பஞ்சாயத்துக்கள் போன்ற நிர்வாகங்களில் பங்கேற்று, தணிக்கை செய்யும் அனுபவமும் பயிற்சியும் மக்களுக்குக் கிடையாது. பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ரீதியில் பயன்பாட்டை மதிப்பீடு செய்யும் அனுபவமும் பயிற்சியும் சாதாரண விவசாயியான பஞ்சாயத்துத் தலைவர்களுக்குத் தெரியாது. எனவே பஞ்சாயத்துக்களை அரசியல் பிழைப்புவாதிகளும், பணக்கார மற்றும் நிலப்பிரபுக்களும் கைப்பற்றிக் கொண்டு உள்ளூராட்சி அதிகாரிகள் - காண்டிராக்டர்களுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு ஒதுக்கப்படும் நிதியைச் சுருட்டிக் கொள்வதுதான் நடக்கும்.

மாநில அரசின் வெவ்வேறு பிரிவு 'வளர்ச்சி' அதிகாரிகளுக்கு பதிலாக உள்ளூராட்சி அதிகாரிகளைக் கொண்டு அரசுத் திட்டங்களை அமுலாக்குவது; இதுவரை பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு இல்லாத நிதி அதிகாரம் கொடுப்பது; மாநில அரசுகளின் அதிகாரங்களைப் பறித்து மத்திய அரசே நேரடியாக உள்ளூராட்சி அதிகாரிகளை இயக்குவது - இவை ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் கொள்ளைப்புற வழியாக பாசிச ராஜீவ் கும்பல் தனது அதிகாரத்தை விரிவுபடுத்துவதற்கான முன்னோட்டம் பார்க்கும் நடவடிக்கைகள். மாநில அரசின் அதிகாரங்களைப் பறிப்பதோடு கிராம மட்டத்தில் அரசியல் தரகர்களை உருவாக்கிக் கொள்வதற்கான முயற்சிகள்.

ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தை அமுலாக்குவதற்கு கம்யூட்டர் கணக்குப் போட்டு இலக்குகளைத் தீர்மானித்ததைப் போலவே அவசர கோலத்தில் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தை அமுலாக்குகிறது பாசிச ராஜீவ் கும்பல். மொத்த நிதியில் 50% மேலாக மாவட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவிட்டது. நிதி போய்ச்சேர்ந்த 15 நாட்களில் திட்டங்கள் முடிவு செய்யப்பட்டு 30 நாட்களில் திட்டச் செலவுகளுக்குத் தரப்பட்டுவிட வேண்டும். மூன்று மாதங்களில் செலவு செய்யப்படவில்லை என்றால் நிதியைத் திருப்பித் தந்துவிட வேண்டும். மூன்று மாதத்தில் திட்டப் பலன்கள் பற்றிய அறிக்கைகளை மத்திய அரசுக்கு மாநில அரசுகள் அனுப்பிவிட வேண்டும் என்றெல்லாம் உத்திரவு போட்டுள்ளது. பல மாநிலங்களில் மழைக்காலம் மற்றும் உழவு, விதைப்பு போன்ற விவசாயப் பணிகள் துவங்கி விட்டன. எனவே கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தை இவ்வளவு விரைவாக அமுலாக்குவது சாத்தியமே இல்லையென மாநில அரசுகள் புலம்புகின்றன.

கடந்த ஆண்டு வேலைவாய்ப்புத் திட்ட அறிக்கையே அதன் தோல்வியைப் பறைசாற்றுகிறது. தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட 812 கோடி ரூபாயில் 496 கோடிதான் செலவிடப்பட்டது. 3470 லட்சம் மனித உழைப்பு நாட்களுக்கு வேலை வசதி செய்வது என்று இலக்கு வைத்து 2259 லட்சம் மனித உழைப்பு நாட்கள்தான் வேலை வசதியை உருவாக்க முடிந்தது. அதற்கு முந்தைய ஆண்டைவிட மிகமிகக் குறைவான அளவுக்கே நீர்ப்பாசன பராமரிப்பு, குடிநீர் வசதி போன்ற திட்டங்கள் நிறைவேறின. அதாவது 1987-88 ஆம் ஆண்டில் 40,000 குடிநீர்த் திட்டங்களும், 47,000 நீர்பாசனத் திட்டங்களும், 44,000 கிலோ மீட்டர் சாலைகளும் பழுதுபார்ப்பு செய்தனர். ஆனால் 1988-89 ம் ஆண்டில் அவையே முறையே 15,000 என்றும், 11,000 என்றும், 15,000 கி.மீட்டர் என்றும் குறைந்து போயின. வேலைவாய்ப்புக்கென ஒதுக்கப்பட்ட நிதியை தமது பற்றாக்குறை 'பட்ஜெட்'டிற்கு எடுத்துப்போட்டு மாநில அரசுகள் விழுங்கி விட்டன என்று மத்திய அரசு குறைகூறியது. முதலாவதாக அனைவருக்கும் வேலை வாய்ப்பு அளிக்குமாறு நிதி ஒதுக்குவதில்லை. இரண்டாவதாக, குறைந்தபட்சம் ஒதுக்கப்படும் நிதியும் அதற்காக முழுமையாகச் செலவிடப்படவில்லை. இதற்கான காரணங்களைக் காண மறுத்து மீண்டும் அவசர கோலத்தில் துரிதவேகத்தில் வேலையில்லாத் திண்டாட்ட ஒழிப்பு மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டங்களை முன் தள்ளுகிறது பாசிச ராஜீவ் கும்பல். ஏன்? தேர்தல் நெருங்கிவிட்டது. அதற்குள்ளாக மக்கள் மத்தியிலே ஆதரவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்ற அவசரம்!

இம்மாதிரியான குறைப்பிரசவங்கள், வெறுமனே குழிகளைத் தோண்டுவதும், பிறகு மூடுவதுமான முட்டாள்தனமான மோசடிகள் என்று முதலாளித்துவம் பொருளாதார வாதிகளே கேலி செய்கின்றனர். இப்போது இது நிரந்தரமாகி விட்டது. வேலை வாய்ப்பு மற்றும் வறுமை ஒழிப்பு என்கிற பெயரில் ஆண்டாண்டு பல ஆயிரம் கோடி ரூபாய் தற்காலிக - அன்றாட மராமத்துப் பணிகளுக்குக் கொட்ட வேண்டியுள்ளது; இதுதவிர வறட்சி மற்றும் வெள்ள நிவாரணம் என்று திட்ட வரையறைக்கு அப்பாற்பட்ட செலவுகள்; இவை எல்லாம் முறைப்படியான திட்டமிட்ட வளர்ச்சிக்கு வழிவகுப்பவை அல்ல. அரசியல் வாதிகளின் இலவச கவர்ச்சித் திட்டங்களின் பகுதிகள் என்று கூறி அவர்கள் சாடுகிறார்கள்.

விவசாயிகளின் விவசாயப் புரட்சியின் மூலம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி, நிலப்பிரபுக்கள் - கோவில் மடங்கள் மற்றும் அரசு நிலங்களைப் பறிமுதல் செய்து, விவசாயிகளுக்கு பங்கீடு செய்து ஒரு புதிய புரட்சிகரமான பொருளாதாரத்தைக் கிராமப்புறங்களில் நிறுவுவதன் மூலம் தான் அங்குள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க முடியும். இந்த முழக்கத்தை முன் வைத்து கிராமப்புறங்களில் விவசாயிகளை அணிதிரட்டும் புரட்சிகர அமைப்புகள் கிராம மக்கள் சபைகளைக் கூட்டி வேலைவாய்ப்புத் திட்டங்கள், வரவு செலவுகளைப் பகிரங்கமாக முன்வைக்கும்படி கோரி மேற்பார்வையிடுவது; தணிக்கை செய்வது; அரசியல் பிழைப்பு வாதிகள் அதிகாரிகளின் லஞ்ச ஊழல் முறைகேடுகளை அம்பலமாக்குவது ஆகியவற்றின் மூலம் மக்களை அரசியல்படுத்த முடியும்.

— மலரி

படிப்பகம்

www.padippakam.com



வளர்த்த கடா மார்பில் பாய்கிறது; டெங் கும்பலைக் கேலி செய்கிறார்கள் மாணவர்கள்.

# சீனாவில் கொந்தளிப்பு ஏன்? கம்யூனிசம் தோற்றுப்போனதா?

சீனாவின் சொர்க்க அமைதி நிலவும் மைதானத்தில் - தியன்ஆன்மென் சதுக்கத்தில் மீண்டும் அமைதி - ஒழுங்கு நிலை நாட்டப்பட்டு விட்டது. சில தினங்களுக்கு முன்பு அங்கே சுட்டுக் கொல்லப்பட்ட 2600 பேர்களது பிணங்கள் புதைக்கப்பட்டு விட்டன. படுகாயமடைந்த 10000 பேர் மருத்துவமனைகளுக்கு அப்புறப்படுத்தப் பட்டார்கள். எரிபட்ட வாகனங்கள், உடைந்த இராணுவக் கவச வண்டிகள் அகற்றப்பட்டு விட்டன. ஆறுவார காலம் பல ஆயிரம் பொது மக்கள் - மாணவர்கள் கொட்டிய குப்பை கூளங்கள், அவர்கள் தாங்கிவந்த தலைவர்களின் படங்கள், மலர்வளையங்கள், கொடிகள், பதாகைகள், முழக்க அட்டைகள் ஆகியவற்றோடு சேர்த்து வாரிக் கொண்டு போய் விட்டார்கள். துப்பாக்கிக் குண்டுகளின் துளைகள் அடைக்கப்பட்டு விட்டன. இப்போது தியன்ஆன்மென் சதுக்கத்தில் படிந்துள்ள இரத்தக் கறைகளைக் கழுவிக் கொண்டிருக்கிறார்கள்.

தியன்ஆன்மென் சதுக்க நுழைவாயிலில் தொங்கிக் கொண்டிருந்த சீனப்புரட்சி நாயகன் மாசேதுங்கின் பிரம்மாண்டமான ஓவியம் மூன்று ரௌடிகளால் சிதைக்கப்பட்டிருந்தது. அதையும் அகற்றிவிட்டு புதியது வைக்கப்பட்டுவிட்டது. நடந்தவை அனைத்தையும் புன்னகை பூத்தபடியே பார்த்துக் கொண்டிருக்கிறார் மாசேதுங். 'ஜனநாயகத்துக்கான மாணவர் இயக்கத்தை' ஒடுக்கி அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொண்ட டெங்சியாவோ பிங்கும், பிரதமர் லீபெங்கும் வானொளியிலே தோன்றுகின்றனர். இராணுவச் சட்டத்தை அமுலாக்கிய மக்கள் விடுதலை படையினருடன் கைகுலுக்கிப் பாராட்டுகின்றனர். ''அந்நிய அரசுகள், பழைய கைதிகள், ரௌடிகள், நால்வர் கும்பலின் எஞ்சிய நபர்கள், கலாச்சாரப் புரட்சியில் அதிகாரத்தைப் பிடித்திருந்த தீவிரவாதிகள் ஆகியோர் அடங்கிய அரசாங்க எதிர்ப்புக் கூட்டணி நடத்திய கலகம், முதலாளித்துவ தாராள வாதத்தை ஆதரிக்கும் ஒரு சிறு கும்பல் ஏற்படுத்திய பெருங்குழப்பம்; மக்கள் விருப்பத்துக்கு எதிரான எதிர்ப்புரட்சிக் கலகமாக சீரழிந்தது. கட்சிக்கும், சோசலிச அமைப்புக்கும் எதிரான ஆழமான வெறுப்புற்றிருக்கும் பிற்போக்குக் கும்பல், கம்யூனிசக் கட்சியை மட்டந்தட்டி, சோசலிச அமைப்பை அகற்றிவிட்டு ஒரு முதலாளித்துவக் குடியரசை நிறுவுவதற்காக இப்போதைய அரசாங்கத்தைத் தூக்கிஎறிய முயன்றது. உயிரைப் பணயம் வைத்துப் போரிட்டு மக்கள் விடுதலைப்படை அந்தக் கலகத்தை ஒடுக்கிவிட்டது. சுருங்கக்கூறின் எதிர்ப்புரட்சியை முறியடித்து மக்களையும், நாட்டையும் சோசலிசத்தையும் பேரழிவில் இருந்து காப்பதில் வென்றுவிட்டோம்'' என்று லீபெங் - டெங் சியாவோ பிங் தலைமை பிரகடனம் செய்துள்ளது.

சீனாவில் இரும்புத் திரையைத் தகர்த்து வெளி உலகுக்குக் கொண்டுவந்த மிகச் சிறந்த சீர்திருத்தவாதி டெங்சியாவோ பிங் என்று நேற்று வரை புகழ்ந்தவர்கள் இப்போது என்ன சொல்லுகிறார்கள்? ''லட்சோபலட்சம் மாணவர்களும் பொதுமக்களும் திரண்டு ஒழுங்குமுறை தவறாது நடத்தும் மாபெரும் ஜனநாயகத்துக்கான புரட்சி; 'சுதந்திரக் காற்று', ஜனநாயகப்புயல் வீசுகிறது; சீன மாணவர்கள் - விடுதலைப் போராளிகள்; ஜனநாயகத்தின் நாயகர்கள். தியாக சீலர்கள்'' என்று மாணவர் இயக்கம் துவங்கியதிலிருந்து உலகம் முழுவதும் பிரச்சாரம் செய்தார்கள். ''மாணவர்களை ஒடுக்குவதற்கு இராணுச் சட்டம் பிறப்பிக்கப்பட்டும், நடைமுறைப்படுத்த முடியவில்லை; இராணுவமே அதை எதிர்க்கிறது; 100க்கும் மேற்பட்ட தளபதிகள் இராணுவச் சட்டத்தை எதிர்த்துப் போர்க்கொடி தூக்கியுள்ளனர்; இராணுவத்துக்குள் பிளவு ஏற்பட்டுவிட்டது; கட்சிக்குள் அதிகாரத்துக்கான பதவிச் சண்டை கடுமையாக நடக்கிறது; சீர்திருத்தவாதிகள் கைது செய்யப்பட்டு விட்டனர்; இராணுவம் கொலை வெறியாட்டம் போடுகிறது; பிணமலை குவிகிறது; இரத்த ஆறு ஓடுகிறது. குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் இராணுவ கவச வண்டிகளுக்குக் குறுக்கே படுத்து மறிக்கிறார்கள்; அவர்கள் மீது வண்டிகளை ஏற்றி மிதித்து கொல்லுகிறது, இராணுவம்; இராணவத்துக்குள் பிளவு ஏற்பட்டு ஒருவருக்கொருவர் சண்டையிடுகின்றனர்; உள்நாட்டுப் போர் மூளுகிறது - பரவுகிறது; செய்தியாளர்கள் தாக்கப்படுகிறார்கள். டெங் சியாவோ பிங் மாண்டு போய்விட்டார் அல்லது மரணப் படுக்கையில் கிடக்கிறார். லீ பெங் ஒரு போலீசு அதிகாரியாலேயே சுடப்பட்டு மாண்டு போய் விட்டார் அல்லது படுகாயமுற்றுள்ளார்.

படிப்பகம்

www.padippakam.com

நாடு தழுவிய எழுச்சி கலகம் நடக்கிறது. சீனாவில் உள்ள வெளிநாட்டவர்கள் தப்பி ஓடுகிறார்கள்'' என்று ஓலமும் வதந்திகளும் பரப்பப்பட்டன.

டெங்சியாவோ பிங்-லீபெங் கும்ப லைக் கட்டித் தழுவிக் கொண்டிருந்த ஏகாதி பத்தியவாதிகள் அதை உதறித் தள்ளினார் கள். மாணவர் இயக்கத்தின் மீது நிதானத் தோடும், விட்டுக் கொடுத்தும் போகும்படி ஆரம்பத்தில் உபதேசித்தார்கள். அதன் மூலம் மறைமுக ஆதரவு தந்தார்கள். ஆனால் இராணுவத்தை ஏவி இயக்கத்தை ஒடுக்கத் துவங்கியதும் சீனாவுக்கு எதிராக பொருளாதார மற்றும் ஆயுத ஏற்றுமதித் தடை விதித்தது, அமெரிக்கா. சீனத் துரோகி யும், விஞ்ஞானியுமான ஃபாங்லிஜிக்கு அமெரிக்கத் தூதரகம் தஞ்சமளித்தது. இங்கி லாந்தும் தடைகளை விதித்தது. பிரான்சு, தூதரக உறவுகளைத் தற்காலிமாகத் துண்டித் துக் கொண்டது. அதையே ஸ்பெயினும் பின் பற்றியது. ஆஸ்திரேலியப் பிரதமர் சீனப் பயணத்தை ரத்து செய்தார்.

''சீனாவில் வாழும் அனைத்து மக்க ளின் அடிப்படை மனித உரிமைகளைக் காக் கும் வகையில் ஒரு சுதந்திரமான, வெளிப்ப டையான அரசியல் அமைப்புடன் கூடிய நியாயமான ஜனநாயக சமுதாயத்தை நிறு வும்படி'' பகிரங்கமாகவே தீர்மானம் போட்டு ஏகாதிபத்தியவாதிகள் டெங்-லீ கும்பலுக்கு நிர்ப்பந்தம் கொடுக்கிறார்கள். மாணவர் இயக்கத்தை மறைமுகமாக ஆத ரிக்கும் ருஷ்யா மற்றும் பிற கிழக்கு ஐரோப் பிய நாடுகள் மவுனம் சாதிக்கின்றன. ஹங் கேரி பகிரங்கமாகவே டெங்-லீ கும்பலைச் சாடியுள்ளது. கியூபா மட்டுமே மாணவர் இயக்கத்தைக் கண்டித்து சீனத் தலைமையை ஆதரிக்கிறது.

''மாவோவின் கம்யூனிச வரட்டுத்த னத்தை முறியடித்து துணிச்சலோடு சீன சமு தாயத்தை சீர்திருத்திய பெருந்தலைவர் டெங் சியாவோபிங்'' என்று நேற்று வரை ஏற்றிப் போற்றிய ஏகாதிபத்தியவாதிகள் இப்போது டெங்சியாவோபிங் கும்பலை பழைமைவாதிகள், பிடிவாதப் பாதையாளர் கள் என்று ஏசுகிறார்கள். போராடும் மாண வர்களை விடுதலைப் போராளிகள், ஜனநா யக நாயகர்கள் என்றும் அவர்களை ஆதரிக் கும் ஜாவோஜியாங் மற்றும் ஹூ ஒகிலி போன் றவர்கள் சீர்திருத்தவாதிகள், தாராளவாதி கள் என்றும் புகழ்ந்து ஆதரிக்கின்றனர். அதே போலத்தான் ஸ்டாலின் கட்டியெழுப் பிய இரும்புக் கோட்டையைத் தகர்த்து, ருஷ் யாவில் "கிளாஸ்னாஸ்த் மற்றும் பிரெஸ்ட் ரோய்க்க" என்ற புரட்சி செய்த மாவீரன் என்று கோர்பசசேவை நேற்று வரை உச்சி மோந்தார்கள் ஏகாதிபத்தியவாதிகள். சமீ பத்தில் ருஷ்யாவின் அதிஉயர் நாடாளுமன் றத்துக்கு நடந்த தேர்தலில் 'கம்யூனிஸ்டு அல்லாத' வேட்பாளர்கள் பலர் வெற்றி பெற்றதும் அவர்களின் தலைவர் போரிஸ் யேல்த்சின் அதிதீவிரச் சீர்திருத்தவாதி என்று இப்போது ஏகாதிபத்தியவாதிகள் கொண்டாடுகின்றனர். போலந்து பொதுத் தேர்தல்களில் ''சாலிடாரிட்டி சுதந்திர தொழிற் சங்கம்'' போட்டியிட்ட அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றி பெற்றுவிட்டது. எனவே இதுவரை செய்த சீர்திருத்தங்கள் போதாது, 'கம்யூனிஸ்டு' கட்சி அதிகாரத் தைத் துறக்க வேண்டும்; சாலிடாரிட்டியிடம் ஒப்படைக்க வேண்டும் என்று நிர்ப்பந்திக்கி றார்கள்.

உலகப் பிற்போக்காளர்கள், ஏகாதிபத் தியவாதிகளின் நோக்கம் இன்னும் புரிய வில்லையா? சீர்திருத்தம் என்கிற பெயரில் டெங்சியாவோபிங், கோர்பச்சேவ் போன்ற துரோகிகள் கம்யூனிசத்தின் கழுத்தை நெறிக்க நெறிக்க, இவர்கள் விட்டுக்கொ டுக்க விட்டுக்கொடுக்க ஏகாதிபத்தியவாதி கள், பிற்போக்காளர்கள் மேலும் முன்னேறி ஜியாவேஜிங், யேல்த்சின் போன்றவர்களை முன்னிறுத்தித் தாக்குவார்கள். ''ஐயா, கம்யூ னிசம் முற்றாகத் தோற்றுப் போய் விட்டது! நாங்கள் ஜனநாயகத்துக்குத் திரும்புகி றோம்!'' என்று மேடையேறி பகிரங்கமாக அறிவிக்கும்வரை விடமாட்டார்கள். இங்கே ஜனநாயகம் என்பது என்ன? தனியு டமை அடிப்படையிலான முதலாளித்துவத் தைப் பூரணமாக நிறுவுவதுதான்! அதாவது இன்றைய சகாப்தத்தில் ஏகாதிபத்தியத்தைக் குறிக்கிறது. கம்யூனிசம் தோற்று விட்டது, ஏகாதிபத்தியம் வென்றுவிட்டது என்று நிலைநாட்டும் வரை ஓயமாட்டார்கள்.

கம்யூனிசத்தின் சாயலே கூடாது, டெங் சியாவோபிங், கோர்பச்சேவ் மட்டுமல்ல ஜியாவோஜிங், போரிஸ் யேல்த்சின் போன்ற கடை கோழையான போலிக் கம்யூ னிஸ்டுகளைகூட சகித்துக் கொள்ளமுடி யாது என்று முடிவு செய்து உள்ளும் புறமும் இருந்து தாக்குகிறார்கள், ஏகாதிபத்திய வாதி களும் அவர்களுடைய அடிவருடிகளும். போலந்திலே நடக்கும் ''சாலிடாரிட்டி'' இயக்கத்தையும், ருஷ்யாவிலே வெடிக்கும் தேசிய இன எழுச்சிகளையும், சீனாவிலே பொங்கும் மாணவர் இயக்கத்தையும் மட்டு மல்ல டெங்சியாவோபிங் மற்றும் கோர்பச் சேவே கொண்டு வரும் சீர்திருத்தங்களை யும்கூட சான்றுகளாகக் காட்டி கம்யூனிச சித் தாந்தத்தின் மீதே பொதுத் தாக்குதல் தொடுக் கிறார்கள். ''கடந்த ஒரு நூற்றாண்டாக உலகை ஆட்டிப் படைத்த கம்யூனிசம் ஒவ் வொரு நாடாக வீழ்ந்து வருகிறது'' என்றும், ''மாபெரும் தோல்வி: இருபதாம் நூற்றாண் டில் கம்யூனிசத்தின் எழுச்சியும் மரணமும்'' என்று வரலாற்று ஆய்வு நூல்கள் எழுதத் துவங்கிவிட்டார்கள்.

இறுதியாக, கம்யூனிச இயக்கம் தோற் றுப் போய் விட்டதா? கம்யூனிச சித்தாந்தம் அந்திமக் காலத்தை நெருங்கிவிட்டதா? ஏற் கனவே அதன் எதிரிகளுடைய பல்லாண்டு அவதூறுப் பிரச்சாரத்துக்குப் பலியானவர்க ளும், கம்யூனிச சித்தாந்தத்தின் அடிப்படை மற்றும் கம்யூனிச இயக்கத்தின் வரலாறு அறி யாதவர்களும் அப்படித்தான் நம்புகிறார் கள். பாசிசத்தை முறியடித்து பேரழிவில் இருந்து உலகைக் காத்த செஞ்சேனையின் தளபதி ஸ்டாலினையும் அந்த பாசிச இட்லருக்குச் சமமான சர்வதிகாரி என்றுதானே இங்கே பள்ளிகளில் பாடம் புகட்டுகிறார் கள். ''கம்யூனிஸ்டுகள், சித்தாந்த வெறிபி டித்த சர்வாதிகாரிகள்; எனவே மனித உரி மைகள் மறுக்கப்பட்டவர்கள் ஜனநாயகத் துக்கும் சுதந்திரத்துக்கும் அங்கே போராடுகி றார்கள். கம்யூனிஸ்டுகள் குறுகிய கும்பலு டைய சுயநலன்களுக்காகப் பாடுபடுகிறவர் கள். எனவே ஊழல் பெருத்துப் போய்விட் டது; அதற்கு எதிராக மக்கள் ஆத்திரம டைந்து போராடுகிறார்கள்'' என்று செய்யப் படும் பிரச்சாரம் பாமரர்களால் எளிதில் நம் பக் கூடியதாக இருக்கிறது.

ஆனால் உண்மை என்ன? ஏற்ற இறக் கங்களும், நெளிவு சுழிவுகளும் மிக்க பாதை யினூடாகத்தான் கம்யூனிச இயக்கம் முன் னேறி வந்திருக்கிறது. கடுமையான போராட்டத்தினூடாகத்தான் கம்யூனிச சித் தாந்தம் பிறந்து வளர்ந்திருக்கிறது. தோல்வி களும் பின்னடைவுகளும்கூட கம்யூனிச சித் தாந்தத்துக்கும் இயக்கத்துக்கும் புதியன அல்ல. கம்யூனிசம் ஒரு சிந்தாந்தம் என்கிற முறையில் தன்னையே காத்துக் கொள்ள வேண்டிய நெருக்கடியில் சிக்கி மீண்ட கால கட்டங்கள் அதன் வரலாற்றில் உண்டு. கம்யூனிச சிந்தாந்தத்தை உருவாக்கி கம்யூ னிச இயக்கத்தை வழிநடத்திய மாபெரும் தலைவர்களான மார்க்ஸ் எங்கெஸ்சும் லெனின் - ஸ்டாலினும், மாவோவும் அதை உணர்ந்தே இருந்தார்கள். இப்போது ருஷ்யா, சீனா, போலந்து போன்ற ''சோசலி ச'' நாடுகளில் தோன்றியுள்ள நெருக்கடிக ளுக்கான அடிப்படைகளையும், தீர்வுகளை யும் கூட அவர்கள் தெளிவாகவே முன்வைத் துள்ளார்கள்.

அவற்றைப் புரிந்துகொள்ள வேண்டு மானால் கம்யூனிச சித்தாந்தத்தின் அடிப்ப டைகள், கம்யூனிச இயக்கத்தின் வரலாறு அனுபவங்கள் போன்றவற்றைக் கொஞ்ச மாவது படித்தறிய வேண்டும். கம்யூனிசம், சோசலிசம், முற்போக்கு, புரட்சி போன்ற வார்த்தைகள் அவற்றின் எதிரிகளால் சாத்தி யமான அளவு கொச்சைப்படுத்தப்பட்டுள் ளன. மேடு பள்ளங்களை வெட்டி மைதா னத்தை சமன்படுத்துவதைப் போல சொத் துக்கள் அனைத்தையும் பறித்து சமமாகப் பங்கீடு செய்வது என்பதிலிருந்து ஆலை கள், நிலங்கள் முதல் அனைத்தையும் அரசுட மையாக்கிக் கொண்டு மக்களுக்குச் சோறு போடுவது என்பது வரை கம்யூனிசம் - சோசலிசம் குறித்த விளக்கங்கள் தரப்படு கின்றன. நமது நாட்டிலே அரசுத் துறைத் தொழில்களை நிறுவுவது முதல் இலவச சத் துணவு வரை எல்லாவற்றுக்கும் சோசலிச நாமகரணம் சூட்டப்படுகிறது. ஒரே இலை யில் சோறு போட்டு கூட்டாக உண்ணுவது முதல் மனைவிமார்களைப் பகிர்ந்து கொள் ளுவது வரை கம்யூனிசம் குறிக்கிறது என்று நாட்டின் மகாத்துமா எனப்படும் தேச துரோகி காந்தி நம்பினார்.

சுரண்டலே இல்லாத, முதலாளி - தொழிலாளி, விவசாயி, பண்ணை அடிமை - நிலப்பிரபு போன்ற வர்க்கப் பிரிவுகளே இல்லாத, மூளை உழைப்புக்கும் உடல் உழைப்புக்கும் வேறுபாடு இல்லாத, நகரங்க ளுக்கும் கிராமங்களுக்கும் வேறுபாடு இல் லாத ஒவ்வொருவரும் தமது தகுதிக்கேற்ப உழைக்கவும், தமது தேவைக்கேற்ப அனைத்தையும் பெறவும், தனி மனிதன் உழைப்புப் பிரிவினைக்கு அடிமைப்படுவ தில் இருந்து விடுபடவும், அவன் சுதந்திரமா கத் தனது தொழிலைத் தெரிவு செய்துகொள் ளும் உரிமை பெறவும், உற்பத்திச் சக்திக ளைப் போலவே தனிநபரும் அனைத்தும் தழுவிய வளர்ச்சி பெறுவதும், சமுதாயம்

படிப்பகம்

www.padippakam.com

முழுவதற்குமான தேவையை நிரப்பும் திறனுடைய அளவு உற்பத்தி சக்திகளும் உற்பத்திப் பொருட்களும் மிதமிஞ்சிய வழியவும் கூடிய மிக உயர்ந்த கம்யூனிச சமுதாயத்தை ஏற்படுத்துவது தான் கம்யூனிச இயக்கத்தின் இறுதி இலட்சியம். உலகம் முழுவதும் இப்படிப்பட்ட கம்யூனிச சமுதாயம் நிறுவப்படுவது தவிர்க்க முடியாதது என்பது சமூக வரலாற்று நியதி. இதை விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கிறது கம்யூனிச சித்தாந்தம். இதுவரையில் முதலாளித்துவ சமூக - வரலாற்று விஞ்ஞானிகள் எவராலும் கம்யூனிச சித்தாந்தம் அடிப்படையில் தவறானது என்று நிரூபிக்கப்படவில்லை. பலரும் அதை ஏற்றுக்கொண்டு பலவாறு திரித்துத் திசைதிருப்பவே முயலுகின்றனர்.

வர்க்க சமுதாயத்திலிருந்து வர்க்கங்களற்ற சமுதாயத்திற்கு, சுரண்டும் அமைப்பு முறையிலிருந்து சுரண்டலற்ற அமைப்பு முறைக்கு, முதலாளித்துவத்தில் இருந்து கம்யூனிசச் சமுதாயத்துக்கு மாறிச் செல்லும் இடைக்கட்டம்தான் சோசலிச சமுதாயம் ஆகும். கம்யூனிச சமுதாயத்தை நிறுவுவதற்குத் தேவையான பொருளாதார, அரசியல், சமூக - கல்வி - கலாச்சார - சித்தாந்த அடிப்படைகளை உருவாக்குவதும் அதற்குத் தடைபான சக்திகளை முறியடிப்பதும்தான் சோசலிச நிர்மாணம் மற்றும் சோசலிசப் புரட்சி என்கிறோம். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற அரசியல் அமைப்பு முறையின்கீழ் மட்டுமே சோசலிச நிர்மாணத்தையும், சோசலிசப் புரட்சியையும் வெற்றிகரமாக நிறைவேற்றிட முடியும். ஏனெனில் ஆலைகளை அரசின் பொதுச் சொத்துடமையாகவும், விவசாயத்தைக் கூட்டுப்பண்ணை உடமைகளாகவும் மாற்றும் சோசலிச உடமைமாற்றம் ஏற்பட்டவுடன் சுரண்டும் வர்க்கங்களும் அவர்களின் கூட்டாளிகளும் ஒழிந்துவிடுவதில்லை.

★ புரட்சியின் மூலம் முதலாளித்துவ வர்க்கம் தோற்கடிக்கப்பட்ட போதும் அது துடைத்தொழிக்கப்படவில்லை; அது மறைந்துபோகவோ, தனது எதிர்ப்பை நிறுத்தவோ இல்லை - மாறாக தோல்வியுற்றதாலேயே பல நூறு மடங்கு பலத்துடனும் ஆத்திரத்துடனும் தனது எதிர்ப்பை ஆழப்படுத்தியுள்ளது. தோற்றுப் போனாலும் அறிவிலும், அமைப்புத் துறையிலும் அவர்களுக்குள்ள செல்வத்தை உடனடியாகப் பறித்துவிட முடியாது. எனவே இழந்த 'சொர்க்கத்தை' மீட்டுப் பெறுவதற்காகத் தூக்கியெறியப்பட்ட சுரண்டலாளர்கள் ஆயிரத்தொரு வழிகளிலும் எப்பொழுதும் முயலுகிறார்கள்.

★ சிறுவீதப் பண்ட உற்பத்தியும் சந்தையும் நீடிக்கும் வரை, அவரவர் உழைப்புக்கேற்ற ஊதியம் என்ற சமனற்ற பொதுப் பங்கீடு நிலவும் வரை தனிநபர் சொத்து செல்வம் சேர்வதற்கான நிலைமைகள் நீடிக்கின்றன. இச்சிறு முதலாளித்துவமாகபடுத்தும் சூழலும், முதலாளித்துவ செல்வாக்கும் எங்கும் விரவி நிற்பதன் விளைவாக பாட்டாளி வர்க்க அணிவரிசையிலும், அரசு அலுவலர்கள் மத்தியிலும், அரசியல் ரீதியில் சீரழிந்த வர்களும் புதிய முதலாளித்துவ நபர்களும் தோன்றிக் கொண்டே இருப்பார்கள்.

★ சர்வதேச முதலாளித்துவ முற்றுகை ஆயுதந்தாங்கிய தலையீடு என்ற ஏகாதிபத்திய பயமுறுத்துதல்கள், அமைதி வழி சீரழிவுக்கான நாசவேலைகள் ஆகியன வெளியிலிருந்து சோசலிச நிர்மாணத்தையும் புரட்சியையும் தாக்கும் அபாயம் நீடிக்கிறது.

★ முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறிச் செல்லும் ஒரு முழுமையான வரலாற்றுச் சகாப்தத்தைக் குறிக்கும் சோசலிசம் இறுதி வெற்றி பெறும்வரை மேற்கண்ட பழைய, புதிய சுரண்டலாளர்கள் தவிர்க்க முடியாமல் மீட்புக்கான நம்பிக்கையை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்; இந்த நம்பிக்கையை மீண்டும் முதலாளித்துவ சுரண்டல் அமைப்பை மீட்பதற்கான முயற்சிகளாக மாற்றுகிறார்கள்.

எனவே ஒரு நாட்டில் சோசலிசம் நிறுவப்படுவது, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் அமைவது வர்க்கப்போராட்டத்தின் முடிவல்ல; புதிய வடிவங்களில் தொடர்வதையே குறிக்கிறது; அது புரட்சியின் நித்தியத்துவத்தைப் பிரகடனப்படுத்துகிறது. துப்பாகியுடன் இருந்த எதிரிகளைத் துடைத்தொழித்த பிறகு இன்னமும் துப்பாக்கியில்லாத எதிரிகள் இருக்கிறார்கள். அவர்கள் சோசலிசத்துக்கு எதிரான ஜீவமரணப் போராட்டத்தை நடத்தி முதலாளித்துவத்தை மீட்பதற்கு இடையறாது முயல்வார்கள். அவர்களுக்கெதிராக அரசியல் பொருளாதாரம், சமூக - கல்வி - கலாச்சாரம், சித்தாந்தம் ஆகிய சகல துறைகளிலுமான வர்க்கப் போராட்டத்தை நடத்தியே தீர வேண்டும். அந்தப் புரட்சியுனூடாகத்தான் சோசலிசத்தை நிர்மாணிக்க முடியும்.



சோசலிசத்தின் வெற்றி சுலபமானதல்ல! — கம்யூனிச ஆசான் மாவோவின் படத்துக்குக் கீழே முதலாளித்துவ நோய் பிடித்த சீன மாணவர்கள்.

★ பொருளாதாரத் துறையில், சேவை உழைப்பு, (சபோத்னிக்குகள்) அதாவது எந்த அதிகாரமும் அல்லது அரசும் நிர்ணயிக்கப்படாத அளவினதோடு ஊதியம் பெறாத உழைப்பு, பொது மக்களின் நன்மைக்காக ஒரு விசாலமான அளவுக்குத் தனிநபர்களால் செய்யப்படும் உழைப்பு. இது, கிராமப்புறங்களில் காணப்படும் அண்டை அயலாருக்கு உதவியளிப்பதைப் போன்றதல்ல அரசின் பொதுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, மிகப் பரந்துவிரிந்த அளவுக்கு அமைப்பு ரீதியில் அமைந்த ஊதியம் பெறாத உழைப்பு. கட்சியின் பெயரில் மட்டும் கம்யூனிசம் என்றில்லாமல் சமூக வாழ்விலும் கம்யூனிசத் தன்மையுடைய சேவை உழைப்பு. அத்தகு சேவை உழைப்பையே வாழ்க்கையின், உற்பத்தியின் நெறிமுறையாக வளர்த்தெடுக்கும் பாதையில்தான் கம்யூனிச சமுதாயத்தை நோக்கி முன்னேற முடியும்.

★ அரசியல் துறையில், ஏழை மக்கள் அனைவரையும் நிர்வாகத்தின் நடைமுறை வேலைகளில் ஈர்ப்பது. ஒவ்வொரு உழைப்பாளரும் உற்பத்திக்கான உழைப்பில் எட்டு மணி நேரப் பணியை முடித்தபிறகு ஊதியமின்றி அரசுப் பணிகள் ஆற்றுவதை உறுதிப்படுத்த வேண்டும். இந்தத் திசையில் முன்னேறும் ஒவ்வொரு அடியும் கவனமாகப் பதிவுசெய்து படித்தாய்வு செய்து கிரமமாக முறைப்படுத்தி விசலமான அனுபவத்தால் சோதித்தறியப்பட்டு சட்டத்தின் அங்கமாக்கப்பட வேண்டும்.

★ சித்தாந்தத் துறையில், மகத்தான பாட்டாளிவர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் மூலம் மக்களது சித்தாந்தத்தைப் புரட்சிமயமாக்குவது. சுதந்திரமாகப் பேசுவது, கருத்துக்களை முழுமையாக வெளியிடுவது, மறுத்துரைப்பது, மாபெரும் வாதப்பிரதிவாதங்களை நடத்துவது, பெரும் அச்சாக (கொட்டை எழுத்து) சுவரொட்டிகளை எழுதுவது ஆகியவற்றின் மூலம் மக்கள் தாமாகவே போதனை பெறவிடுவது; போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கில் தங்களது அரசியல் உணர்வை உயர்த்திக் கொள்வது; தமது திறமையை ஆற்றலை செழுமைப்படுத்திக் கொள்வது.

இந்த வகையிலே சோசலிசப் புரட்சி மற்றும் சோசலிச நிர்மாணம் பற்றிய நியதிகளையும் வழிகாட்டும் நெறிமுறைகளையும்

படிப்பகம்

www.padippakam.com

கம்யூனிச ஆசான்கள் வகுத்தளித்துள்ளனர். ''புரட்சியில் வென்று, சோசலிச உடைமை மாற்றம் ஏற்பட்ட பிறகும் பகைமையான வர்க்கங்களும், பகைமையான வர்க்க முரண்பாடுகளும் நிலவுகின்றன. அவற்றையும், வர்க்கப் போராட்டங்களையும் மறந்து, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கைவிட்டால் சோசலிச நாடு அதன் எதிரிடையானதாக மாறும், சீரழியும்; முதலாளித்துவ மீட்சி நடந்தேறிவரும்'' என்று அவர்கள் எச்சரித்தார்கள். சோசலிச சமுதாயத்தில் புரட்சியின் எதிரிகள் கம்யூனிஸ்டுக் கட்சிக்குள்ளேயே ஒளிந்து கொண்டு, அதிகாரத்திலிருந்து கொண்டு முதலாளித்துவப் பாதையை மேற்கொள்ளும் துரோகிகள்தான் என அடையாளங்காட்டினர்.

கம்யூனிச ஆசான்கள் எதிர்பார்த்து எச்சரித்தவாறே நடந்தது. ருஷ்யாவில் ஸ்டாலின் மறைவுக்குப் பிறகு கட்சி மற்றும் ஆட்சியைக் கைப்பற்றிய குருச்சேவ் - பிரஸ்நேவ் கும்பல் எதிர்ப்புரட்சி ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தி பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை வீழ்த்தி அதிகார வர்க்க முதலாளித்துவ பாசிச சர்வாதிகாரத்தை நிறுவியது. ஸ்டாலினுடைய தனிநபர் வழிபாட்டை எதிர்ப்பதாகக் கூறி ஆயிரக்கணக்கான கம்யூனிஸ்டுகளைச் சிறையிலிட்டு, கொலை செய்தது. சோசலிச நிர்மாணம் உயர்ந்த கட்டத்தை எட்டிவிட்டது. எனவே பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் மற்றும் பாட்டாளிவர்க்கக் கட்சி ஆகியவற்றுக்குப் பதிலாக 'அனைத்து மக்கள் அரசு', 'அனைத்து மக்கள் கட்சி' என்று மாற்றுவதாக அறிவித்தது. ஏகாதிபத்தியங்கள் நீடிக்கும்வரை உலகப் போர் தவிர்க்க முடியாதது என்ற உண்மையைத் திரித்து உலகப் போர் மூளுமானால் உலகமே அழிந்து போகுமாதலால் ஏகாதிபத்தியங்களுடன் சமாதான சகவாழ்வு என்று கூறி உலகப் புரட்சியைக் கைவிட்டது. ஆயுதப் போராட்டங்களின் மூலமே பாட்டாளி வர்க்கப் புரட்சி சர்வாதிகாரமும் நடக்கும் என்பதை மாற்றி முதலாளித்துவமற்ற பாதையில் - அமைதிவழிப் புரட்சி என்று கூறி துரோகமிழைத்தது.

ருஷ்யாவில் சந்தைப் பொருளாதாரத்தையும், பொருளாதாய ஊக்கமளிப்பையும் புகுத்தி சோசலிசக் கட்டுமானத்தைத் தகர்த்து முதலாளித்துவ லாபம் மற்றும் போட்டியை உருவாக்கியது. சோசலிச விவசாயக் கூட்டுப்பண்ணைகளை முதலாளித்துவ நிர்வாக பாணியில் மறு ஒழுங்கமைப்பு செய்து பண்ணை முதலாளிகளின் ஆதிக்கத்தில் ஒப்படைத்தது. முதலாளித்துவ சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம், மனிதாபிமானம் என்கிற முதலாளித்துவ சித்தாந்தத்தைப் பரப்பியது. இதனால் எல்லாம் இருபதே ஆண்டுகளில் ருஷ்யாவில் கம்யூனிச சமுதாயத்தை நிறுவிவிடப் போவதாக சவடால் அடித்தது. ஏகாதிபத்தியவாதிகள் குருச்சேவைக் கட்டித் தழுவிக் கொண்டனர். முப்பதாண்டுகளுக்குப் பிறகு வந்த கோர்ப்பச்சேவ், ''ருஷ்ய சமுதாயத்தில் மிகப்பெரிய தேக்கத்தைக் கொண்டுவந்து, பொருளாதாரத்தை நிலைகுலையச் செய்துவிட்டது பிரஸ்நேவ் கும்பல்; எங்கும் லஞ்ச ஊழலும் அதிகாரவர்க்க முறைகேடுகளும் மலிந்துவிட்டன. கிளாஸ்நாஸ்த் மற்றும் பிரெஸ்ட்ரோய்க்க என்கிற வெளிப்படையான மறு சீரமைப்புப் புரட்சியின் மூலம் சோசலிச நிர்மாணம் மற்றும் புரட்சியைத் தொடர்வோம்'' என்கிறார்.

ஆனால் குருச்சேவ் விட்ட இடத்தில் தொடங்கி முதலாளித்துவப் பாதையில் முன்னேறுவதுதான் கோர்பச்சேவின் நோக்கம். எனவேதான் அரசுடமை ஆலைகள் மற்றும் கூட்டுப் பண்ணைகளிலேகூட முதலாளித்துவ முறையில் மூலதனப் பங்குகளை விற்பது, ஏகாதிபத்தியங்களின் ஏகபோக கம்பெனிகளை தொழில் துவங்கவிடுவது, ஏகாதிபத்திய கலாச்சாரச் சீரழிவுகளை முற்றாக அனுமதிப்பது ஆகியவை மட்டுமல்ல முதலாளித்துவ நாடாளுமன்ற தேர்தல் மற்றும் ஆட்சிமுறையையே கூட ருஷ்யாவில் புகுத்திவிட்டார். உலக சமாதானம் ஆயுத மற்றும் படைக்குறைப்பு என்று ஏகாதிபத்தியங்களிடம் மண்டியிடுகிறார். குருச்சேவின் அனுமதிவழிப் புரட்சியைக்கூட கைவிட்டு சர்வதேசப் பொதுநலன்கள் சர்வதேச ஒருமைப்பாடு என்று பகிரங்கமாகவே ஏகாதிபத்திய முகாமோடு ஐக்கியப்படுகிறார். இதுவும் போதாது, பூரணமான முதலாளித்துவ சமுதாயமாக, அதன் பழைய பாணிக்கு திரும்ப வேண்டும் என்று நிர்பந்திக்கும் முகமாக இன்னும் கடைகோடி துரோகிகளான போரிஸ் யேல்த்சின் போன்றவர்களை ஏகாதிபத்திய வாதிகள் ஆதரிக்கின்றனர்.

குருச்சேவ்-பிரஸ்நேவ் கும்பலைப் பின்பற்றி மாவோவின் மறைவுக்குப் பிறகு டெங்சியாவோபிங் கும்பல் சீனாவில் கட்சி மற்றும் ஆட்சியைக் கைப்பற்றி முதலாளித்துவத்தை மீட்டது. ''சீனாவில் சோசலிசத்தின் எதிரிகள் ஒரு வர்க்கம் என்கிற ரீதியில் கிடையாது, எனவே வர்க்கப் போராட்டங்கள் பெரிய அளவில் நடக்காது. நான்கு நவீனமயமாக்குதலின் மூலம் அதிவேகத்தில் பொருளாதார வளர்ச்சியை எட்டுவது தான் ஒரே குறிக்கோள்'' என்று டெங் கும்பல் பிரகடனப்படுத்தியது. சோசலிச சொத்துடைமையை அகற்றி தனிச் சொத்துடமையையும், சந்தைப் பொருளாதாரத்தையும், ஏகாதிபத்திய மூலதனத்தையும், கலாச்சார சீரழிவுகளையும் கொண்டுவந்தது. அதுவரை துளிகூட இல்லாத ஆபாச வக்கிர வாழ்க்கை முறை, விபச்சாரம், பாலுறவு நோய்கள் சீனத்தில் தோன்றின. விலைவாசி ஏற்றமும் வேலையில்லாத் திண்டாட்டமும் பெருகியது. கல்வியறிவற்றோர், பெண்ணடிமைத்தனம் ஆகியன கூட அதிகரித்தன லஞ்ச ஊழலும், அதிகார முறைகேடுகளும் தலைவிரித்தாடின. இவை அனைத்தும் சீன அரசே ஒப்புக் கொண்டவைதாம்! ஹைனான் தீவில் மட்டும் கார்கள், மோட்டர் சைக்கிள்கள், வானொளிப் பெட்டிகள் போன்ற ஆடம்பரப் பொருட்களைக் கடத்தி விற்று கட்சி மற்றும் அரசுத் தலைவர்கள் பத்தே மாதங்களில் 1800 கோடி ரூபாய் கறுப்புப் பணம் சேர்த்தாக ஒரு வழக்கு பதிவாகி விசாரணை நடந்துவருகிறது என்றால் பாருங்கள்!

சீனாவில் பொருளாதாரம் மற்றும் கலாச்சாரத் துறையில் முதலாளித்துவ சீரழிவைக் கொண்டுவந்த டெங்கும்பல், அரசியல் துறையில் அதிகாரவர்க்க முதலாளித்துவ சர்வாதிகாரத்தைத் தக்கவைத்துக் கொண்டது. சீர்திருத்தங்களைச் செய்யவில்லை. எனவே முதலாளித்துவ மீட்சியினால் உயிர் பெற்ற பழைய, புதிய முதலாளிகள் கோர்பச்சேவ் பாணியிலான முதலாளித்துவ அரசியல் சீர்திருத்தமோ, மேற்கு நாடுகளில் உள்ள பல கட்சி நாடாளுமன்ற ஜனநாயகத்தையோ கொண்டு வரும்படி இப்போது போராடுகின்றனர். மாணவர்கள் அவர்களுக்குத் தலைமையேற்றுள்ளனர். தமது போராட்டத்துக்கு மக்கள் திரள் ஆதரவைத் திரட்டுவதற்காகத்தான் லஞ்ச ஊழல் ஒழிப்பு முழக்கத்தை முன்வைத்துள்ளார்களே தவிர அதற்கு அடிப்படையான தனிச் சொத்துடமை, சந்தைப் பொருளாதாரத்தை ஒழிக்க வேண்டும் என்று கோரவில்லை.

இவை அனைத்தையும் மூடி மறைத்துவிட்டு கம்யூனிஸ்டுக் கட்சியின் சர்வாதிகாரத்துக்கு எதிராக ஜனநாயகத்துக்கான போராட்டம் அந்நாடுகளில் நடப்பதாக உலகப் பிற்போக்குவாதிகள் சித்தரிக்கிறார்கள். இன்று உலகின் பல நாடுகளிலும் உள்ள பல்வேறு வடிவிலான ஜனநாயக ஆட்சி முறைகள்கூட அந்நாடுகளின் சுரண்டும் ஆளும் வர்க்கங்களின் சர்வாதிகாரம்தான். பூரணமான ஜனநாயகம் என்பது எங்குமே கிடையாது; பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் மட்டும்தான் அதிகபட்சமான, பெரும்பான்மை மக்களுக்கான ஜனநாயகம் நிலவ முடியும் என்றே உலக அனுபவங்கள் காட்டுகின்றன. உலகம் முழுவதும் கம்யூனிச எதிர்ப்பு மற்றும் மனித உரிமைகள் - ஜனநாயகம் ஆகியவற்றுக்கான கூச்சல் போடும் அதே ஏகாதிபத்தியங்கள்தான் தென் ஆப்பிரிக்கா, சிலி, இஸ்ரேல் போன்ற மிருகத்தனமான இனவெறி, நிறவெறி, மதவெறி மற்றும் பாசிச ஆட்சிகளை ஆதரிக்கின்றன. மேலும் பல கட்சி ஜனநாயகம் என்பதும் லஞ்ச ஊழல் அதிகார முறைகேடுகள் நடக்காதவை அல்ல. ஜப்பானின் ரெக்ரூட் பங்கு மார்க்கெட், லாக்கிட் பேர ஊழல், இந்தியாவின் போஃபார்ஸ், நீர்மூழ்கி கப்பல் பேர ஊழல், அமெரிக்காவின் வாட்டர்கேட் மற்றும் ஈரான் - காண்ட்ரா ஆயுதக் கடத்தல் போன்றவையே இதை நிரூபிக்கின்றன.

இவ்வளவு சிக்கல் மிகுந்த சோசலிச நிர்மாணம் மற்றும் சோசலிசப் புரட்சி பற்றிய பிரச்சினை ஆழமாகப் பார்க்காத, கம்யூனிச சித்தாந்தம் மற்றும் அதன் வரலாற்றைக் கற்றறியாத பலரும் 'கம்யூனிசம் தோற்றுப்போனது!' என்கிற பிரச்சாரத்துக்குப் பலியாகின்றனர். இதுவரை மனித வரலாறு படைத்த சித்தாந்த இயக்கங்கள் அனைத்திலும் பார்க்க கம்யூனிசமும், சோசலிசமும்தான் புதியது, இளமையானது. அதன் காரணமாகவே அனுபவக் குறைகளும், தவறுகளும், தோல்விகள் - பின்னடைவுகளும் நேருகின்றன. எனினும் இவை தற்காலிகமானவையே. இன்னமும் கம்யூனிசம் ஒன்றுதான் எல்லாவகையான சுரண்டல்களையும், சுரண்டும் வர்க்கங்களையும், வர்க்க வேறுபாடுகளையும், பிற சமூக ஏற்றதாழ்வுகள் அவலங்களையும் வென்று மனித குலவிடுதலைக்கான ஒரே தீர்வாக இருக்கிறது. கம்யூனிசம் மட்டுமே விஞ்ஞானபூர்வமான உண்மைத் தத்துவமாக இருக்கிறது. எனவே தற்காலிகப் பின்னடைவுகளை முறியடித்து முன்னேறி உலகம் முழுவதும் கம்யூனிசம் வெல்லும் என்பதும் அசைக்க முடியாத உண்மையாகும்!

படிப்பகம்

www.padippakam.com

# இராணுவம், போலீசு, 'நீதி'மன்றம் யாருக்காக?

பராரியா, பீகார் மாநிலத்தின் குக் கிராமம். இந்தியாவின் ஏனைய, கிராமங்களைப் போலவே கூலி ஏழை விவசாயிகளை பெரும்பான்மையாகக் கொண்டு சோகத்தையே அணிகலனாக அணிந்து கொண்டிருக்கும் கிராமம். சென்ற ஆண்டு, பிப்ரவரியில் மீண்டும் ஒரு சோகத்தில், மீளாத் துயரத்தில் மூழ்கியது.

தலைமறைவான கிரிமினல்களை தேடிக் கண்டுபிடிப்பது என்ற பெயரில் 7 'ட்ரக்'குகளில் வந்திறங்கியது 200க்கும் மேற்பட்ட போலீசு பட்டாளம். தனது தேடுதல் வேட்டையை துவக்கியது. குற்றவாளிகளை அல்ல. அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த விவசாய கூலிப் பெண்களை, அவர்களுடைய தாய்மார்களை ஒரு சேர கற்பழித்தது. மகன், தந்தை, கணவன், சகோதரன் இவர்கள் கண் முன்னாலேயே அந்த கொடூரம் நடந்தது. அந்த பயங்கரத்தை இப்போது நினைவு கூர்ந்தாலும் கதறி அழுகிறார்கள் தாய்மார்கள். தலைகுனிந்து கேவுகிறார்கள் அச்சகோதரிகள். இந்த அவமானம் இந்தியாவையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஆவேசக் குரல்கள் எழுந்தது. கண்துடைப்புக்காக, அப்போது, குற்றவாளிகள் மீது அரசு வழக்கு தொடுத்தது. 15 மாதங்கள் கழித்து இப்போது, தீர்ப்பு வந்திருக்கிறது. குற்றவாளிகளை தண்டித்து அல்ல! தீர்ப்பு என்ற பெயரில் கற்பழிக்கப்பட்டவர்களை மேலும் அவமானப்படுத்தி கெக்கலிக்கிறது அரசும் நீதிமன்றமும்!

72 பக்கங்களைக் கொண்ட அந்த நீண்ட தீர்ப்பு தனது ஒவ்வொரு வார்த்தையிலும் கற்பழிக்கப்பட்டவர்களை ஊசியால் குத்துகிறது. கீழ்த்தரமான வசவுகளால் அவர்களது தன்மானத்தை, கேலி செய்கிறது. கடைகோடி தன்மைக்குச் சென்று அவர்களது ஏழ்மையை, நக்கல் செய்கிறது. அறியாமையில் உழலும் பாதிக்கப்பட்ட கூலி ஏழை சகோதரிகளை, தற்கொலைக்கு தூண்டுகிறது. தீர்ப்புக்காக அல்ல, தீர்ப்பில் உபயோகப்படுத்தப்பட்ட வார்த்தைகளுக்காக அதன் கிரிமினல் நோக்கங்களுக்காக முதலில் அக்கூட்டத்தை நாம் கழுமரத்தில் ஏற்ற வேண்டும்.

தீர்ப்பு சொல்கிறது: ''அச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு அறிவித்த 1000 ரூபாயை வாங்குவதற்காக கற்பழிக்கப்பட்டதாக அவர்கள் திரித்து சொல்லவும் வாய்ப்பிருப்பதை முற்றாக நிராகரித்து விட முடியாது. ஏனெனில் ஆயிரம் ரூபாய் என்பது அவர்களுக்கு மிகப்பெரிய தொகை''. ''அவர்கள் அனைவரும் கேள்விக்கிடமற்ற ஒழுக்கநெறி குடும்ப பின்னணிக் கொண்டவர்கள் என்று சொல்வதற்கு ஆதாரம் ஏதுமில்லை. அவ்வாறான தூய ஒழுக்கநெறியை அவர்கள் உயர்வாக மதிப்பவர்கள் என்றும் கருதவாய்ப்பில்லை. ஏனெனில் அவர்கள் சாதாரண கூலிகள்... கற்பழிக்கப்பட்டதாக கூறப்படும் நிமியா பெண் உறுப்பில் இறந்த சினைமுட்டை (Sperm) இருந்ததாக மருத்துவ அறிக்கை கூறுகிறது. ஆனால், அப்பெண்ணின் வாக்குமூலத்தின் படியே அவர் கணவனிடமிருந்து நான்காண்டு காலமாக பிரிந்திருப்பதாக கூறுகிறார். அவர் ஒழுக்கமற்றவர் என்பதையே இது காட்டுகிறது''

''கற்பழிக்கப்பட்டதாக கூறும் ரதியா தேவி, கவிழ்ந்த நிலையில் தான் கீழே தள்ளப்பட்டதாகவும், இரண்டு பேர் தனது கையையும், காலையும் பிடித்துக் கொண்டனர் என்றும் அந்த நிலையில் மூன்று போலீசுக்காரர்கள் தன்னை கற்பழித்ததாகவும் கூறுகின்றார். அப்படிப்பட்ட ஒருநிலையில் (கோணத்தில்) கற்பழிப்பது சாத்தியமில்லை''... ''கற்பழிக்கப்பட்டதாகக் கூறப்படும் இன்னொருவரான தரியா தேவியினை அங்க அடையாளங்களில் கழுத்துக்கு மேல் ஒரு மச்சம் இருப்பதாக மருத்துவ அறிக்கை கூறுகிறது. ஆனால், நன்றாக தெரியும்படி இவருக்கு கழுத்திலே பச்சை குத்தியிருக்கிறது. அது அடையாளங்களில் குறிப்பிடப்படவேயில்லை. மேலும் அவர் கேள்விக்கான பதில்களை ஒழுங்காகச் சொல்லவில்லை. சில நேரங்களில் திடீரென கதறி அழுகிறார்! இன்னும் சில நேரங்களில் மேற்கொண்டு எதுவும் பேச முடியாது என்று மறுக்கிறார். இந்த உண்மையை(!) எல்லாம் வைத்து ஆராயும் போது உண்மையான நபர் இவர் தானா என்பது கேள்விக்குரியது''

''...கற்பழிப்பு என்பது விதிவிலக்கான(?) சூழ்நிலைகளில் மட்டுமே நடக்க முடியும். வயது வித்தியாசம், தகுதி வித்தியாசம் உடைய பல மனிதர்கள் ஒன்று சேர்ந்து கற்பழித்திருக்க முடியாது. அதுவும் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் மற்ற போலீசுகாரர்கள் மத்தியில் தன் ''பேண்ட்டை'' உருவுவது நம்பக்கூடியதா?'' ''முதல் குற்றப் பத்திரிக்கையில் கூட, பாதிக்கப்பட்டவர்கள் குற்றவாளிகளைப் பற்றி அடையாளம், விபரங்கள் தரவில்லை. மருத்துவ அறிக்கையில் கற்பழிக்கப்பட்டதற்கான எந்த ஆதாரமும் குறிப்பிடப்படவில்லை. பாதிக்கப்பட்டதாக கூறப்படும் 5 பேர்களில் இருவருடைய பெண் உறுப்புகளில் மட்டுமே இறந்த சினைமுட்டை இருந்ததாகக் கூறப்படுகிறது. குறைந்தது 48 மணி நேரத்திற்கு முன் அவர்கள் உடலுறவு கொண்டிருக்கிறார்கள் என்பதற்கான ஆதாரம் மட்டுமே இது''



போலீசின் வெகுஜன கற்பழிப்புக்கு ஆளாகி அவமானத்தின் விளிம்பில் நிற்கும் பராரியா கிராமத்தின் உழைப்பாளி பெண்கள்



பராரிய கிராமத்து வெகுஜன கற்பழிப்பைத் தலைமை ஏற்று நடத்திய போலீசு அதிகாரி ஏ.கே.சட்டர்ஜி. இவனுக்கு மீண்டும் பதவி அளித்து கௌரவிக்கிறது அரசு

படிப்பகம்

www.padippakam.com



ஆபாசசித்திரவதைகளை அரங்கேற்றும் ஆந்திர போலீசு அதிகாரி ராஜீவ் திரிவேதி; முழு நிர்வாணப்பட்டு அலிகளுடன் தனிக் கொட்டடிகளில் அடைக்கப்பட்ட ஜனதா தள் தலைவர்கள் என்.வெங்கட்ராவ், அசோக் ஜெயின்; பத்திரிக்கையாளர் சிவகுமார்; கடுமையாக தாக்கப்பட்ட முன்னாள் நீதிபதி புன்னையா.

தஞ்சை கீழ்வெண்மணி தீர்ப்பின் நகல் தான் பராரியா சகோதரரிகளுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. ஊரின் பண்ணைப் பிரபுவாக சகல அந்தஸ்த்துக்களுடன் 'கௌரவமாக' வாழும் ஒருவன் சேரிக்கு சென்று ஏழைகளின் குடிசைகளுக்கு தன் கையால் தீவைக்குமளவு ஈவிரக்கமற்ற அநாகரிகமான மனிதனாக ஒருகாலும் மாறமாட்டான் என்று இருஞ்சூர் கோபாலகிருஷ்ண நாயுடுவை நிரபராதி என்று தீர்பளித்தது நீதிமன்றம். இலவசமாக சில நூறு ரூபாய்கள் கிடைக்கும் என்றால், தாங்கள் கற்பழிக்கப்பட்டதாக கூலி பெண்கள் பொய் கூறுவதில் வியப்பேதுமில்லை என்று பீகார் நீதிமன்றம் இன்று தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

ஆளுங்கும்பல், அதிகார வர்க்கத்தின் பார்வையில் உழைக்கும் மக்கள் யார் என்பதை தங்களுடைய அதிகார மண்டபத்திலிருந்து இன்னொருமுறை பிரகடனப்படுத்தி இருக்கிறார்கள். உண்ண உணவு, இருக்க இடம், கட்ட கந்தை உழைக்கும் மக்களுக்கு இல்லை. எனவே, ஒழுக்கம் என்பது மட்டும் எப்படி அவர்களுக்கு இருக்க முடியும் என்று நக்கல் செய்கிறார்கள். பணம் படைத்த அதிகாரத்திலுள்ள கௌரவமான குடிமக்களுக்கு மட்டுமே அவையெல்லாம் உண்டு என்கிறார்கள். ஆனால், எல்லா சமயங்களிலும், இவ்வாறு ஆளும்வர்க்க கும்பல் தங்களுடைய இழிவான இச்சைகளை, நோக்கங்களை ஒத்துக்கொள்ள துணிவதில்லை. அவர்களுடைய வெறிகொண்ட பிரதிநிதிகள் மட்டுமே இவ்வாறு தங்கள் வர்க்கத் தன்மையை வெளியில் இழித்துப் போட்டுவிடுகிறார்கள். இவை நமது பிறப்புரிமை, இதை நாம் ஏன் மறைக்க வேண்டும் என்று அகங்காரத்தோடு கேட்கிறார்கள்.

◇ ◆ ◇

பராரியா, சகோதரரிகள் மட்டுமல்ல; அவர்களுக்கு நேர்மேலே, வடக்கிழக்கில் வாழும் மணிப்பூர் மாநிலத்தின் சகோதரிகளுக்கு இழைக்கப்படும் அவமானம் இன்னும் கொடியது. சொந்த மாநிலத்திலேயே அவர்களால் நடமாட முடியவில்லை. பாதுகாப்புக்காக என்று சொல்லி அங்கு சென்ற இந்திய ராணுவம், அசாம் துப்பாக்கி படை ஆகியன துப்பாக்கி முனையில் அச்சகோதரிகளின் கற்பைச் சூறையாடுகின்றன. துப்பாக்கி முனையில் அவர்களது உழைப்பை பறிக்கின்றன. பணிய மறுப்பவர்களை துப்பாக்கி முனை 'பயனெட்'டால் குத்தி கிழிக்கிறது. பிணங்களை மக்களின் பார்வைக்கு பகிரங்கமாக மரத்தில் தொங்கவிடுகிறது.

தேசியய இன விடுதலைக்காகப் போராடும் ''நாகா'' தேசிய சோசலிச கவுன்சில் (NSCN) என்ற தலைமறைவு இயக்கத்தை ஒழிப்பதற்காக இரண்டாண்டுகளுக்கு முன் 'நீலப்பறவை' என்ற பெயரில் மணிப்பூர் மக்களின் மீது அரசு பயங்கரத்தை கட்டவிழ்த்து விட்டது பாசிச ராஜீவ் அரசு.

ராணுவ அட்டூழியங்களை வெளி உலகுக்கு தெரிவிக்கும் பொருட்டு, மக்கள் உரிமைக்கான நாகா மக்கள் இயக்கம் (NPMHR) என்ற அமைப்பின் சார்பில், நந்திபா அக்சார் என்ற பெண் ஊழியர் உண்மை நிலை அறிய மணிப்பூர் சென்றார். நீலப் பறவை நடவடிக்கை கோர தாண்டவமாடிய சேனாபடி மாவட்டத்தில் நடந்த கொடுமைகளை திரட்டிய போது அடையாளம் தெரியாத நபர்களால் கடுமையாக மிரட்டப்பட்டார். கூசும் வார்த்தைகளால் ஏசப்பட்டார். கிராமப்புறங்களின் உள்ளே செல்ல முடியாமல் தீராத தொல்லைகளின் நடுவே, சில வாரங்களோடு திரும்பிவந்தார்.

அதற்கடுத்து, நண்பரைச் சந்திக்க தற்செயலாக மணிப்பூர் சென்றார், அன்னா மென்டிஸ் என்ற மண்ணியல் ஆராய்ச்சியாளர். பெண்மணியாய் இருந்தாலும், மணிப்பூரின் கிராமப்புறங்களில் நடக்கும் ராணுவக் கொடுமைகளை துணிந்து வெளி உலகுக்கு தெரிவித்தார். இவருக்கு உதவியாக இன்னொரு ஆராய்ச்சியாளரும் சேர்ந்துக் கொள்ள ரகசியமாக இருவரும் தம் பணியைத் தொடர்ந்தனர்.

கிராமப்புறங்களில் சில அடிகள் தூரம் நகர்ந்தாலே அடிக்கடி தேவையில்லாமல் ராணுவக் குறுக்கீடுகள்; ராணுவத்தினரின் எரிச்சலூட்டும் பல மணி நேர கேள்விகள்; போக்குகாட்டி தங்களை நாள் முழுக்க ஒரே இடத்தில் முடக்குவது - ஆகிய செய்கைகளால் விழிப்புற்று மக்களுக்கும் ராணுவத்திற்குமான உறவுகளை கூர்ந்து நோக்கத் தொடங்கினார்கள். பல அதிர்ச்சியூட்டும் விபரங்களை சேகரித்தனர். ஒவ்வொரு மலைக்கிராமங்களிலும், ராணுவத்தால் தங்களுக்கு நேர்ந்த கொடுமைகளை மக்கள் பரிதாபகரமாக விவரித்தனர்; இவர்களை அன்போடு உபசரித்தனர்.

யாருமே உட்புக முடியாத பல நூறு மலை கிராம மக்களின் வாழ்வை ராணுவம் சூன்னியமாக்கி விட்டதை ஆதாரங்களோடு வெளிஉலகுக்கு தெரிவித்தனர் இந்து மத வெறி தலைக்கேறிய ராணுவக் கும்பல் பல கிராமங்களில் கிருத்துவக் கோயில்களை மக்களைவிட்டே இடித்திருப்பது தெரிய வந்தது. இடிக்கப்பட்ட அக்கோயில்களின் பொருட்களைக் கொண்டே தங்களுக்கு ராணுவ முகாம்களை அமைத்துத்தர மக்களை துப்பாக்கி முனையில் நிர்பந்திக்கும் கொடுமை வெளி உலகுக்கு தெரிய வந்தது. பணிய மறுப்பவர்களை படுகொலை செய்து மரங்களில் தொங்க விடுவது அன்றாட நிகழ்ச்சி என்ற விபரம் வந்தது. கௌங்டீ, சிம்பியாங், ஷுக்ரல், ஷுயூமி, டோலி, இப்பகுதிகளில் மக்கள் ஒருவருக்கொருவர் வெளியிடங்களில் பேசிக்கொள்வதற்கு கூட உரிமையில்லை. தாங்களும் அவ்வாறு மிரட்டப்பட்டதை கதைகதையாய் விவரித்தனர், அந்த ஆராய்ச்சியாளர்கள்.

மதவெறி, இனவெறி பயங்கரவாதிகளைப் பற்றி வாய்கிழிய கத்தும் பாசிச ராஜீவ் கும்பலின் அரசு பயங்கர வாதத்தால் வடக்கிழக்கிந்திய மக்கள், குறிப்பாக மலைவாழ் மணிப்பூர் மக்கள் அணுஅணுவாக செத்துக் கொண்டிருப்பதை உயிரை பணயம் வைத்து வெளி உலகுக்கு கொண்டு வந்தனர், அந்த தேசபக்த ஆராய்ச்சியாளர்கள்.

◇ ◆ ◇

யாருமே உட்புக முடியாத வடகிழக்கு மாநில மலை கிராமங்கள் மட்டுமல்ல, இதோ தமிழகத்தின் அண்டை மாநிலமான ஆந்திரத்தின் வடகிழக்கே இருக்கும் நகரம் ராஜமுந்திரி. காக்கி சட்டைக்குள்ளே இங்கு மறைந்திருக்கும் மனித மிருகங்களால் அந்நகரமே பீதிக்குள்ளாகி நிற்கிறது.

'88 ஆம் ஆண்டில் பயிற்சியை முடித்து விட்டு நேரடியாக ஏ.எஸ்.பி. போலீசு அதிகாரியாக பதவியேற்றிருக்கும் ராஜீவ் திரிவேதி என்ற காக்கிசட்டை மிருகம், அதிலொன்று. தனது படையணிவரிசையில் புதி

படிப்பகம்

www.padippakam.com




அசாம் துப்பாக்கிப் படையின் அட்டூழியங்களை எதிர்த்து மணிப்பூரில் மாணவர்கள் - இளைஞர்கள் நடத்தும் ஆர்ப்பாட்ட ஊர்வலம்.

தாக சேர்ந்தவுடன் அதன் உச்சி முகர்ந்து அரசியல் எதிரிகளின் மீது பாயவிட்டார், பாசிச என்.டி.ஆர்.

''ராஜமுந்திரி நகர மக்கள், தங்களுடைய நேரத்தையும், பணத்தையும், பெண்ணுக்கும் போதைக்கும் வீணடிக்கிறார்கள். ராஜமுந்திரி நகரத்தின் வசீகரமான சாலைகளையும், பசுமையான பூங்காக்களையும் அவர்கள் ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை (அடிக்கடி, ஆர்ப்பாட்டம், பேரணி, ஊர்வலம், பொதுக்கூட்டம் நடத்தி அதன் அழகைக் கெடுக்கிறார்கள்) என்று மக்களுக்காக சிந்தித்து தேசத்துக்காக உழைக்க ஆரம்பித்தார், ராஜீவ் திரிவேதி.

பண முதலைகளும், வர்த்தக சூதாடிகளும் ஊழல் அதிகாரிகளும் கறைபடிந்த உள்ளூர் அரசியல் தலைவர்களும் சில பத்திரிக்கையாளர்களும் ''வன போஜனம்'' மாலை விருந்து'' என்று கும்பல் சேர்ந்து சமூக குற்றங்களில் ஈடுபடுவதாக, நெற்றிக் கண்ணை திறந்தார், ராஜீவ் திரிவேதி. இவ்வாறான காரணங்களுக்காக என்று, திடீர் வேட்டைகள் நடத்தி அரசியல் எதிரிகளை கும்பல் கும்பலாக சிறைபிடித்தார்.

கடந்த பிப்ரவரி மாதம் அம்மாநிலத்தில் நடந்த நகராட்சித் தேர்தல்களில் என்.டி. ஆரின் அரசியல் எதிரிகளை மண்ணை கவ்வ வைக்க இப்படி குறிவைத்து அடித்தார். அட்டூழியம், அநாகரிகம், அரசியல் பழிவாங்கல் என்று அலறினார்கள், சிறைபிடிக்கப்பட்ட காந்தியின் சீடர்கள். மேலும் அவர்களை கதிகலங்க அடிக்க அதிநவீன அதிர்ச்சி வைத்தியம் அறித்தார், ராஜீவ் திரிவேதி. சிறையில் அனைவரும் முழுநிர்வாணமாக்கப்பட்டு இரண்டு மூன்று அலிகளுடன் சேர்த்து தனித்தனி கொட்டடியில் அடைக்கப்பட்டனர். பீதியடைந்த காந்தியின் சீடர்கள் கிலிபிடித்து அலறினார்கள். (காந்தியின் வழியில் பஜனைகளை பாடி சமாளித்தார்களோ என்னவோ தெரியவில்லை)

இவர்களில் பெரும்பாலோர் தேசிய முன்னணியின் தூணாக இருக்கும் ஜனதா தள் கட்சியின் நடுமட்ட தலைவர்கள். இருந்தாலும், என்.டி.ஆருக்கு 'தொழில்' முறையில் எதிரிகள்.

ராஜீவ் திரிவேதியின் இப்படிப்பட்ட அதிகார அத்துமீறல்கள் அதிகமானவுடன் அவைகளை விசாரிக்க நிர்ப்பந்தம் வலுத்தவுடன் அதை ஏற்றுக் கொண்டார் என்.டி.ஆர்! புன்னையா என்ற முன்னாள் உயர்நீதி மன்ற நீதிபதியை அவ்வேலைக்கு நியமித்து ராஜமுந்திரிக்கு வழியனுப்பி வைத்தார். குருவின் குறிப்பறிந்த ராஜீவ் திரிவேதி, அவரையும் தனது வழக்கமான பாணியில் கவனித்தார். விசாரிக்க வந்த நீதிபதியை தொடர்ந்து மூன்று நாட்கள் கம்பி எண்ண வைத்து உடல் முழுக்க காயத்தோடு வழியனுப்பி வைத்தார். இனி, என்.டி.ஆர். விசாரணை கமிஷன் பற்றி பேசினாலே, முன்னாள் நீதிபதிகள் அனைவரும் ஆந்திர மாநிலத்தை விட்டே ஓடிவிடுவார்கள்!

ஓட்டு சீட்டு அரசியல் எதிரிகளை மட்டுமல்ல! அப்பாவி ராஜமுந்திரி மக்களையும் இதே வழியில்தான் துன்புறுத்தி இன்பம் கண்டார், ராஜீவ் திரிவேதி. சில மாதங்களுக்கு முன் படுகொலை செய்யப்பட்ட ரங்காராவ் என்ற காங்கிரசு குண்டனுக்கு ஆதரவாக திரண்ட காபு சாதியினர் - காங்கிரசுக் காரர்களின் ஆர்ப்பாட்டத்தை ஒடுக்க மூளையாக இயங்கியவரும் இந்த ராஜீவ் திரிவேதிதான். அதைத் தொடர்ந்து, இதுநாள் வரையில் காபு சாதியின் அப்பாவி மக்களையும் நர வேட்டையாடுகிறார்.

சிறுசிறு குற்றங்களில் ஈடுபடும் அச்சாதியினரை பகிரங்கமாக விளக்கு கம்பங்களில் கட்டி அடிப்பது, இயந்திர துப்பாக்கியை அவர்களது மார்புக்கு நேராக வைத்து மிரட்டுவது என வெறி பிடித்தவராக அலைகிறார் ராஜீவ் திரிவேதி. இதனால், இவருக்கு 'மறைகழண்டவன்' என்ற பட்டபெயரும் உண்டு!

பிரதானமாக, போராடும் மக்களை ஒடுக்குவதற்காகவே, புரட்சிகர சக்திகளை வேரறுப்பதற்காகவே கட்டியமைக்கப்படும் திரிவேதி போன்ற கிரிமினல்களைக் கொண்ட அரசு எந்திரம், தனது அதிகாரத்தைப் பற்றி கேள்வி எழுப்பினால், அது தன்னவனே யானாலும் அவர்களையும் ஒரு இடிஇடித்து உராய்வு ஏற்படுத்தும் என்பதையே ராஜமுந்திரி சம்பவங்கள் நிரூபிக்கின்றன.

பராரியா தீர்ப்பும், மணிப்பூர் ராணுவ அட்டூழியங்களும் ஆந்திர ராஜ முந்திரி போலீசின் குரூரமும் எதை நிரூபிக்கின்றன. நீதிமன்றம், ராணுவம், போலீசு இவை நீதியின் நிலைகலன்கள், சகலருக்கும் பொதுவானவை என்ற தங்களுடைய பித்தலாட்டக் கருத்தை அவை இன்னொரு முறை அவிழ்த்து போட்டதுமட்டுமல்ல. இன்னும் இந்த நிறுவனங்களைப்பற்றி கௌரவமான கருத்தைக் கொண்டிருக்கும் நடுத்தர வர்க்கத்தின் அரசியல்வாதிகளின் பிரமைகளையும் உடைத்தெறிந்திருக்கிறது. குறிப்பாக ராஜ முந்திரி போலீசின் குரூரங்களுக்கு சிக்கியிருப்பவர்களில் பெரும்பாலோர், அரசு எந்திரத்தின் செயல்பாடுகளை அதன் அத்துமீறல்களை எந்த காலத்திலும் எதிர்த்தவர்கள் அல்லர். மாறாக, அதன் செயல்பாடுகளுக்கு நியாயம் கற்பித்தவர்கள், எல்லா சமயங்களிலும் ஆதரித்தவர்கள்.

அதே ஆந்திராவில், உயிர் வாழ்வதற்காகப் போராடும் உழைப்பாளி மக்கள், குறிப்பாக அப்பாவி பழங்குடிகள்- அவர்களின் போராட்டங்களுக்கு துணைநிற்கும், தலைமைதாங்கும் புரட்சிகர அமைப்புகளும் மூர்க்கமாக அடக்கப்படுகின்றன. போலீசின் ஒவ்வொரு வெற்றிகரமான மோதல்களுக்கு பிறகு போலீசுக்கு பட்டயங்களும், புதிய தகுதிகளும் கொடுத்து ஊக்குவிக்கின்றன ஆளும் வர்க்கங்கள். இதைப் பற்றி எந்த காலத்திலும் கேள்வி எழுப்பாத, நாகரீகமான அறிவாளிகள், இப்போது போலீசின் அட்டூழியங்களைப் பற்றி கனல் தெறிக்க பேசுகிறார்கள்.

குழந்தைத்தனமாக அவர்கள் நினைப்பது போல், போலீசின் குரூரங்கள், அடக்குமுறைகள், எவர் மீதும் எந்த காலத்திலும் பறையடித்து பிரகடனப்படுத்திவிட்டு அரங்கேற்றப்படுவதில்லை. போலீசின் அட்டூழியங்கள் எங்கோ, யார் மீதோ நடப்பதாக ஒதுங்கியிருந்தால் அது அடுத்து நம் கதவையும் தட்டும் என்பதைத்தான் மேற் கூறிய கொடூரங்கள் நிரூபிக்கின்றன. அரசின் அடக்குமுறை எந்திரங்கள் என்பதே, 'சமாதான' காலங்களில் உள்நாட்டை சூறையாடவும், போர் காலங்களில் வெளிநாட்டை சூறையாடவும் ஆக்கிரமிக்கவும் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு நிறுவனம். இதன் செயல்பாடுகளுக்கு மக்களின் சார்பாக, அதிகாரபூர்வமான முத்திரைக்குத்தும் பணிக்குதான் நீதிமன்றங்கள் இருக்கின்றன. ஆளும் வர்க்கங்களால், இவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்டு, பணிவான அவர்களது சேவகர்களால் இயக்கப்படும் இந்நிறுவனங்கள் தங்களுடைய நடவடிக்கைகளை இடம், காலம், நபர்கள் என்று பஞ்சாங்கம் பார்த்து துவக்குவதில்லை. இந்த படிப்பினைகளை உணர்ந்து புயல் வேகத்தில் நாம் ஒன்றுதிரண்டு எதிர்க்காதவரை, நாளை நமது சகோதரியும் கற்பழிக்கப்படலாம்! நமது வீடும் சூறையாடப்படலாம்!

— பச்சையப்பன்



படிப்பகம்

www.padippakam.com

## ‘இடது’ - வலது லடாய்!

# போலிகளின் குடுமிபிடி சண்டை!

புரட்சியைப் பூஜையறையில் வைப்பது, ராஜீவுக்கு ஐந்தாம் படையாக வேலை செய்வது, ரஷியாவை ஆதரிப்பது என்ற பொதுவான நோக்கத்தில் ஒன்றுபட்டு 'இடதுசாரி' ஐக்கிய முன்னணியைக் கட்டி கூடிக் குலாவிய 'இடது'களும் வலதுகளும் இப்போது நாய்ச் சண்டையில் இறங்கி விட்டனர். கடந்த மே 24 அன்று மே.வங்கத்தில் 4 மாவட்டங்களில் வலதுகள் 'இடது'களுக்கு எதிராக சாலை மறியல் போராட்டத்தை நடத்தினர். அண்மைக் காலமாக மே.வங்கத்தில் சணல் ஆலைகள் தொடர்ந்து கதவடைப்பு செய்யப்பட்டு ஏறத்தாழ 50,000 தொழிலாளர்கள் பட்டினிச் சாவுக்குத் தள்ளப் பட்டுள்ளதைக் கண்டித்து ஆளும் 'இடது சாரி' அரசுக்கு எதிராக இப்போராட்டத்தை நடத்தினர். அப்பகுதியின் வழியே வந்த நல்வாழ்வு - நிவாரணத்துறை மந்திரி



வலதுகளின் சாலை மறியல் போராட்டத்தின் போது கெரோ செய்யப்பட்ட மே.வங்க நல்வாழ்வு - நிவாரணத் துறை மந்திரி சாயாபீரா.

திருமதி சாயாபீராவின் காரைச் சூழ்ந்து கொண்டு ஒரு மணி நேரத்திற்கும் மேலாக கெரோ போராட்டம் நடத்தி பீதிக்குள்ளாக்கினர். மூடிய ஆலைகளை திறக்கக் கோரி 5,000க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பங்கேற்ற இப்போராட்டத்தால் கல்கத்தா - பம்பாய் சாலை போக்குவரத்து அன்று கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

'இடதுசாரி' ஒற்றுமையிலிருந்து தொடங்கி 'இடது' - வலது போலிக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஒற்றுமையை நோக்கி முழங்கி வந்த இவர்கள் இன்று ஒருவருக்கொருவர் மோதிக் கொள்வதைப் பார்த்து பலரும் வியப்பில் புருவத்தை உயர்த்துகின்றனர். அப்பாவி அணிகளோ குழம்பிப் போய் நிற்கின்றனர்.

கடந்த பத்தாண்டுக்கும் மேலாக ஆளும் 'மார்க்சிஸ்டு'கள் உழைக்கும் மக்களுக்கு எதிராகவும் வலதுகளுக்கு எதிராகவும் தாக்குதல் நடத்திய சம்பவங்கள் ஏராளம். அப்போதெல்லாம் வாய் மூடிக் கிடந்த வலதுகள் இன்று பாதிக்கப்பட்ட தொழிலாளர் மீது திடீர் கரிசனை பிறந்து 'இடது'களுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்குவது ஏன்?

'இடது' - வலதுகளுக்கிடையே நடப்பது அரசியல் - சித்தாந்த மோதலே அல்ல. தோற்றத்தில் மோதலாகத் தெரிந்தாலும் இது வழக்கமாக ஓட்டுப் பொறுக்கிகள் கையாளும் ஒரு உத்திதான். கூட்டணி மந்திரி சபையில் தமது கட்சிக்கு கூடுதல் பதவிக்காக, தேர்தலில் கூடுதல் தொகுதிகளை தமது கட்சிக்கு ஒதுக்குவதற்காக, அரசாங்க சலுகை - சன்மானங்களைச் சூறையாட தமக்கு கூடுதல் பங்கு கோருவதற்காக, விரக்தி அடைந்துள்ள தமது கட்சி அணிகளை உயிரூட்டுவதற்காக - இப்படி பல நோக்கங்களுக்காக ஆளும் கூட்டணியிலுள்ள கட்சிகள் போராட்டங்கள் நடத்துவதும், தமது பலத்தைக் காட்டி ''பிளாக்மெயில்'' செய்து நிர்பந்திப்பதும் ஓட்டுக் கட்சிகள் கையாளும் வழக்கமான உத்திதான். ஒரே கட்சியிலுள்ள பல்வேறு கோஷ்டிகள் கூட தமது நோக்கங்களைச் சாதிக்க இந்த உத்தியைக் கையாளுகின்றன. இதே பாணியில் தான் இப்போது வலதுகளும் போராட்டம் நடத்துகின்றனர்.

மே.வங்கத்தில் ஆளும் மார்க்சிஸ்டுகளின் கைக்கூலி சங்கமாக சி.ஐ.டி.யு. மாறி, துரோக மிழைப்பதால் கட்சி அணிகளும் தொழிலாளிகளும் அதிருப்தி யடைந்துள்ளனர். இவர்களை வளைத்துப் போடுவதன் மூலம் ஒதிய மரம் போல கட்சியை ஓகோவென வளர்த்துவிடலாம் என்று வலதுகள் கணக்குப் போடுகின்றனர். இந்த நோக்கத்தை ஈடேற்றவும் தற்போதைய மோதல் கொள்கை உதவும் என நம்புகின்றனர்.

தமக்குள் அரசியல் - சித்தாந்த கொள்கை வேறுபாடுகள் இருப்பதாக இவ்விரு போலிக் கம்யூனிஸ்டுகளும் கூறிக் கொண்டாலும், சாராம்சத்தில் அவர்களுக்கிடையே வேறுபாடு ஏதுமில்லை. தேசிய, சர்வதேசிய விவகாரங்களில் ஒத்த நிலைப்பாடு, ராஜீவை நீக்கிவிட்டு இடதுசாரி - மதச் சார்பற்ற ஜனநாயக சக்திகளின் கூட்டணி ஆட்சியை நிறுவுவதில் ஒத்த கருத்து, ரஷிய ஏகாதிபத்திய ஆதரவு, ஈழ ஆக்கிரமிப்புக்கு ஆதரவு, எதிர்க்கட்சி கூட்டணிக்குள் ராஜீவின் ஐந்தாம் படையாக செயல்படுவது முதலான அனைத்திலும் ஒரே நிலைப்பாட்டைத் தான் கொண்டுள்ளனர்.

இந்த மைய விவகாரங்களில் ஒன்றுபட்டாலும் நாற்காலியைப் பிடிக்கும் தேர்தல் உத்தியில் (இதை Tactics - தந்திரம் என்று அவர்கள் கௌரமாக அழைக்கிறார்கள்) இவர்களுக்கிடையே வேறுபாடு நிலவுகிறது. பாரதீய ஜனதா போன்ற வகுப்புவாத சக்திகளுடன் தேசிய முன்னணி கூட்டணி சேர்ந்தால் அதை ஆதரிக்க மாட்டோம் என்கிறது வலது. கூட்டணி சேராமல் தொகுதி உடன்பாடு வைத்துக் கொண்டால் தவறில்லை எனகிறது இடது. தமிழகத்தில் முஸ்லிம்லீகுடன் கூட்டணி சேர்ந்துள்ள தி.மு.க வுடன் கூட்டுச் சேர்ந்து 10 எம்.எல்.ஏ பதவியைப் பிடித்ததை தமது தந்திரத்துக்கு (Tactics) கிடைத்த வெற்றியாக மார்தட்டுகிறது. இதன்படி காங்கிரசல்லாத வகுப்புவாத சார்பற்ற ஜனநாயக சக்திகளை ஆதரிப்பது என்ற பெயரில் ஆந்திராவில் தெலுங்கு தேச கட்சியையும் ஆட்சியையும் இடதுகள் ஆதரிக்கின்றனர். என்.டி.ஆரின் கூஜாவாக இடதுகள் மாறிவிட்டனர் என்று வலதுகள் கடுமையாக சாடுகின்றனர்.

கோர்ப்பசேவின் முதலாளித்துவ சீர்திருத்தங்களை இரண்டு போலிகளுமே ஆதரிக்கின்றனர். நக்சல் பாரி புரட்சியாளர்களை ஆதரித்த தோழர் மாவோவை இருவரும் எதிர்க்கின்றனர். அதே சமயம் ஸ்டாலின் பற்றிய ரஷிய நிலைப்பாட்டில் தமக்கு மாறுபட்ட கருத்து உள்ளதாக இடதுகள் கூறுகின்றனர். வகுப்புவாத பிரிவினை வாத சக்திகளுக்கு எதிராக காங்கிரசு நடத்தும் போருக்கு இடதுசாரிகள் ஆதரவளிக்க வேண்டும் என்ற பாசிச ராஜீவின் அறை கூவலை வலதுகள் வரவேற்று ஆதரிக்கின்றனர். ஆனால், முற்றாக அம்பலப்பட்டு போவோமோ என்ற அச்சத்தில் விமர்சனத்துடன் கூடிய ஆதரவு தருவதாக இடதுகள் பசப்புகின்றனர்.

இப்படி தமக்குள் வேற்றுமையில் ஒற்றுமை கண்டு வந்த போலிகள் இன்று எதிரும் புதிருமாக நின்னு ஒருவரை யொருவர் சாடிக் கொள்கின்றனர். ''இந்தப் போராட்டம் மூடிய ஆலைகளை திறக்காது; இது தேவையில்லாத போராட்டம். போராட்டத்தை வலதுகள் நடத்தினால் இடதுசாரி அரசு சட்டம் ஒழுங்கைக் காக்க உரிய நடவடிக்கை எடுக்கும்'' என்று கொக்கரித்தார் மார்க்சிஸ்டு முதல்வர் ஜோதிபாசு. உடனே, 'மத்திய அரசுக்கு எதிராக நீங்கள் நடத்திய போராட்டங்கள் என்னத்தை சாதித்தது?' என்று எகிறிப் பாய்ந்தனர் வலதுகள். அவர்கள் ஐக்கியப்படா விட்டாலும் தத்தமது வேறுபட்ட தந்திரங்களுடன் ஒரே கொள்கையைத்தான் செயல் படுத்துகின்றனர். மற்றபடி அவர்களுக்கிடையே சித்தாந்த - அரசியல் மோதலோ, போராட்டங்களோ ஒரு புடலங்காயும் இல்லை.

படிப்பகம்

www.padippakam.com

# ஆதிக்க வெறிக்கு இன்னுமொரு ஆயுதம்!

இப்போதோ, எப்போதோ என்று இயந்திரக் கோளாறு காரணமாக இரண்டு முறை தாமதப்பட்ட ''அக்னி'' ஏவுகணை ஒரு வழியாக மே 22 அன்று விண்ணில் செலுத்தப்பட்டு விட்டது. பல கோடி ரூபாய்களைப் பாழாக்கி பலமுறை தோல்வி கண்ட நிலையில், இப்போது ''அக்னி'' ஏவுகணை வெற்றிகரமாக செலுத்தப்பட்ட மகிழ்ச்சியில் ஆட்சியாளர்களும் அடிவருடி விஞ்ஞானிகளும் குதூகலிக்கிறார்கள். ''ஏவுகணை தொழில் நுட்பத்தில் ஏழு நாடுகள் ஏகபோகமாக உள்ள நிலையில் இப்போது இந்தியா தனது உள்நாட்டு தொழில் நுட்பத்தைக் கொண்டு அவற்றுக்குப் போட்டியாக முன்னேறிவிட்டது; இனி மற்ற நாடுகள் நம்மைத் தாக்குமுன் இரண்டுமுறை யோசிக்க வேண்டியிருக்கும்'' என்று பெருமையில் மார் தட்டுகிறார் ஏவுகணைத் திட்ட தலைமை விஞ்ஞானி, அப்துல் கலாம்.

மொத்த மக்கட் தொகையில் பாதிக்கும் மேலானோர் வறுமையிலும் பட்டினியிலும் பரிதவிக்கும்போது, 60% மக்கள் எழுத்தறிவில்லாத நிலையில் இருக்கும் போது, நாட்டின் மூன்றில் ஒரு பங்கு கிராமங்கள் குடிநீருக்குக்கூட வழியின்றித் தவிக்கும் போது, 70% பாசன நிலங்கள் நீரின்றிக் காயும்போது ஏறத்தாழ 400கோடி ரூபாயைப் பாழாக்கி ஏவுகணையை வெற்றிகரமாகச் செலுத்தி வறுமையிலும் பெருமை தேடுவதாக ஆட்சியாளர்களும் அடிவருடி விஞ்ஞானிகளும் பூரித்துப் போகின்றனர்.

இன்னும் சாதாரண மக்கள்கூட, ''ஏவுகணையை வெற்றிகரமாகச் செலுத்தியதன் மூலம் இந்தியா வல்லரசு நாடாகிவிட்டது; இனி ஒரு பயல் நம்மிடம் வாலாட்ட மாட்டான்'' என்கிற பாணியில் பெருமைப்படுகின்றனர். தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் அன்னிய ஆக்கிரமிப்பை முறியடிக்கவும் பலமான ராணுவம் கட்டியமைக்கப்பட வேண்டியது அவசியமானதுதான். ஆனால் யுத்தத்தின் வெற்றியைத் தீர்மானிப்பது நவீன ஏவுகணைகளோ அணுகுண்டுகளோ அல்ல. யுத்தத்தை நடத்தும் பேராற்றலின் ஊற்றுமூலம் பொதுமக்கள் மத்தியில்தான் உள்ளது. உண்மையான இரும்புக் கோட்டை மக்கள் தானே தவிர நவீன ஆயுதங்கள் அல்ல. மக்களை வறுமைப் படுகுழியில் தள்ளியும், மக்களை ஐக்கியப்படுத்தாமல் பிளவு படுத்தியும் உள்ள எந்த நாடுகள் போரில் வெற்றி கொள்ளவே முடியாது. இந்த விஞ்ஞான ரீதியான உண்மைகளைக் கூட ஏற்க மறுக்குமளவுக்கு மக்கள் தேசிய வெறி யுத்தவெறிபோதையில் - பிரமையில் மூழ்கடிக்கப்பட்டுள்ளார்கள்.

அந்த தைரியத்தில் ''அக்னி''யை உள்நாட்டுத் தொழில் நுட்பத்துடன் - சுய சார்புடன் தயாரித்ததாக ஆட்சியாளர்களும் அடிவருடி விஞ்ஞானிகளும் கூசாமல் புளுகுகிறார்கள். கழிப்பறைக் காகிதத்துக்குக் கூட அன்னிய தொழில் நுட்பத்தைச் சார்ந்திருக்கும் போது, இன்சாட் செயற்கைக் கோளை அமெரிக்காவில் வடிவமைத்து அதன் விஞ்ஞானிகள் இந்தியாவிலிருந்து கொண்டு இயக்கும்போது, சுயசார்புடன் ''அக்னி''யை ஏவியதாக காதில் பூ சுற்றுகிறார்கள்.

உள்நாட்டு தொழில் நுட்பமானாலும் சரி, வெளிநாட்டு தொழில் நுட்பமானாலும் சரி பாழாவது நமது வரிப்பணம்தான்! உலகின் மிகப் பெரும் வல்லரசுகளான ரஷியாவும் அமெரிக்காவும் கூட பூதாகரமான பொருளாதாரச் சுமையின் காரணமாக ஏவுகணைத் திட்டச் செலவுகளைக் கட்டுப்படுத்தும் போது, வறுமைப் படுகுழியிலுள்ள இந்தியா கோடிக்கணக்கில் செலவிட்டு ஏவுகணையைச் செலுத்துவதென்பது அப்பட்டமான அயோக்கியத்தனம்! தேசத்தின் பாதுகாப்பு நலனைக் காரணம் காட்டி பல கோடி ரூபாய்களைப் பாழாக்கும் இத்திட்டத்திற்கு குறிப்பாக, ஏவுகணைத் தளம் அமைந்துள்ள ஒரிசாவின் சந்திபூர் வட்ட மக்கள் கடுமையாக எதிர்த்துப் போராடி வருகின்றனர்.

ஏவுகணை செலுத்தப்படுமுன் 72 மணி நேர முன்னெச்சரிக்கை கொடுத்து 3.5 கி.மீ. சுற்றளவுக்குட்பட்ட 11 கிராமங்களில் வாழும் 2200 மீனவ விவசாயக் குடும்பங்களை போலீசார் அப்புறப்படுத்த முயற்சித்தனர். ஆனால் சந்திபூர் வட்டார மக்கள் அதற்கு இணங்கவில்லை. 6 அடைக்கல முகாம்களை நிறுவி, அனைவருக்கும் நிவாரணத் தொகை அளிப்பதாகக் கூறினர். இன்னும் வீடியோ காட்சி, விருந்து, குளிர்பானங்கள் ஏற்பாடு செய்து தருவதாக ஆசைகாட்டி அழைத்தும்கூட விவசாயிகள் மசியவில்லை. வலுக்கட்டாயமாக வெளியேற்ற முயற்சித்த போலீசாருக்குப் போக்கு காட்டிவிட்டு, ஏவுகணைத் தளமருகே திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தி தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

சந்திபூர் ஏவுகணைத்தளம் அப்பகுதி வாழ் மக்களுக்கு அபாயகரமானது மட்டுமல்ல. அவர்களின் வாழ்வையே சூறையாடக் கூடிய கொலைக் களமாகும். ஏவுகணை செலுத்தப்படும் போது வெளியாகும் நச்சு வாயு பயிர் நிலங்களையும், கால்நடைகளையும், இளங்குழந்தையும் தாக்கி கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் என்று விஞ்ஞானிகளே ஒப்புக் கொள்கின்றனர். மேலும் ஏவுகணை செலுத்தப்படும் ஒவ்வொரு முறையும் அதிர்ச்சியினால் கடலில் மீன்கள் செத்து மிதக்கின்றன. இதன் விளைவாக மீன்பிடித் தொழிலைச் சார்ந்துள்ள 1000க்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் பிழைக்க வழியின்றி பட்டினிக் கொடுமையில் பரிதவிக்கின்றனர்.

ஆனால் சொந்த நாட்டு மக்கள் எக்கேடு கெட்டால் எனக்கென்ன என்ற திமிரோடு, 360 கி.மீ. உயரத்தில் பறந்து 800 - 1200 கி.மீ. தொலைவிலுள்ள இலக்கைத் தாக்கி அழிக்கும் சக்திவாய்ந்த நடுத்தர ரக ஏவுகணையை விண்ணில் செலுத்தி கொக்கரிக்கிறது பாசிச கும்பல். அடுத்தகட்டமாக 2500 கி.மீ. தொலைவிலுள்ள இலக்கைத் தாக்கி அழிக்குமளவுக்கு புதிய ஏவுகணைகளைத் தயாரிக்கவும், இதற்கென ஒருங்கிணைந்த ஏவுகணை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 10 ஆண்டு காலத்திற்கு ரூ.800 கோடியையும் ஒதுக்கியுள்ளது. சுருக்கமாகச் சொன்னால், அணு ஆயுதப் போருக்கான ஏவுகணைத் தளமான சந்திபூர் மாற்றப்பட்டு விட்டது.

சந்திபூர் மக்களுக்கும் மொத்த நாட்டுக்கும் மட்டுமல்ல, தெற்காசிய பிராந்தியத்துக்கும் பெரும் அச்சுறுத்தலாக இருப்பதையே 'அக்னி' ஏவுகணையின் வெற்றி தர்க்க ரீதியாக காட்டுகிறது. ''தேசத்தின் பாதுகாப்பு நலன் கருதியே 'அக்னி' தயாரிக்கப்பட்டுள்ளது; அணு ஆயுதப் போர் நோக்கங்களுக்கு ஏவுகணைகளைப் பயன்படுத்த மாட்டோம்'' என்று நம்பச் சொல்கிறார் பாசிச ராஜீவ். ஆனால் பட்ஜெட்டின் பெரும்பகுதியை ராணுவத்துக்கும், அணு ஆராய்ச்சிக்கும் பாசிச ராஜீவ் கும்பல் ரகசியமாக செலவிடுவதை கூர்ந்து நோக்கும் எவருக்கும் ராஜீவின் உறுதிமொழி வெறும் பசப்பலே என்று தெளிவாகும். எனவேதான் 'அக்னி' ஏவப்பட்டதும் பாகிஸ்தான் தனது அதிர்ச்சியைத் தெரிவித்தது. அமெரிக்கா சந்தேகத்தோடு நோக்குகிறது; ஏவுகணைத் திட்டத்தை விருத்தி செய்யக்கூடாதென மறைமுகமாக நிர்ப்பந்தித்து, புதிதாக வர்த்தகத் தடைகளையும் இந்தியா மீது விதித்துள்ளது.

வரிப்பணத்தை வாரியிறைத்து வாணவேடிக்கை காட்டும் தனது அயோக்கியத்தனத்தை மறைக்க ''தேசத்துக்கு அபாயம் ஏற்பட்டுள்ளது'' என்று பாசிச கும்பல் கூப்பாடு போடுகிறது. உண்மைதான்! தேசத்துக்கு பாசிச ராஜீவ் கும்பலால் பேராபாயம் ஏற்பட்டுள்ளது. அணு ஆயுதப் போர் வெறிபிடித்து இந்த நாட்டு மக்களைப் பட்டினிச் சாவுக்குத் தள்ளுமுன் விழித்துக் கொள்ளுங்கள்! அக்னியோடு பாசிச கும்பலை சேர்த்தனுப்ப அணிதிரளுங்கள்!

○ மணி




படிப்பகம்

www.padippakam.com

## — அமெரிக்காவின் அடாவடித்தனமான புதிய நிர்பந்தங்கள்.

## ''இந்தியனின் கடைசிச் சொட்டு இரத்தத்தையும் உறிஞ்ச உரிமை கொடு!''




இந்தியப் பொருளாதாரத்தின் குரல்வளையைத் தன் இரும்புக் கரங்களால் பிடித்துள்ள அமெரிக்க ஏகாதிபத்தியம் இப்போது நெறிக்கவும் தொடங்கிவிட்டது அண்மையில் அமெரிக்கா வகுத்துக்கொண்டுள்ள ''சூப்பர் 301'' மற்றும் ''ஸ்பெஷல் 301'' வர்த்தகச் சட்ட விதிகளின்படி, இந்தியா முறையற்ற வர்த்தகம் செய்து அமெரிக்காவின் தொழில் முதலீட்டுக்குத் தடைகளை ஏற்படுத்தியுள்ளதாக குற்றம்சாட்டுகிறது. இந்தியா மட்டுமின்றி லத்தீன் அமெரிக்க ஏழை நாடான பிரேசில் மீதும், பொருளாதார ரீதியில் தமக்குப் போட்டியாக உள்ள ஜப்பான் மீதும் இவ்வாறு குற்றம் சாட்டி கருப்புப் பட்டியலில் சேர்த்துள்ளது.

''அடுத்த 18 மாதங்களுக்குள் பரஸ்பர பேச்சுவார்த்தைகள் மூலம் வர்த்தகத் தடைகளை நீக்க வேண்டும்; இல்லையேல் அமெரிக்காவுக்கு இந்நாடுகள் ஏற்றுமதி செய்யும் பொருட்கள் மீது 100%க்கும் மேலாக சுங்கத் தீர்வை விதிக்கப்படும். இந்நாடுகள் வர்த்தகத் தடைகளை நீக்காமல் தொடருமானால் சட்டப்படி உரிய தண்டனையை அனுபவிக்க நேரிடும்'' என்று மிரட்டுகிறது அமெரிக்க ஏகாதிபத்தியம்.

ஏகாதிபத்தியங்களின் கட்டுப்பாடற்ற கொள்கைக்கு பாசிச ராஜீவ் கதவை அகலத் திறந்து விட்டுள்ள நிலையில், 1987ஐ விட 1988ல் இந்தியாவில் அமெரிக்க முதலீடு 100 கோடிக்கு அதிகரித்துள்ள நிலையில், இந்தியாவுக்கான அமெரிக்க ஏற்றுமதி 70% உயர்ந்துள்ள நிலையில் அப்படி என்னதான் தடைகளை இந்தியா ஏற்படுத்தியுள்ளது?

''அன்னிய முதலீட்டாளர்கள்தாம் இந்தியாவில் உற்பத்தி செய்யும் பொருட்களில் ஒரு பகுதியை ஏற்றுமதி செய்ய சில தடைகள் உள்ளன; இந்தியாவில் கிடைக்கும் கச்சாப் பொருட்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்ய அன்னிய முதலீட்டாளர்களுக்கு சில தடைகள் உள்ளன. இந்தியாவின் உள்நாட்டுத் திட்டங்களுக்கு ஏற்ப முதலீடு செய்யுமாறு இந்தியா நிர்பந்திக்கிறது. இந்தியாவின் சட்டதிட்டங்கள் அன்னிய முதலீட்டைக் கட்டுப்படுத்துவதாக உள்ளது. அன்னிய இன்சூரன்ஸ், வங்கி நிறுவனங்களுக்கு சந்தையே இல்லாதபடி முற்றாக கதவடைப்பு கொள்கையை இந்தியா பின்பற்றுகிறது. எல்.ஐ.சி, ஜெனரல் இன்சூரன்ஸ் ஆகிய அரசுத்துறை நிறுவனங்களே ஏகபோகமாக இருந்து சந்தையைக் கட்டுப்படுத்துகின்றன. இதனால் அன்னிய வங்கி, இன்சூரன்சு நிறுவனங்கள் தமது தொழிலைச் செய்ய முடிவதில்லை'' என்று குற்றச் சாட்டுகளை அடுக்குகிறது, அமெரிக்கா.

''அமெரிக்க வங்கிகள் மறு இன்சூரன்சு செய்யும் தொழிலில் இந்தியாவில் நல்ல நிலையில் உள்ளன. கூட்டுப் பங்கு நிறுவனங்களில் இந்தியப் பங்கு 40%க்கு மேல் போகக்கூடாது என்று நிபந்தனை போட்ட அன்னிய கம்பெனிகளுக்கு தாராள வசதி செய்து கொடுத்துள்ளோம். உயர் தொழில் நுட்பத் துறையில் அன்னியக் கம்பெனிகளுக்கு 100% பங்கு உரிமையைக்கூட விட்டுக்கொடுத்துள்ளோம். எனவே இந்தியா தடை விதிப்பதாக குற்றம் சாட்டுவது முறையல்ல. இப்படி நிர்பந்தம் கொடுத்தால் அது பொதுமக்களிடம் எதிர்ப்பைத் தோற்றுவிக்கும்'' என்று இந்திய பெரு முதலாளிகள் சங்கத் தலைவரும், ''இது அநியாயமானது'' என்று மத்திய வர்த்தக அமைச்சர் தினேஷ் சிங்கும் பீதியில் புலம்புகின்றனர்.

இந்த நிர்பந்தங்கள் ஒருபுறமிக்க, மறுபுறம் ஏழை நாடுகளின் தொழில் நுட்பச் செல்வ உரிமையைப் பறித்து மேலாதிக்கம் செலுத்தவும், ''பேடண்ட்'' உரிமை மூலம் தனது வர்த்தகக் கொள்ளையை ஏழை நாடுகள் மீது திணிக்கவும் அமெரிக்கா முயற்சிக்கிறது. பாரீஸ் கருத்தரங்கில் ஏகாதிபத்திய நாடுகள் வகுத்த இந்தக் கொள்கையை ''காட்'' (GATT) என்றழைக்கப்படும் வர்த்தகம் மற்றும் தீர்வைக்கான பொது ஒப்பந்தக் கூட்டமைப்பில் ஏழை நாடுகளை நிர்பந்தமாக ஏற்கச் செய்து அதை சர்வதேச விதியாக்கத் துடிக்கிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்த இந்தியா இப்போது அமெரிக்க நிர்பந்தத்தால் பல்டியடிக்கிறது. இதன் மூலம் நிர்பந்தத்தைத் தவிர்த்துவிடலாம் என நம்புகிறது.

அமெரிக்காவின் இந்த அடாவடித்தனத்தை ஏற்கும்பட்சத்தில், ஒரு பன்னாட்டு பகாசுர கம்பெனி இதன்படி இந்தியாவுக்கு ஒரு பொருளை ஏற்றுமதி செய்யும்போது அந்தப் பொருளை இந்தியா 20 ஆண்டுகளுக்கு எந்த வடிவத்திலும் தயாரிக்கவே முடியாது.


இது தவிர, தான் பெற்றுள்ள பாரம்பரிய ரீதியிலான தொழில் அனுபவங்களைக் கூட இதர நாடுகளுடன் பரிமாறிக் கொள்ளமுடியாது. உதாரணமாக, சித்த, ஆயுர்வேத, யுனானி என்று மருத்துவத் துறையில் குறிப்பிடத்தக்க பாரம்பரிய அனுபவத்தைப் பெற்றுள்ள இந்தியா, அதை இன்னொரு நாட்டுடன் பரிமாறிக் கொள்ளமுடியாது.

அரசியல் - பொருளாதார - இராணுவ ரீதியிலான ஆதிக்கம் போதாதென்று, இப்போது பாரம்பரிய தொழில்நுட்ப செல்வ உரிமையின்மீதும் அமெரிக்கா தனது ஆதிக்கப் பிடியை இறுக்குகிறது. மறுபுறம் கூடுதல் கொள்ளைக்கு, பெயரளவில் உள்ள தடைகளையும் நீக்கி ஒட்டச் சுரண்ட உரிமம் கேட்கிறது. அதாவது ஒட்டுக் கோவணத்தையே உடமையாகக் கொண்ட இந்தியனின் கடைசி சொட்டு இரத்தத்தையும் உறிஞ்ச சட்டபூர்வ உரிமையைக் கோருகிறது. உள் நாட்டில் சந்தையில்லாத நிலையில், ஏகாதிபத்தியங்களையே முற்றாகச் சார்ந்துள்ள இந்திய அடிவருடி அரசு எதிர்க்க எலும்பின்றி எண் சாண் கிடையாக அமெரிக்காவின் காலில் விழுந்து கெஞ்சுகிறது. அதன் முணுமுணுப்புகளும் 'எதிர்ப்பு'களும் நாளிமுத்து பாணி வீர வசனங்களாகவே உள்ளன. சுருக்கமாகச் சொன்னால், சுதந்திரமான கட்டுப்பாடற்ற அமெரிக்க கொள்ளைக்கும் சுரண்டலுக்குமான வேட்டைக்காடாக - இன்னுமொரு தென்கொரியாவாக இந்தியா வேகமாக மாறி வருகிறது.

படிப்பகம்

www.padippakam.com

# துரோக தொழிற்சங்கங்களுக்கு அங்கீகாரம்!




## போராடிய தொழிலாளருக்குப் பட்டை நாமம்!

மலடு தட்டிப் போன தொழிற்சங்க செக்கு மாடுகளை வைத்து தரகு வியாபாரம் நடத்தி வரும் தொழிற்சங்க சுல்தான்கள் தொழிலாளர்களுக்கு இழைத்த துரோகங்கள் ஏராளம்! ஏராளம்!! கடந்த ஆண்டு தீபாவளி சமயத்தில் போக்குவரத்து தொழிலாளர்களுக்கு அவர்கள் இழைத்த துரோகம் யாவரும் அறிந்த உண்மை. இப்போது நெய்வேலியில் ஊதிய மாற்று ஒப்பந்தத்திற்காக நடந்த தொழிலாளர் போராட்டத்தின் போது இவர்கள் தமது சுயரூபத்தை மிகத் தெளிவாகவே காட்டி விட்டார்கள். இத்துரோக சங்கங்கள் மீது தொழிலாளர்கள் வைத்துள்ள அரைகுறை நம்பிக்கையும் அற்றுப் போகுமளவுக்கு தொழிற்சங்க சுல்தான்களின் துரோகத்தனம் கொடிகட்டிப் பறக்கிறது.

ஆசியாவிலேயே மிகப் பெரிய இரண்டாவது அனல் மின்நிலையம் அமைந்துள்ள நெய்வேலியில் பேச்சு வார்த்தைக் குழு என்ற பெயரில் நிர்வாகத்தின் நிரந்தர ஜால்ராக்களான தொ.மு.ச, அ.தொ.மு.ச; பரம்பரைக் கருங்காலிகளான ஐ.என்.டி.யு.சி, டி.என்.டி.யு.சி ஆகிய சங்கங்களும், தொ.மு.ச.வின் தொங்குசதையான பணியாளர் சங்கம் என்ற கும்பலும் தொழிலாளி வர்க்கத்துக்கு இழைக்கும் துரோகங்களை எழுதி மாளாது. இவை தவிர, நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்படாத, ஆனால் தொழிலாளர் மத்தியில் ஓரளவு செல்வாக்குள்ள போலிக் கம்யூனிஸ்ட் கட்சியின் சி.ஐ.டி.யு மற்றும் ஹெச்.எம்.எஸ் ஆகிய சங்கங்கள் அவ்வப்போது கோரிக்கைகளை உரத்த குரலில் கூவுவதும். மகஜர் கொடுத்துவிட்டு முற்போக்கு நாடகமாடுவதும் அடிக்கடி நடப்பனவாகும்.

கடந்த ஏப்ரல் மாதத்தில், ஊதிய மாற்று ஒப்பந்தத்தை உடனடியாக முடிக்கக் கோரியும், சங்க அங்கீகாரம் உள்ளிட்ட 21 கோரிக்கைகளை வலியுறுத்தியும் இவ்விரு சங்கங்களும் பல கட்ட இயக்கங்களை நடத்தின. அவற்றின் இறுதிக் கட்டமாக 22.4.89 அன்று முதல் 16 தொழிலாளர்களைக் கொண்ட கால வரையற்ற உண்ணாவிரத்தைத் தொடங்கினர். 25.4.89 அன்று அனைத்து தொழிலகப் பகுதிகளிலும் உணவக மறுப்பும் 26ந் தேதியன்று ஒருநாள் அடையாள வேலை நிறுத்தமும் செய்தனர்.

பல வருடங்களாக எல்லா சங்கங்களாலும் ஏமாற்றப்பட்ட தொழிலாளர்கள், இவர்களாவது ஏதாவது சாதிப்பார்கள் என்ற நம்பிக்கையில் போராடுபவர்களுக்கு சங்க வேறுபாடின்றி கருத்தாலும் கரத்தாலும் பேருதவி புரிந்தனர். தினந்தோறும் தெருமுனைக் கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தப்பட்டு தொழிலாளர்கள் உணர்வு பிழம்பாக உருக்கு உறுதியுடன் நின்றனர். 25ந் தேதியன்று தன்னெழுச்சியாக அனைத்து தொழிலகப் பகுதிகளிலும் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தனர். சட்ட பூர்வமான சடங்குத்தனமான போராட்ட முறைகளுக்கு அப்பாற்பட்டு தொழிலாளர்கள் உணர்வு பூர்வமாக உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்ததால் மின்சார உற்பத்தி கணிசமான அளவு குறைந்து நிர்வாகம் பீதியடைந்தது. போராடிய தொழிலாளர்களைக் குதற நிர்வாகமும் அரசும் தருணம் பார்த்துக் கொண்டிருந்தது.

அன்று இரண்டாவது ஷிப்ட் முடிந்தபின் உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக நடத்திய தொழிலாளர்கள் அனைவரும் ஆலை வாயிலில் திரண்டு கோஷமிட்டுக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த தென்னாற்காடு மாவட்ட போலீஸ் துறை கண்காணிப்பாளர் கணேசன் தலைமையிலான போலீசு கும்பல் தொழிலாளர்கள் மீது எச்சரிக்கையற்ற காட்டுமிராண்டித்தனமான தாக்குதலைத் தொடுத்தது. தொழிலாளர்களின் சைக்கிள், மொபெட், வாட்ச் முதலானவற்றை அடித்து நொறுக்கி கோரத் தாண்டவமாடியது. இந்த வெறித் தாக்குதல் அனைத்து தொழிலகப் பகுதிகளிலும் திட்டமிட்டு நடததப்பட்டது. இதைத் தொடர்ந்து தமிழக முதல்வரின் வேண்டுகோளுக்கிணங்க உண்ணாவிரதம் நிறுத்தப்பட்டு அடையாள வேலை நிறுத்தத்துடன் போராட்டம் நிறுத்தப்படுவதாக இவ்விரு சங்கங்களும் அறிவித்தன.

இந்நிலையில் கருங்காலி சங்கங்களைக் கொண்ட கூட்டுக் கவுன்சிலுடன் பேசுவது போலவே சி.ஐ.டி.யு, ஹெச்.எம்.எஸ் சங்கங்களுடனும் தனித் தனியாக பேசுவதாக நிர்வாகம் வாக்களித்தது. ஆனால் பேச்சு வார்த்தையை நடத்தாமல் இழுத்தடித்து வந்தது. அதனால் நம்பிக்கை இழந்த இவ்விரு சங்கங்களின் பிரதிநிதிகளும் முதல்வரை நேரில் சந்தித்து இது பற்றி பேசுவதற்காக சென்னை சென்றனர். இதே நேரத்தில் மே 11 அன்று நிர்வாகமும் கூட்டுக் கவுன்சிலும் வாக்குறுதியை மீறி, ஒப்பந்தத்தை முடித்துவிட சென்னையில் தனியே பேச்சு வார்த்தையைத் தொடங்கினர்.

இதையறிந்த இரு சங்கங்களின் பிரதிநிதிகளும் சென்னையிலிருந்து உடனடியாகத் திரும்பி வந்து மீண்டும் உள்ளிருப்பு வேலை நிருத்தத்தை 12.5.89 மதியம் முதல் தொடங்கினர். நிர்வாகத்தின் அச்சுறுத்தலுக்கு அடிபணியாமல் 14ந் தேதி வரை தொழிலாளர்கள் உறுதியாகப் போராடினர்.

இதற்கிடையில் நிர்வாகத்திடம் ஓர் அவசர அழைப்பு வந்து அதன் பேரில் இவ்விரு சங்கங்களின் பிரதிநிதிகள் மிண்டும் சென்னைக்கு அழைக்கப்பட்டனர். சென்னையில் சி.ஐ.டி.யு, ஹெச்.எம்.எஸ் சங்கங்க



படிப்பகம்

www.padippakam.com

ளுக்கு எழுத்து மூலம் சங்க அங்கீகாரம் அளித்து பேச்சு வார்த்தைக்கு குழுவில் இவர்களையும் இணைத்துக் கொண்டது, நிர்வாகம். அதற்கு விலையாக, ஐந்து சங்கங்களால் உருவாக்கப்பட்ட துரோக ஒப்பந்த நகலில் கையெழுத்திடவும், உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தைக் கைவிடவும் கோரியது.

1980-ம் ஆண்டு பேச்சு வார்த்தைக் குழுவிலிருந்து வெளியேற்றப்பட்டு கடந்த 9 ஆண்டுகளாக வனவாசம் அனுபவித்த இவ்விரு சங்கங்களும் இழந்த சொர்க்கத்தை மீட்க தொழிலாளர்களின் உறுதி மிக்க போராட்டத்தை எவ்வித நிபந்தனையுமின்றி கைவிட்டன. மற்ற துரோக சங்கங்கள் ஏற்றுக் கொண்ட அதே ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு விட்டு, நொண்டிச் சமாதானமாக 25 கோரிக்கைகளை பிற்சேர்க்கையாக வைத்து, மூன்று மாதங்களுக்குள் பேசி முடித்து விடலாமென்ற கதையோடு போராட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளன. சங்க வேறுபாடு பாராமல் ஒன்றிணைந்து போராடிய தொழிலாளர்களுக்கு பட்டை நாமம் போட்டுவிட்டு, தங்களுக்கு அங்கீகாரம் கிடைத்தவுடன் போராட்டத்தைக் கைவிட்டு துரோகமிழைத்தது தான் இப்'புரட்சி' சங்கங்களின் சாதனை! இந்த லட்சணத்தில் இப்போது போடப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் கூட எங்களால்தான் இவ்வளவு சலுகைகள் கிடைத்தன என்று வெட்கமில்லாமல் புளுகிக் கொண்டு சங்கத்திற்கு உறுப்பினர் - சந்தா சேர்க்க நாயாய் அலைகின்றன, இச்சங்கங்கள்.

★ சில மாதங்களுக்கு முன் வீட்டு வசதி கோரி நகர நிர்வாக அலுவலகம் முன்பு இளந்தொழிலாளர்கள் குடும்பத்தினருடன் நடத்திய ''சாலை சமையல்'' போராட்டமும் இதர போராட்டங்களும் இச்சங்கத் தலைமைகளால் நட்டாற்றில் விடப்பட்டுள்ளன. காலி வீடுகளில் குடியமர்த்தல் முதலான சாதாரண கோரிக்கைகள் கூட சாமர்த்தியமாக கைவிடப்பட்டுள்ளன.

★ வன்னியர் போராட்டத்தின் போது அதில் சம்பந்தப்பட்டதாக காரணம் கூறி சி.ஐ.டி.யு, ஹெச்.எம்.எஸ் சங்கங்களைச் சேர்ந்த 48 தொழிலாளர்களை அரசு கைது செய்து பொய் வழக்கு போட்டது. அதைத் தொடர்ந்து நிர்வாகம் அவர்களை தற்காலிக வேலை நீக்கம் செய்தது. இதற்கெதிராக தொழிலாளர்கள் மத்தியில் பிரச்சாரம் கூட செய்யாத இச்சங்கங்கள், இப்போதைய பேச்சு வார்த்தையில் இப்பிரச்சினையை அறவே புறக்கணித்து விட்டன.

★ நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை என்றிருக்கும் ஊதிய மாற்று ஒப்பந்தத்தின் கால அளவை ஐந்தேகால் வருடங்களுக்கு நீட்டிக்க இச்சங்கங்களும் ஒப்புக் கொண்டுள்ளன.

★ பொதுத்துறை நிறுவனங்களின் கட்டுப்பாட்டுக்குழு (Bureau of Public Enterprises)வின் சர்வாதிகார நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு இப்புதிய ஊதிய மாற்ற ஒப்பந்தத்தில் இச்சங்கங்கள் கையெழுத்திட்டுள்ளன. இந்தக் குழுவின் நிபந்தனையின் படி எந்த ஒரு நிறுவனத்தின் ஊதிய மாற்று ஒப்பந்தத்திலும் அவர்கள் ஏற்கனவே பெற்று வரும் ஊதியத்தை விட 15%க்கு அதிகமான ஊதிய உயர்வு இருக்கக் கூடாது. இதன் விளைவாக வீட்டு வசதிப்படி, பிராவிடண்ட் நிதி போன்றவை தொழிலாளர்களுக்குக் கிட்டவில்லை.

★ எல்லாவற்றுக்கும் மேலாக, ஊழியர்கள் - தொழிலாளர்களின் சம்பள விகிதங்களைச் சமப்படுத்துதல், வீட்டுவசதி, நிரந்தர பணிகளில் காண்ட்ராக்ட் முறைகளை ஒழித்தல், பதவி உயர்வு, விடுப்பு வசதி முதலான சாதாரண கோரிக்கைகள் கூட குழிதோண்டிப் புதைத்துவிட்டு இச்சங்கங்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

— சுருக்கமாகச் சொன்னால், கேவலம் நிர்வாகத்திடம் அங்கீகாரம் பெறுவதற்காக தொழிலாளர்களை இச்சங்கங்கள் பகடைக் காய்களாகப் பயன்படுத்தியுள்ளன. தமது பிழைப்புவாத தரகுத் தொழிலை நிர்வாகத்தின் அங்கீகாரத்தோடு நடத்துவதற்காக தொழிலாளர்களின் உறுதிமிக்க போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி விட்டன.

இன்னமும் இச்சங்கங்கள் மீது நம்பிக்கை வைத்தால் அது தொழிலாளி வர்க்கம் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வதாகும். துரோக தொழிற்சங்க சுல்தான்களின் கொட்டத்தை இது மேலும் அதிகரிக்கவே செய்யும். எனவே புரட்சிகர, வர்க்க உணர்வுடைய தொழிற்சங்கங்களைக் கட்டியமைத்துப் போராடுவதே தொழிலாளர்கள் முன்னுள்ள இன்றைய அவசர அவசியக் கடமையாகும். இத்தகைய புரட்சிகர சங்கங்கள் மட்டுமே தொழிலாளர்களின் உரிமைக்காகவும், நிர்வாகத்தின் அடக்குமுறைக் கெதிராகவும் சமரசத்திற்கிடமின்றி உறுதியாக நிற்கும்; தொழிற்சங்க சுல்தான்களின் பிழைப்புவாத துரோகத்தனத்திற்கும் கொட்டத்திற்கும் முடிவு கட்டும்.

தகவல்:
வாசகர் வட்டம்,
நெய்வேலி - வடலூர்.

## புரட்சிகர ஏடு புதிய ஜனநாயகத்தை விளம்பரப்படுத்தி பிரச்சார இயக்கம்!

புரட்சிகர அரசியல் ஏடான ''புதிய ஜனநாயகம்'' பத்திரிகையை மக்கள் மத்தியில் பரவலாக விளம்பரம் செய்யும் நோக்கத்துடனும், பத்திரிகைக்கு வளர்ச்சி நிதி திரட்டும் பொருட்டும் மே 19, 20, 21 ஆகிய மூன்று நாட்களில் நாங்கள் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டோம். 19ம் தேதி காலையில் புறப்பட்ட எமது சைக்கிள் பிரச்சாரக் குழு 20க்கும் மேற்பட்ட கிராமங்களிலும் அதற்கு இடைப்பட்ட வாய்ப்புள்ள கிராமங்களிலும் சிறப்பான முறையில் பிரச்சாரத்தை எடுத்துச் சென்றது. பிரச்சாரத்தில் ''புதிய ஜனநாயகம்'' இதழையும், மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் கொள்கைகளையும் விளக்கி தோழர்கள் உரையாற்றினர்.

பிரச்சார இயக்கத்தின்போது ஓட்டுக் கட்சிகள், போலீஸ் மற்றும் போலிக் கம்யூனிஸ்டுகளின் இடையூறுகள் இருந்தாலும் பெரும்பான்மையான இடங்களில் மக்கள் கூடியிருந்து ஆதரவளித்து தோழர்களை உற்சாகப்படுத்தினர். பிரச்சாரத்தில் 15 வயது இளந்தோழர் ஒருவர் ஊக்கமுடன் பங்கேற்றதும், பறை இசைத்து ஒத்துழைத்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

பாக்கம் கூட்டுரோடு பிரச்சாரத்தின் போது, போலிக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஒரு இளைஞர் எல்லோருக்கும் தேநீர் வாங்கித் தந்தார். ம.க.இ.க. செயலர் கலாநிதி தமது உரையில் போலிக் கம்யூனிஸ்டுகளை அம்பலப்படுத்தியதும் ஓடிவந்து சைக்கிளில் கட்டப்பட்டிருந்த செங்கொடிகளைத் திருப்பித்திருப்பி பார்த்தார். ''நீங்கள் ஜனநாயக வாலிபர் சங்கம் என்றல்லவா நினைத்தேன்!'' என்று கூறி ஏமாற்றம் அடைந்தார். இந்த இளைஞர்களோ புரட்சியை ஆர்வத்துடன் நேசிக்கிறார்கள். ஆனால் இவர்களின் தலைமையோ நாற்காலியை நேசித்து ஓட்டுக்கும் கூட்டுக்கும் அலைகிறது!

நல்லாத்தூர் கிராமத்தில் தோழர்கள் குடிநீர் கேட்டபோது, இப்பகுதியில் மின்வெட்டு காரணமாக குடிநீர் பற்றாக்குறை நிலவுவதைக் கூறி, குடிக்கக்கூட தண்ணீர் கொடுத்து உதவ இயலாத தங்களின் நிலைக்காக பெண்கள் மிகவும் மனம் வருந்தினார்கள். ஆனால் இதற்காக வெட்கித்தலை குனிய வேண்டிய ஆட்சியாளர்களோ சொரணையற்று ''100 நாள் சாதனை விழா'' நடத்திக் குதூகலிக்கிறார்கள்!

சில வேளைகள் பட்டினி கிடக்க நேரிட்டாலும், கடும் வெய்யில் வருத்தினாலும் இடையிடையே பல பகுதி மக்கள் உணவு, தேநீர், மோர் போன்றவற்றை அளித்து ஆதரித்து எமது பிரச்சாரத்தை இறுதிவரை முன்னெடுத்துச் செல்ல உதவினர். நாங்கள் பிரச்சாரம் செய்த இப்பகுதியில் ஓட்டுக் கட்சிகள் மீது மக்களுக்கு பிரமைகள் இருந்தபோதிலும், கம்யூனிஸ்டுகள்தான் சரியானவர்கள் என்ற நம்பிக்கையைக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் போலிகளுக்கும் புரட்சியாளர்களுக்குமான வேறுபாட்டை அறியாதவர்களாக இருக்கிறார்கள். அதே வேளையில் பல இளைஞர்கள் போலிக் கம்யூனிஸ்டுகள் மீது வெறுப்புணர்ச்சி பாராட்டுவதையும் காண முடிந்தது. தொடர்ச்சியான போராட்டமும், கடுமையான உழைப்பும் இப்பகுதியில் புரட்சியாளர்களுக்குரிய ஒரு சவாலாக உள்ளது. புதிய ஜனநாயக அரசியலையும் அமைப்பையும் முன்னெடுத்துச் செல்ல புரட்சிகர சக்திகளின் முன் உள்ள இம்மாபெரும் கடமைதனை இப்பிரச்சார இயக்கம் எமக்கு உணர்த்தியது.

தகவல்: வாசகர் வட்டம்,
நெய்வேலி - வடலூர்.

படிப்பகம்

www.padippakam.com



# சியாசென் எல்லைத் தகராறு: முடிவுக்கு வராத ஒரு யுத்தத்தின் வரலாறு

இந்திய - சீன எல்லைத் தகராறைப் போலவே நீண்ட காலமாக தீர்க்கப்படாத பிரச்சினையாக இருப்பது பாகிஸ்தான் எல்லையிலுள்ள சியாசென் பனிமலைப் பிரச்சினையாகும். நாளொன்றுக்கு 2 கோடி ரூபாய் செலவிட்டும் ஆண்டொன்றுக்கு 400 ராணுவ வீரர்கள் இடிப்புடனும் சியாசென் பிராந்தியத்தை தமக்கே உரிமை கோரி இரு நாடுகளும் யுத்தத்தைத் தொடர்கின்றன. இந்திய - பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு இரு நாட்டு அரசியலிலும் எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும் கூட, மனித நடமாட்டமேயில்லாத இப்பனிமலையில் முடிவேயில்லாமல் மோதல்கள் தொடர்கின்றன. ஏறத்தாழ ஓராண்டு காலமாக நிசப்தமாக இருந்த சியாசென் பனிமலையில் கடந்த ஏப்ரல் மாத மத்தியிலிருந்து மே முதல் வாரம் வரை மீண்டும் விட்டுவிட்டு மோதல்கள் நடந்துள்ளன. இதைத் தொடர்ந்து மீண்டும் போர் வெறிச் கூச்சலும், சமரசப் பேச்சு வார்த்தை நாடகமும் முன்னணிக்கு வந்துள்ளன.

இந்தியாவின் வடமேற்கு எல்லையில் உள்ள சியாசென் பிராந்தியம் ஆசியாவில் உள்ள மிகப் பெரிய பரந்த பனிக்கட்டி பிரதேசம். 50 மைல் நீளமும் 4 மைல் அகலமும் கொண்ட இப்பகுதியில் தான் உலகின் மிக உயரமான இரண்டாவது பனிமலைச் சிகரமான கே2 (K2) அமைந்துள்ளது. கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ 21,000 அடி உயரத்திலுள்ள, புல் பூண்டு கூட முளைக்காத இப்பனிமலை மிகவும் ஆபத்தான போர்க்களமாகும். கோடை காலத்திலேயே இங்கு உறைபனி நிலையைவிடக் குறைந்த தட்ப வெப்ப நிலையாக அதாவது - 30 டிகிரியாக இருக்கும். குளிர்காலத்தில் - 50லிருந்து 55 டிகிரியாக இருக்கும். பனிப்புயல் அடிக்கடி வீசுவதும் அதனால் இராணுவச் சாவடிகள் சிதறி சிப்பாய்கள் குளிரில் விறைத்து மாண்டு போவதும் இங்கு அடிக்கடி நடக்கும் விபத்துக்கள். போரில் மாண்டதைவிட கடுங்குளிர் தாளாமல் நோய் வாய்ப்பட்டு இறந்தவர்களே அதிகம். பனிப்பாறைகள் அடிக்கடி நொறுங்கிச் சிதைவதும், திடீரென நீர் தாரைகள் உருவாவதும் காரணமாக ராணுவத்தினர் சில நூறு அடிகள் முன்னேறுவதற்குக் கூட 2, 3 நாட்களாகும். இந்திய - பாகிஸ்தான் ராணுவ வீரர்கள் தமக்குள்ளும் இயற்கையோடும் ஜீவ மரணப் போராட்டம் நடத்தும் பயங்கரமான இப்பனிமலைப் பிரதேசம் உண்மையில் யாருக்குத்தான் சொந்தம்?

1947-48 இந்திய - பாக். கோரைத் தொடர்ந்து ஐ.நா. சமரசக்குழு 1949ல் கராச்சியில் கூடி இரு நாடுகளுக்குமான போர் நிறுத்த எல்லைக் கோட்டைத் தீர்மானித்தது. இந்தக் கோடு இந்தியா வசமுள்ள காஷ்மீர் மாநிலத்தின் வடமேற்கே உள்ள சாம்ப் என்னுமிடத்திலிருந்து நுர்பா ஆற்றின் வடக்கே என்.ஜே. 9842 என்றழைக்கப்படும் முனை வரை செல்கிறது. அதாவது இந்திய எல்லையின் கடைகோடி சிற்றூரான கார்கிலுக்கு வடக்கே தாங் அருகிலுள்ள பகுதிவரை செல்கிறது. ஆனால் என்.ஜே. 9482 முனைக்கு அப்பால் வடக்கு நோக்கி இப்பனிமலை பிராந்தியத்தின் ஊடே எல்லைக் கோடு செல்வதாக மேலோட்டமாக குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பகுதி அவ்வளவு எளிதில் நெருங்க முடியாத நிலையில் இருப்பதாலும், திடீர் திடீரென பனிக்கட்டிகள் வெடித்து புதிய நீரோடைகள் உருவாவதாலும் எல்லையைத் தெளிவாக வரையறுக்க இயலவில்லை. ஐ.நா. சமரசக் குழுவினர் கூட இப்பகுதியில் எல்லையை வரையறுக்கவும் விரும்பவில்லை.

பின்னர் 1972ல் இந்திய - பாகிஸ்தான் அரசுகள் வகுத்த சிம்லா ஒப்பந்தத்திலும் இப்பகுதியில் எல்லை கோடு கறாராக வரையறுக்கப் படவில்லை. சிம்லா ஒப்பந்தம் போர் நிறுத்த எல்லைக் கோட்டை உண்மையான கட்டுப்பாட்டு எல்லைக் கோடாக ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால் என்.ஜே.9482 முனைக்கு அப்பால் எது எல்லை என்பதைத் தீர்மானிக்கவில்லை. இந்த முனைக்கு கிழக்குப் பகுதியிலுள்ள பனிமலையின் ஊடே வடக்கு நோக்கி எல்லைக் கோடு செல்வதாகக் கூறுகிறதே தவிர, அது சியாசென் பனிமலை என்று கூட தெளிவாகக் குறிப்பிடவில்லை.

கறாராக எல்லை வரையறுக்கப்படாத இப்பனிமலைப் பிராந்தியத்தைத் தான் உரிமை கோரி இரு நாடுகளும் போரிட்டு வருகின்றன. ''இந்தப் பிராந்தியம் இந்தியப் பாதுகாப்புக்கே அச்சுறுத்தலாக உள்ள யுத்த தந்திர ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பகுதி. ஆக்கிரமிப்பு வெறிபிடித்த பாகிஸ்தான், எல்லைக் கோட்டை வடகிழக்காக வளைத்து தாங்கிலிருந்து காரகோரம் கணவாய் வரை உள்ள பகுதியை தன்னுடையது என்று அடாவடித்தனம் செய்கிறது. இந்தப் பகுதி பாக். வசமானால் நுப்ரா பள்ளத்தாக்கிலிருந்து லே நகருக்குச் செல்லும் பிரதான சாலை வழி அடைபட்டுப் போகும். இதன் மூலம் பாகிஸ்தான் எளிதில் காஷ்மீர் மாநிலத்தைக் கைப்பற்றிவிடும். பாகிஸ்தான் திட்டத்தைத் தவிடு பொடியாக்கவும், காஷ்மீர் மாநிலத்தைப் பறிகொடுத்து விடாமல் பாதுகாக்கவும் என்ன விலை கொடுத்தேனும் நாம் போராட வேண்டும்'' என்று வாதிடுகிறது இந்தியா.

''பாரம்பரிய உரிமைப்படி பார்த்தால் சியாசென் பிராந்தியம் பாகிஸ்தானுக்குத் தான் சொந்தமானது. இப்பகுதியிலுள்ள கே2 சிகரத்திற்கும் இதர சிகரங்களுக்கும் எமது நாட்டு வழியாகவே மலையேறும் குழுக்கள் '50லிருந்து சென்றுள்ளன'' என்று வாதிடுகிறது பாகிஸ்தான். மேலும் சீன உதவியுடன் போடப்பட்ட காரகோரம் நெடுஞ்சாலை 1978ல் செயல்படத் தொடங்கியதும் சியாசென் பிராந்தியம் யுத்த தந்திர ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுவதால் இப்பகுதியைத் தக்க வைத்துள்ள பாகிஸ்தான் தொடர்ந்து முயற்சித்து வருகிறது.

''சீனாவின் சின்கியாங் பிரதேசத்தையும் பாகிஸ்தானின் காஷ்மீர் பிராந்தியத்தையும் இணைக்கும் காரகோரம் நெடுஞ்சாலைக்கும் சியாசென் பனிமலைக்கும் சம்பந்தமேயில்லை. இந் நெடுஞ்சாலை சியாசென் பிராந்தியத்திலிருந்து 140 மைல் தொலைவில் உள்ளது. ஆனால் கற்பனையான பீதியில் இப்பகுதியைக் கைப்பற்றிக் கொள்ள யுத்த தந்திர, பாதுகாப்பு காரணங்களைத் தேடுகிறது, பாகிஸ்தான்'' என்று குற்றம் சாட்டுகிறது இந்தியா.

''பிரிவினையின் போது காஷ்மீர் சமஸ்தானத்தை ஆண்ட அரசர் அதை இந்தியாவுடன்தான் இணைத்தார். ஆனால் போருக்குப்பின் அது கூறுபோடப்பட்டுவிட்டது. எனவே பாரம்பரிய உரிமைப்படி பார்த்தால் இப்பகுதி எமக்குத்தான் சொந்தமானது'' என்று வாதிடுகிறது இந்தியா.

இந்த வாதப் பிரதிவாதங்கள் நடந்து கொண்டிருக்கும் போதே இரு நாடுகளும் போர்வெறி பிடித்து துருப்புக்களை சியாசென் பிராந்தியத்தில் கொண்டு போய் குவிக்கத் தொடங்கின. முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பதாகக் கூறிக் கொண்டு வான்வழிக் கண்காணிப்பை இந்தியா நடத்தியது. பாகிஸ்தானுக்குப் போட்டியாக இப்

படிப்பகம்

www.padippakam.com

பகுதிக்கு மலையேறும் குழுக்களை அனுப்ப முயற்சித்தது. மலையேறும் குழுக்களுக்கு விளம்பரம் கொடுத்து அழைத்தது. ஆனால் மிக ஆபத்தான இப்பயணத்திற்கு யாருமே முன்வரவில்லை. எனவே ஒரு ராணுவ பிரிகேடியர் தலைமையிலான குழுவை அனுப்பி தனக்கும் பாரம்பரிய உரிமை உள்ளதாக பெருமையடித்துக் கொண்டது.

ஆனால் 1984 மார்ச்சில் கே2 சிகரத்திற்கான பயணப்பாதை பகுதியிலுள்ள சியா கணவாயில் ராணுவச் சாவடிகளை பாகிஸ்தான் நிறுவி, இந்தியாவின் நப்பாசையில் மண்ணை அள்ளிப் போட்டது. கே2 சிகரத்தை அடைய சியா கணவாய் தான் சுலபமான ஒரே வழி. அந்த ஒரு வழியும் அடைப்பட்டுப்போன ஆத்திரத்தில் இந்தியா தாக்குதலைத் தொடுத்து போரைத் துவக்கி வைத்தது. 1984 ஏப்ரல் - மே மாதங்களில் உக்கிரமான மோதல் நடந்தது. சியா கணவாய் பகுதியை இந்தியா பாக்.கிடமிருந்து கைப்பற்றிக் கொண்டது. உடனே பாகிஸ்தான் தனது சிறப்பு அதிரடிப் படையைக் கொண்டு லடாக் பிராந்தியத்தில் எல்லையில் பெருந்தாக்குதலை நடத்தி இந்திய இராணுவத்துக்கு பலத்த இழப்புகளை ஏற்படுத்தியது. ஆயினும் மீண்டும் தாக்குதலை நடத்தி இந்தியா சியாசென் பிராந்தியத்தைக் கைப்பற்றியது. இன்று வரை இப்பகுதி இந்தியாவின் பிடியிலேயே உள்ளது. இருப்பினும் பாகிஸ்தான் அவ்வப்போது எதிர்த்தாக்குதல் தொடுப்பதும், இப்பகுதியைத் தக்க வைத்துக் கொள்ள இந்தியா பதிற்தாக்குதல் தொடுப்பதும் தொடர்கிறது.

1985 பிற்பகுதியிலிருந்து '86 முடிய இப்பகுதியில் மோதல் எதுவும் நடக்கவில்லை. பின்னர் 1987 கோடையில் பைலஃபாண்ட் கணவாய் பகுதியில் பாக். துருப்புகள் நடமாடத் தொடங்கியதும் இந்தியா தாக்குதல் தொடுத்தது. இந்த மோதல் தொடர்ந்து மூன்று வாரங்களுக்கு நீடித்தது. பின்னர் மீண்டும் செப்டம்பரில் ஒருவார காலத்துக்கு கடுமையான மோதல் நடந்தது.

இதற்கிடையே 1986ல் ராஜீவ் காந்தியும், முன்னாள் பாக். அதிபர் ஜியாவும் வாஷிங்டனில் அரசு முறை பேச்சு வார்த்தை நடத்தினர். அதைத்தொடர்ந்து இராணுவத் துறை செயலாளர்களும் கூடிப் பேசினர். ஆனால் உருப்படியாக எந்த தீர்வையும் எட்டவில்லை. தற்போது ஏப்ரல் - மே மாத மோதலையடுத்து பெனாசிர் பூட்டோ, சிம்லா ஒப்பந்தத்தின் அடிப்படையில் சியாசென் பிரச்சினையை அமைதியான பேச்சு வார்த்தை மூலம் தீர்க்க முன்வருமாறு இந்தியாவை அழைத்துள்ளார். ''இந்தப் பிராந்தியத்திலிருந்து இந்தியப் படைகள் விலகி, சிம்லா ஒப்பந்தத்துக்கு முந்தைய நிலைக்குத் திரும்ப வேண்டும். இதே போல பாகிஸ்தானும் தனது படைகளை விலக்கிக் கொள்ளும். இதன் மூலம் பரஸ்பரம் நல்லெண்ணம் - நட்புறவை வளர்த்துக் கொண்டு பேச்சு வார்த்தை மூலம் வளர்த்துக் கொண்டு பேச்சு வார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்க்கலாம்'' என்கிறார். ஆனால் இந்தியா இதை ஏற்க மறுக்கிறது. சியாசென் பிராந்தியம் இந்தியாவுக்கே உரிமையானது என்ற நிலையிலிருந்து பேச்சு வார்த்தை நடத்தலாம் என்கிறது.

சுருக்கமாகச் சொன்னால் சமாதான நாடகமாடும் இந்தியாவிடம் பிரச்சினையை நட்பு ரீதியில் பேசித் தீர்க்கும் எண்ணம் அறவே இல்லை. ஒரு சுண்டைக்காய் நாட்டிடம் போய் சமரசம் பேசுவதா என்ற வறட்டு கௌரவம், போர்வெறி, விஸ்தரிப்பு பேராசை முதலானவற்றையே தனது அறிவிக்கப்படாத கொள்கையாக காட்டிக் கொண்டுள்ளது இந்திய அரசு. இன்று நேற்றல்ல; நீண்ட காலமாகவே இந்த அடாவடித்தனத்தைத் தான் இந்தியா பின்பற்றி வந்துள்ளது. 1962ல் சீனாவும் பாகிஸ்தானும் எல்லைப் பிரச்சினையை பரஸ்பரம் பேசித் தீர்த்துக் கொண்டன. பரஸ்பரம் தத்தமது பகுதிகளை மற்றவருக்கு விட்டுக் கொடுத்து பிரச்சினைக்குத் தீர்வு கண்டன. இந்தப் பேச்சு வார்த்தையின் இறுதிச் சுற்றில் இந்தியாவும் கலந்துகொண்டு இந்திய - பாக்., இந்திய - சீன எல்லைப் பிரச்சினை பற்றி விவாதித்தது ஒப்பந்தமும் போட்டது. ஆனால் பேச்சு வார்த்தை முடிந்தவுடனேயே இந்தியா அதைக் காற்றில் பறக்கவிட்டு, சீனாவுடன் போரில் இறங்கியது. அதே போல இந்த ஒப்பந்தம் முடிந்த 12 ஆண்டுகளுக்குப் பிறகு 1984ல் பாகிஸ்தானுடன் மோதி சியாசெனைக் கைப்பற்றிக் கொண்டுள்ளது. சொந்த நாட்டு மக்கள் பட்டினி கிடந்தாலும் பரவாயில்லை என்று கோடிக்கணக்கில் செலவிட்டு இப்பகுதியைத் தக்க வைத்துக் கொள்ள தொடர்ந்து போரிட்டு வருகிறது. இப்போரில் களம் கண்ட இராணுவ வீரர்களுக்கு பரிசும் பதக்கமும் அளித்து கௌரவித்து போர் வெறியையும் தேசிய வெறியையும் ஊட்டி வருகிறது இந்திய அரசு. இதே பாணியில் பாகிஸ்தானும் தமது இராணுவ வீரர்களுக்குப் பரிசளித்து போர் வெறி யூட்டி வருகிறது.

இந்தியா இப்பகுதியில் வெற்றியடைந்ததைப் போலத் தோன்றினாலும் பௌதிக ரீதியில் யாருமே வெற்றியடைய முடியாது. சில நூறு அடிகளைக் கடப்பதே பெரும் இடர்ப்பாடாக இருக்கும்போது இப்பிராந்தியத்தை ஆதிக்கம் செய்வதென்பது அறவே இயலாத செயல். கடந்த ஐந்தாண்டுகளில் அவரவர் கைப்பற்றிய பகுதியிலிருந்து கொஞ்சம்கூட முன்னேறுவதோ விரிவடைவதோ நடைபெறுவதில்லை. இரு தரப்பிலும் புதிய சாவடிகள் அமைப்பதும் எதிரியின் சாவடியை அழிப்பதுமாகவே உள்ளன. மோதல்கள் பெரும்பாலும் கணவாய் பகுதியிலேயே நடக்கின்றன. இராணுவ ரீதியில் பிரச்சினைக்குத் தீர்வு காணவே முடியாது; அரசியல் ரீதியாகத்தான் தீர்வு காண முடியும் என்பதை இருநாட்டு இராணுவ அதிகாரிகளும் ஒப்புக் கொள்கின்றனர்.

ஆனால் இரு நாடுகளின் ஆட்சியாளர்களும் அரசியல் ரீதியில் தீர்வு காண்பதை விடுத்து, தத்தமது உள்நாட்டு நெருக்கடியிலிருந்து தப்பிக்கவும் அன்னிய அபாயமாகக் காட்டி தேசிய வெறியூட்டி திசை திருப்பவும் சியாசெனை விவகாரத்தைப் பகடைக் காயாகப் பயன்படுத்தி வருகின்றனர். இராணுவக் கும்பலின் கைப்பாவையாக உள்ள பெனாசிர் பூட்டோ, உள்நாட்டு நெருக்கடியின் காரணமாக பேச்சு வார்த்தைக்கு முன்வந்த போதிலும், விட்டுக் கொடுக்க மறுத்து அடாவடித்தனம் செய்கிறது இந்தியா. இந்திய ஆளும் வர்க்கங்களின் தேசிய வெறி, போர் வெறி, விஸ்தரிப்புப் பேராசைக் கனவுகள் முறியடிக்கப் படாதவரை உலகின் மிக உயரமான இப்பனிமலைப் பிராந்தியத்தில் மிகுந்த பொருட் செலவில் முடிவேயில்லாமல் இந்தப் போர் தொடரவே செய்யும். அதன் சுமை முழுவதும் வறுமையிலும் பட்டினியிலும் பரிதவிக்கும் இந்திய மக்களின் மீதே சுமத்தப்படும்.

□ பாலன்

## சியாசென்:
## உலகின் மிகஅபாயகரமான போர்க்களம்

சியாசென் பிராந்தியம், அண்டார்டிகாவை அடுத்து உலகின் மிகப்பெரிய உறை பனிக் கட்டிமலைப் பகுதியாகும். இப்பகுதியில் போரிடும் இராணுவ வீரர்களின் பூட்ஸ் போட்ட கால்களில் ஏற்படும் வியர்வைகூட பனிக்கட்டிகளாகிவிடும். சிறிது நேரத்தில் ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியாமல் கால்கள் மரத்துப் போய்விடும். தொடர்ச்சியாக பனியும் கடுங்குளிரும் கால்களைத் தாக்குவதன் விளைவாக இரு நாடுகளையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான இராணுவ வீரர்கள் கால்கள் முடமாகி, கால் மூட்டுக்களை அகற்ற வேண்டிய நிலைக்கு ஆளாயினர்.

கடுங்குளிர் மற்றும் ஆக்ஸிஜன் பற்றாக்குறை காரணமாக இப்பகுதியில் பாதுகாப்பான முகாம்களில் கூட இராணுவ வீரர்கள் நிம்மதியாகத் தூங்க முடியாது. குடிநீர் கிடைக்காது. பசியின்மையால் உடல் எடை குறைந்து விரைவிலேயே நோய்கள் தாக்கும். பனிக்குருடு, நுரையீரலில் நீர் கோர்த்தல், ரத்த சோகை, நாடித்துடிப்பு குறைதல், மஞ்சள் காமாலை முதலான நோய்கள் எளிதில் தொற்றிக் கொள்ளும்.

உலகின் மிகச் சிறந்த விமான ஓட்டிகூட இப்பகுதிக்கு ஹெலிகாப்டரை ஓட்ட முன்வர மாட்டார். அந்த அளவுக்கு அபாயகரமான பகுதி இது. விபத்து நேராமல் எச்சரிக்கையாக இருந்தாலும், கடுங்குளிர் காரணமாக இயந்திரம் பழுதடைந்து பலமுறை ஹெலிகாப்டர்கள் குப்புற விழுந்து பனியில் புதைந்துள்ளன.

இப்பகுதியில் போரிடும் ஒரு ராணுவ வீரருக்கான தனிச்சிறப்பான சீருடையின் விலை மட்டும் ரூ.60,000க்கும் மேலாகும். இரு நாடுகளும் சீருடைக்காக மட்டும் ஆண்டொன்றுக்கு ரூ.6 கோடிக்கு மேல் செலவிடுகின்றன. ஆனால் இப்பகுதியில் திடீர்திடீரென வீசும் பனிப்புயலுக்கு இச்சீருடைகள் தாக்குப் பிடிக்காததால் ஏராளமான இராணுவ வீரர்கள் பலியாகியுள்ளனர்.

இவ்வளவு இழப்புகள், பொருட்செலவுகள் இருந்த போதிலும் உலகின் மிக உயரமான அபாயகரமான சியாசென் பனிமலையில் முடிவுக்கே வராத ஒரு யுத்தத்தை இந்தியாவும் பாகிஸ்தானும் போர் வெறியோடு தொடர்ந்து நடத்துகின்றன.

படிப்பகம்

www.padippakam.com

# நசிந்துவரும் நெசவுத் தொழில் அமெரிக்காவின் நரித்தனம்!

தொடர்ந்து நூல்விலை உயர்வால் கடந்த 3 ஆண்டுகளாக நிரந்தர தேக்கத்துக்குள்ளான நெசவுத் தொழில், தற்போது முற்றிலுமாக மண் மூடும் அபாயத்தில் சிக்கிக் கொண்டுள்ளது. குறிப்பாக, அமெரிக்காவின் சந்தைக்காகவே முழுக்க இயங்கி வந்த கைத்தறித் தொழில், அமெரிக்காவின் அடாவடித்தனமான கைத்தறி துணி பற்றியான புதிய இறக்குமதிக் கொள்கையால், மீள முடியாத நெருக்கடியில் மூச்சுத்திணறுகிறது.


இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் மொத்த கைத்தறித் துணி ஏற்றுமதியில், தமிழகத்தின் பங்கு மட்டும் 80 சதவிகிதம். அமெரிக்காவுக்கு மட்டும் சென்ற ஆண்டு இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட கைத்தறித் துணியின் மதிப்பு 100.35 கோடி ரூபாய். இதில் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்ட துணியின் மதிப்பு மட்டும் 80 கோடி ரூபாய்.

'86 ஆம் ஆண்டு இறுதியில் போடப்பட்ட இந்திய - அமெரிக்க ஜவுளி வர்த்தக ஒப்பந்தந்தத்தின்படி, கைத்தறி துணிகளுக்கு அமெரிக்கா இறக்குமதி வரி விலக்கு அளிப்பது என்று முடிவானது. இந்த ஒப்பந்தம், 1991 ஆம் ஆண்டு டிசம்பர் 31ந் தேதி வரை செல்லுபடியாகக் கூடியது. ஏற்றுமதி செய்யப்படும் கைத்தறி துணிக்கு சான்றிதழ் மற்றும் ஏற்றுமதி அனுமதி வழங்கும் பொறுப்பு இந்திய அரசின் ஜவுளி வர்த்தகத் துறைக் கமிட்டியின் வசம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ், தமிழ்நாட்டின் கரூர், ஈரோடு, மதுரை ஆகிய பகுதிகளிலிருந்து தயாரிக்கப்படும் கண்ணைக் கவரும் வேலைப்பாடு மிக்க போர்வைகள், தரை விரிப்புகள், நுண்ணிழை டவல்கள், தலையணை உறைகள், கைத் துண்டுகள், கணிசமான அளவு ஏற்றுமதி செய்யப்படுகின்றன கைவினைப் பொருட்கள் போன்று முழுக்க முழுக்க பாரம்பரிய உழைப்புத் திறனால் உற்பத்தி செய்யப்படும் இந்த ரக கைத்தறித் துணிகளை, கைத்தறி ரகங்கள் அல்ல என சாதிக்கிறது அமெரிக்கா; அதன் மூலம் இவற்றுக்கு அளிக்கப்பட்டு வந்த வரிவிலக்கையும் திடீரென ரத்துச் செய்துவிட்டது, அமெரிக்கா.

தனது புதிய 'கொள்கை' முடிவுக்கு வேடிக்கையான ஒரு காரணத்தையும் சொல்கிறது, அமெரிக்கா. இவ்வகைகளிலான துணி உற்பத்தியின் கடைசி நிலையின் போது, கால் மிதி தையல் இயந்திரங்களைக் கொண்டு ஓரம் அடிப்பது மற்றும் 'எம்மிங்' செய்வது ஆண்டாண்டு காலமாக நடக்கிறது. உபயோகிப்பின் போது இழைகள் பிரியாமல் இருக்கவும், நீண்ட நாட்கள் உருக்குலையாமல் இருக்கவும் இது அவசியம். வடிகட்டிய முட்டாளுக்குக்கூட இந்த உண்மை புரியும். ஆனால், அமெரிக்க அரசாங்கத்தின் அறிவாளிகளோ இது கைத்தையலாக இல்லாமல் இருப்பதால், ''இயந்திரங்கள் உற்பத்திச் செய்யும் பொருட்கள் அல்லது விசைத்தறி துணிகள்'' என்ற தலைப்பின் கீழ் தான் இதை நாங்கள் சேர்க்க முடியும். எனவே கைத்தறி துணிகளுக்கு அளிக்கப்படும் வரிவிலக்கை இதற்கு வழங்க முடியாது என்று நரித்தனமான விளக்கம் கொடுக்கிறார்கள்.

ஏற்கனவே, போட்டுக் கொண்ட ஒப்பந்தம் அதன் கால அளவு வரை கட்டுப்படுத்தும் என்ற வர்த்தக நேர்மை சிறிதும் இன்றி பழைய ஒப்பந்தக் காலம் முடிவடைவதற்கு முன்னரே, சர்வதேச வர்த்தக நியதிகளையும் மீறி சட்டவிரோதமாக புதுத் திருத்தத்தை நடைமுறைப் படுத்துகின்றனர். கொள்முதல் செய்யப்பட்டு அமெரிக்காவின் துறைமுகங்களுக்கு வந்துவிட்ட துணிகளையும் எடுக்க மறுக்கிறது, அமெரிக்கா. இதனால், 50 கோடி ரூபாய்க்கும் அதிகமான ரகங்கள் பாழாவதுடன், அதற்கு கிடங்கு கட்டணமாக பல லட்ச ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.



அமெரிக்காவின் இந்த கீழ்த்தரமான அடாவடித்தனத்திற்கு எதிராக செயல் பூர்வமான எந்த எதிர்ப்பும் எடுக்க வக்கற்ற பாசிச ராஜீவ் கும்பல், எஜமானனிடம் வேண்டிக் கேட்டுக் கொள்ள ஒரு உயர்மட்ட வர்த்தகக் குழுவை பேச்சு வார்த்தைக்கு அனுப்பியது. கடந்த மார்ச்சு மாதம் 6ம் தேதி இந்திய அரசின் ஜவுளித்துறை செயலர் ஆர்.எல்.மிஸ்ரா தலைமையில் சென்ற இக்குழு, எந்த உறுதியும் இன்றி வெறுங்கையுடன் நாடு திரும்பியது.

பாதிக்கப்பட்ட பல லட்சம் நெசவாளிகளை ஏமாற்ற பாசிச ராஜீவ் மாதிரியே நாடகமாடும் கருணாநிதி, நெசவாளிகளுக்கு ஏற்பட்டிருக்கும் இந்த திடீர் சோகத்தைத் துடைக்க சட்டசபையில் ஒத்திவைப்பு தீர்மானத்தின் மூலம் மத்திய அரசுக்கு ''தீர்வுகாண வேண்டுகோள் விடுத்து ஒதுங்கிக் கொண்டார்.

கரூர், ஈரோடு, மதுரை ஆகிய பகுதிகளில் குறிப்பிட்ட இந்த ரகங்களை மட்டுமே நம்பியிருக்கும் 15000க்கும் மேற்பட்ட கைத்தறிகள் இப்போது முடமாகி கிடப்பதோடு அவற்றை நம்பி வாழும் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட நெசவாளர்களின் அன்றாட வாழ்க்கை காரிருளில் மூழ்கிக் கிடக்கிறது.

நான்காண்டுகளுக்கு முன் பாசிச ராஜீவ் கும்பலால் கொண்டு வரப்பட்ட புதிய ஜவுளிக் கொள்கை பல ஆரவாரமான முழக்கங்களை அவிழ்த்து விட்டது. குறிப்பாக, பஞ்சாலைத் தொழிலைப் பாதுகாப்பது, விசைத்தறி, கைத்தறிக்கு சம நோக்குடன் சலுகைகள் வழங்குவது, இதன் மூலம் தரமான, மலிவான துணிகளுக்கான சந்தையை இந்திய மக்களுக்குத் திறந்து விடுவது என்று சரஞ்சரமாக காதுக்கினிய நேயர் விருப்பம் ஒலி பரப்பப்பட்டது.

வழக்கம் போலவே பாசிச ராஜீவின் புதிய கொள்கைகள், அறிவிப்புக்கு நேரெதிரான விளைவுகளையே ஈன்றெடுக்கும் என்பது, புதிய ஜவுளிக் கொள்கைக்கும் நிதர்சன உண்மையானது. கடந்த 4 ஆண்டுகளில் 141 பஞ்சாலைகள் இழுத்து மூடப்பட்டு விட்டது. உற்பத்தி விளை பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்காமல், பருத்தி விவசாயிகள் திரள் திரளாக தற்கொலைப் பாதையை தேர்ந்தெடுத்துக் கொண்டனர். கட்டுப்படியாகக் கூடிய விலையில் நூல் கிடைக்காததால் விவசாயத்திற்கு அடுத்தபடியான நெசவுத் தொழில் மண் மூடி வருகிறது. கொஞ்சநஞ்ச உற்பத்தியும் ஏகாதிபத்திய சந்தைகளின் தேவைக்காகவே நடைபெறுவதால், அவற்றை மேலும் மேலும் கொள்ளை மலிவுக்கு வாரிச்செல்ல, புதுப் புது நரித்தனமான கொள்கைகளை அவை அரங்கேற்றுகின்றன.

○

படிப்பகம்

www.padippakam.com

## போலிகளின் புதிய 'தோழர்'கள்!?

குழாயடிச் சண்டையின் போது இரகசியங்கள் வெளியே வந்து விழுவதைப் போல, ஓட்டுப் பொறுக்கிகளுக்கு இடையே நடக்கும் மோதல்களில் அவர்களது அசிங்கங்கள் வெளிவந்து விடுகின்றன. 'இடது'கள் ஆளும் மே.வங்கத்தில் மத்திய கல்கத்தாவின் முச்சிபாரா, சீல்டா ஆகிய பகுதிகளில் கடந்த ஏப்ரல் மாதத்தில் ஓட்டுக் கோட்டைகளைக் கைப்பற்ற காங்கிரசாரும் 'மார்க்சிஸ்ட்'டுகளும்மோத லில் இறங்கி இப்பகுதியைப் பீதிக்குள்ளாக்கினர்.

இப்பகுதிகளில் ஓட்டுக் கோட்டைகளாக உள்ளவர்கள் யார் தெரியுமா? விபச்சாரிகள்! இவர்களை வளைத்து போட்டு ஓட்டுக் கோட்டையைக் கைப்பற்றி தக்கவைத்துக் கொள்வதற்காகத் தான் காங்கிரசுக்கு எதிராக 'மார்க்சிஸ்டுகள்' புரட்சிப் போரில் குதித்தனர். மாநிலத்தையே குலுக்கிய இம்மோதல் பற்றிய அறிக்கையை மாநில உள்துறை அமைச்சகம் போலீசிடம் கோரியது. போலீசின் அறிக்கை உண்மையைப் புட்டுவைத்து போலிக் கம்யூனிஸ்டுகளின் யோக்யதையை வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டது.

இப்பகுதியில் 'செல்வி' பாபுசர்க்கார் என்பவள் பெரும் எண்ணிக்கையில் விபச்சாரிகளைத் தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டுள்ள சிவப்புவிளக்கு விடுதியின் தலைவி. இவள் காங்கிரசு கட்சிக்கு முழுக்கு போட்டுவிட்டு 500 விபச்சாரிகளுடன் 'மார்க்சிஸ்ட்' கட்சியில் சேர்ந்துவிட்டாள.

5000க்கும் மேற்பட்ட விபச்சாரிகளைக் கொண்ட முச்சிபாரா பகுதியில் இவளைப் போன்ற பல தலைவிகள் 'மார்க்சிஸ்ட்' கட்சியில் தம்மை இணைத்துக் கொண்டனர். கட்சி மாறியதால் இவர்கள் தமது தொழிலைக் கைவிட்டுவிடவில்லை; மாறாக ஆளுங்கட்சி அந்தஸ்துடன் தொழிலை விருத்தி செய்து கொண்டுள்ளனர். மேலும், விபச்சார தரகர்கள், குண்டர்கள், கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் முதலான 25 பெரும் ரௌடிக் கும்பலைக் கொண்ட இப்பகுதியில், ''பூட்டான்'' என்றரௌடியின் தலைமையில் 7 ரௌடிக் கும்பல்கள் 'மார்க்சிஸ்ட்' கட்சிக்குத் தாவிவிட்டன. இதனால் ஆத்திரமடைந்த காங்கிரசு குண்டர்கள் கடந்த ஏப்ரலில் இப்பகுதியில் தாக்குதல் நடத்த, ஓட்டுக் கோட்டையைத் தக்கவைத்துக் கொள்ள 'மார்க்சிஸ்டு'கள் எதிர்த்தாக்குதல் நடத்த, கைக்குண்டு வீச்சு, கல்வீச்சு என்று இப்பகுதியே யுத்தகளமானது. நிலைமை கட்டு மீறிப் போனதால் போலீசு துப்பாக்கிச் சூடும் நடந்தது. இதைப்பற்றித்தான் போலீசின் அறிக்கையில் விபரமாக தரப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற ஜனநாயகத்தையும் 'இடதுசாரி' ஆட்சியையும் காப்பாற்ற போலிக் கம்யூனிஸ்டுகள் எங்கெல்லாம் போய் ஆதரவு திரட்டுகிறார்கள் பாருங்கள். சிவப்பு விளக்குப் பகுதிகள்கூட போலிக் கம்யூனிஸ்டுகளுக்கு புரட்சிப் பாசறையாகத் தெரிகிறது. விபச்சாரிகளும், ரௌடிகளும் கூட அவர்களுக்குத் 'தோழர்' களாகிவிட்டார்கள்!

போலிக் கம்யூனிஸ்ட் கட்சியிலுள்ள புரட்சிகர அணிகளே, வங்கத்தைப் பாருங்கள்; கழிசடை 'கம்யூனிஸ்டு'களின் யோக்யதையைப் புரிந்து கொள்ளுங்கள்! போலிகளை உதறியெறிந்து விட்டு புரட்சிகர அமைப்புகளில் அணிதிரளுங்கள்!

## கடன்கார நாட்டில் கலகம்

உலகின் மிகப்பெரும் கடன்கார நாடுகளில் முன்னணி வகிக்கும் தென்னமெரிக்க நாடான அர்ஜெண்டினாவில் கடந்த மே மாத இறுதியிலிருந்து உணவுக் கலவரம் வெடித்துப் பரவுகிறது. தலைநகர் போனோஸ் அயர்ஸ் மற்றும் ரொசாரியோ முதலான பெரு நகரங்களில் பட்டினிப் பட்டாளமான உழைக்கும் மக்கள் வீதிகளில் திரண்டு அங்காடிகளைச் சூறையாடினர். கலகத்தை ஒடுக்க போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தியும் கண்ணீர்ப்புகையை ஏவியும்கூட கட்டுப்படுத்த முடியவில்லை. கைக்குழந்தைகளுடன் தாய்மார்களும், இளைஞர்களும், தொழிலாளர்களும் கோடிக்கால் பூதமாக அலைஅலையாக முன்னேறினர். தலைநகரில் வெடித்த இக்கலகம் நாடு முழுவதும் வேகமாகப் பரவியது. அரண்டுபோன ஏகாதிபத்திய அடிவருடி அல்ஃபோன்சின் அரசு அவசரநிலையை அறிவித்தும் ஊரடங்குச் சட்டத்தைப் போட்டும், பத்துக்கும் மேற்பட்டோரைச் சுட்டுக் கொன்றும், நூற்றுக்கணக்கானோரைப் படுகாயப்படுத்தியும், ஆயிரக்கணக்கான கலகக்காரர்களைக் கைது செய்தும் அடக்கிவிடத் துடிக்கிறது.

உணவுக்கலகத்தில் ஈடுபட்ட மக்களைத் துப்பாக்கி முனையில்..



உலக வங்கி, சர்வதேச நிதி நிறுவனத்திடம் (IMF) கணக்கிட முடியாத அளவுக்குக் கடன் வாங்கி நாட்டை முன்னேற்றப் போவதாகப் பிதற்றியது ஆளும் அல்ஃபோன்சின் கும்பல். ஆனால் தேசத்தைத் திவாலாக்கியதோடு அது மக்களுக்குப் பரிசாகத் தந்ததென்னவோ விலையேற்றம், பணவீக்கம், வேலையின்மை, உணவுப் பஞ்சத்தைத்தான்!

இடது தீவிரவாதிகள் இக்கலகத்தைத் தூண்டி நடத்தியதாக ஆளுங்கும்பல் குற்றஞ்சாட்டுகிறது. அது உண்மைதான்; கலகத்திலிருந்துதான் நீதி பிறக்கும்! அண்டை நாடுகளான பெரு,பொலிவியாவைப் போலவே கம்யூனிசப் புரட்சியாளர்களின் தலைமையில் அர்ஜெண்டினாவிலும் புரட்சித்தீ பற்றவைக்கப் பட்டுள்ளது. அது பெருங்காட்டுத் தீயாகப் பற்றிப் படர்ந்து ஆளும் ஏகாதிபத்திய அடிவருடிக் கும்பலைச் சுட்டெரிக்கப் போவது நிச்சயம்!

அதுசரி! அர்ஜெண்டினாவில் கலகம் நடந்தால் நமக்கென்ன என்கிறீர்களா? அர்ஜெண்டினாவுக்கு அடுத்து அதிகமாகக் கடன் வாங்கியுள்ள - வாங்கத் துடிக்கும் நாடு இந்தியாதான்! எனவே அடுத்த கலகம் இந்தியாவில்தான் என்பதில் சந்தேகமில்லை!

படிப்பகம்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ்.மதியழகன, 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015

www.padippakam.com





பணத்தாலான குடை அன்பளிப்ப

## இதுதான் இன்றைய இந்தியா

மந்திரி பிரதானிகளிடம் மனு கொடுக்க காத்துக் கிடக்கும் அப்பாவி தமிழ் மக்களா, நீங்கள்? அப்படியானால் வாசலில் பரதேசிகள் மாதிரி நின்றுகொண்டு மானத்தை வாங்காதீர்கள், மந்திரிக்கு எவ்வளவோ வேலை! அப்படியென்ன மந்திரிக்கு வேலை? ''உங்களுக்கு உழைக்க எங்களுக்கு உத்தரவிடுங்கள்'' என்று காலிடுக்கில் நுழைந்து ஓட்டுக் கேட்டார்களே ஞாபகமிருக்கிறதா? இப்போது யாருக்கு உழைக்க இங்கே காத்துக்கிடக்கிறார்கள்? அதுவும் பட்டியில் அடைத்த நாய்கள் மாதிரி 9 மந்திரிகளும் வேலி ஓரம் நின்று கொண்டிருக்கிறார்களே எதற்கு? பொதுக்கூட்ட மேடையைக் கூட அரண்மனை மாதிரி அலங்கரித்து அமர்ந்து கொண்டிருப்பவர்கள், இங்கே எடுபிடிகள் மாதிரி கால்கடுக்க வெய்யிலில் காத்துக் கொண்டிருக்கிறார்களே ஏன்? இந்திய ஜனாதிபதி வெங்கட்ராமன், 'மற'த் தமிழன் டில்லியிலிருந்து சென்னைக்கு வருகிறாராம்! அவரை வரவேற்கத்தான் ஜவ்வாது மாலையுடன் காத்துக் கிடக்கிறார்கள்! ஒரு மாலையின் விலை மட்டும் 300 ரூபாய்!

இதோ, இவர்தான் கருணாநிதி! 66 ஆம் ஆண்டில் இவர் அடியெடுத்து வைப்பதால் அவருடைய பிறந்தநாளை சிறப்பித்து, கழக உடன்பிறப்புக்கள் தங்கள் தானைத்தலைவரை கோயில் காளை மாதிரி ஜோடித்து அழகு பார்க்கிறார்கள்! சும்மாவா? 13 ஆண்டுகள் வனவாசம் அனுபவிக்கும் போதே வளைவுகள், வாண வெடிச் சரங்கள், ஆளுயர போஸ்டர்கள் பண நோட்டு மாலைகள், பணப்பெட்டி காணிக்கைகள் என்று சொர்க்கத்தையே கொண்டுவந்து தானைத்தலைவனின் காலடியில் வைத்தவர்கள், ஆட்சிக் கட்டிலில் அமர்ந்து கொண்டிருக்கும் போது அவர்கள் கணக்குப்பபடியே பிறந்தநாள் நிதியாக 31 லட்சம் ரூபாய் வசூலித்துவிட்டார்கள்.

மக்கள் தண்ணீர் பஞ்சத்தில் நாவறண்டு ரோடுகளில் குடங்களை வைத்துக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருக்கிறார்கள்! மந்திரி பிரதானிகளும் தானைத்தலைவர்களும் குளுகுளு ஊட்டியில் படகு போட்டியில் மெய் மறந்து போனார்கள். போதாக்குறைக்கு பிறந்தநாள் விழாவுக்கு சுய விளம்பரம் எடுத்து விளம்பர போதையில் கிறங்கிக் கிடக்கிறார்கள்! இந்த மக்கள் விரோதிகளை, சுயவிளம்பர பித்தர்களை இன்னும் எவ்வளவு நாட்கள் தான் நாம் சகித்துக் கொண்டு வாழ்வது?



படிப்பகம்